VISIT…

A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark



வீசுகின்ற காற்றில் விளைகின்ற சுகமே!

1

தந்தையின் அறையிலிருந்து, நித்யானந்தன் வெளியே வருவதற்காகவே காத்திருந்த மாதிரி, அவன் தாய் மதுரம் ஹால் சோஃபாவிலேயே, உட்கார்ந்திருந்தாள்.

பயண விவரங்களையும், ஆங்காங்கே அவன் சந்தித்த முக்கியமான மனிதர்களையும், அவர்களால், நிறுவனத்துக்கு ஏற்படக் கூடிய பலன்களையும் பற்றி அவன் எழுதி வைத்திருந்த குறிப்பைத் தந்தையிடம் கொடுத்து விட்டு, பயணம் பற்றி மேலும் விலாவாரியாக நித்யானந்தன் பேசத் தொடங்கியபோது, 'வேண்டாம்' என்பது போல லேசாகத் தலையசைத்தார், விசுவநாதன்.

''என்னப்பா? தூக்கம் வந்துவிட்டதா?'' என்று, சற்று வியப்புடன் கேட்டான் மகன். ஏனெனில், ஒரு வேலை என்று தொடங்கி விட்டால் அதை முடிக்கும் வரை, பசி, தூக்கம், போன்ற உடலின் சுகங்களைப் பற்றி,

அதிகம் நினைக்கக் கூடாது என்று, அவனுக்குக் கற்றுக் கொடுத்தவர் அவர்தான். தேவைக்கு மட்டுமே, உணவு, உறக்கம் என்று வைத்துக் கொள்ள வேண்டும் என்பார்.

'ஊருக்குத்தான் உபதேசம், எனக்கல்லடி கண்ணே' என்கிற மாதிரியில்லாமல், அவரும், அதைக் கடைப் பிடிப்பவரும் கூட!

எனவே, நள்ளிரவு வரை நீளும் என்று, நித்யானந் தன் எதிர்பார்த்த பேச்சை, அவர் இடையிலேயே நிறுத்தி யது, அவனுக்கு ஆச்சரியத்தை அளிக்கவும்தான் தூக்கத் தைப் பற்றி, அவன் விசாரித்ததே.

கூடவே, சிறு கவலையும். ஒருவேளை, அப்பா வுக்கு உடல் நிலை ஏதும் சரியில்லையா?

லேசாக முறுவலித்து, மறுப்பாக மீண்டும் தலைய சைத்தார் அவர். ''ஒரு மகனின் பொழுதில், தகப்பனா ருக்கு உள்ள உரிமை, தாயாருக்கு இருக்கிறதாம். வேலை வேலை என்று, அதே சாக்காக உன்னை என்னுடனேயே வைத்துக் கொள்ளுகிறேனோம். உன் அம்மா போர்க் கொடி தூக்கியிருக்கிறாள். போராட்டம் வலுத்து விடு முன் போய் என்னவென்று கேட்டுவிடு'' என்று சிரித்தார், அவர்.

கவலை அகன்றவனாக இருக்கையை விட்டு எழுந்து, ''அப்படியானால் இந்தப் பேச்சை, நாளைக் காலை தொடரலாம். அப்பா, குட்நைட்'' என்று, அறையை விட்டு வெளியேறினான்.

ஹாலில் அமர்ந்திருந்த தாயாரைப் போலவே, அவள் பேசிய விஷயமும் அவன் எதிர்பார்க்காததாகத் தான் இருந்தது.

வழக்கம் போலவே, 'மருமகளையும் பேத்தியை யும், எப்போது அழைத்து வரப் போகிறாய்' என்றுதான் மதுரம் கேட்டாள். என்ன, கேள்வியில் அழுத்தமும், ஆதங்கமும் சற்று அதிகமாக இருந்தது.

மகன் வழக்கம் போல, ''வருவாள் அம்மா'' என வும், மதுரத்துக்குக் கோபமே வந்துவிட்டது.

''என்னடா வருவாள்? பிரியா, பிள்ளை பெறப் போய் எத்தனை மாதம் ஆகிறது? மாதம் என்பானேன்? ஓர் ஆண்டுக்கும் மேலாக ஆகிவிட்டதே! இப்படி, எங்காவது நடக்குமா? 'முதல் பிள்ளை, அம்மாவுடன் இருக்க ஆசைப்படுகிறேன்' என்றாள். சரியென்று, ஐந் தாம் மாதக் கடைசியிலேயே அனுப்பி வைக்கவில் லையா? அப்போதே, நாலுமாதம் அங்கே இருந்தாள். குழந்தை பிறந்து, இப்போது, அதற்கும் ஒன்பதாம் மாதம் நடக்கிறது. ஒரு வருடத்துக்கும் மேலாக மருமகள் பிறந்த வீட்டிலேயே இருந்தால், பார்க்கிறவர்கள் என்ன நினைப் பார்கள்? ஏதேனும் தகராறா என்று மாதர் சங்கத் தலைவி கேட்கிறாள். நான் என்ன பதில் சொல்லட்டும்?' என்று கோபமும் வருத்தமுமாகக் கேட்டாள்.

கண்ணில் சிரிப்புடன் மகன் ஏதோ பேசத் தொடங்க வும், ''நம் வீட்டு விஷயத்தில் அவளுக்கென்ன, வந்தது என்று கிறுக்குத் தனமாக எதையாவது சொல்லாதே. வாழ வந்த பெண், ஓர் ஆண்டுக்கும் அதிகமாகப் பிறந்த வீட்டில் உட்கார்ந்திருந்தால், பார்க்கிறவர்கள் என்னென் னமோ பேசத்தான் செய்வார்கள். உன் மாமியாருக்கா வது தெரியலாம். மகள் பிள்ளை பெற்றால் ஒருநாள் புருஷன் வீட்டுக்குக் கூட்டிப் போய், விட்டு வர வேண்

டாமா? பேத்தியைப் பிரிய மனம் இல்லை போல. ஆனால், பேத்தியைத் தூக்கிக் கொஞ்ச எனக்கு மட்டும் ஆசையாய் இராதா? பிரியாவுக்கும் இதுதான் அவளுடைய சொந்த வீடு என்பதே இல்லையடா. பார்த்துப் பார்த்து எவ்வளவு செய்தாலும், அவளுக்குப் பிறந்த வீட்டை விட்டுவர மனமே இல்லையே!'' என்று மதுரம் வருத்தப்பட்டாள்.

இது, உண்மையே, மதுரம், மருமகளை வேற்றாளாய் நடத்தியதே இல்லை. மகளுக்கு என்ன வாங்கினாலும் அதேபோல மருமகளுக்கும் சேர்த்துதான், வாங்குவாள். அனுபமா, கல்யாணம் ஆக வேண்டிய பெண், அவளுக்குக் கூடுதலாகத் தேவைப்படக் கூடும் என்றெல்லாம், நினைப்பதுகூடக் கிடையாது. அந்த அளவுக்கு, நகையாகட்டும், துணிமணியாகட்டும், எல்லாமே இரு பெண்களுக்கும் சம அளவில் இருக்கும் படியாகத்தான் வாங்கிக் கொடுப்பாள்.

சொல்லப் போனால் மகளை விடவும், ஒருபடி மேலாகவே மதுரம் மருமகளைக் கொண்டாடினாள் என்று கூறலாம். எங்கே போனாலும், தன் அழகிய மருமகளைக் கூட்டிப் போவதும், குடும்ப விளக்கு என்று அறிமுகம் செய்வதும், பரம்பரை நகைகளைக் கூட அணிவித்து அழகு பார்ப்பதுமாக, அவளை ஓர் அரிய செல்வமாகப் பாராட்டி, சீராட்டினாள்.

ஒருதரம், அப்படி மதுரம், அணிந்து கொள்ளச் சொல்லிக் கொடுத்த வைரமாலையைத் திருப்பிக் கொடுக்க மறந்து, அப்படியே, தாய் வீட்டுக்கும் கொண்டு போனவள், அதைத் திருப்பிக் கொண்டுவர

மறந்தே போன பிறகுதான், பிரியாவுடைய தாயும், அதைக் கொடுத்தனுப்ப நினைவற்றுப் போன பிறகுதான், பெரிய நகைகளை மருமகளுக்குப் பூட்டி விடுவதை, மதுரம் நிறுத்தினாள்.

அப்போதும், முழுமையாக அல்ல, கொஞ்ச நாளைக்குப் பிறகு, பிரியாவுக்குத் தன் வீடு, தன் பொருள் எது, அதை எங்கே வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்கிற கருத்து இன்னும் கொஞ்சம் வந்த பிறகு கொடுக்கலாம், என்றிருந்தாள்.

அத்தோடு, பிரியாவுடைய அம்மாவும் தான், அதை மட்டுமல்ல, எதையுமே யாருக்குக் கொடுக்கப் போகிறாள்? பாசமோ, பொருளோ, கொடுப்பதற்கு அவளுக்கு பிரியா மட்டும் தானே?

அதிலும், பிரியா கருவுற்றதும், மதுரம் அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினாள் எனலாம்.

இது வேண்டுமா, அது வேண்டுமா என்று வாங்கிக் குவிப்பதும், எந்த நேரத்தில் அவள் என்ன கேட்டாலும் செய்து கொடுப்பதும்... ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு பிரியா கட்லெட் சாப்பிட ஆசைப்பட்டாள் என்று. அந்த நேரத்தில் சமையல்காரம்மாளை எழுப்ப மனமின்றி, தாயார், தானே சமையல் அறையில் நின்று செய்து மருமகளுக்குக் கொடுத்ததை நித்யானந்தன், ஒரு நாளும் மறப்பதற்கில்லை.

ஆனால்...

இவ்வளவு செய்தவள், சிறிதளவேனும், அதன் எதிரொலியை மருமகளிடம் எதிர்பார்ப்பதில், தப்பு ஒன்

றும் இல்லை. ஆனால், மதுரம் கூறியது போல, பிரியா, கணவன் வீட்டைத் தன் வீடாக எண்ணியது போலவே தெரியவில்லை. கல்யாணமான நாளில் இருந்தே, அவள் கலகலப்பாக இருந்து நித்யா பார்த்ததே இல்லை என லாம்.

அவ்வப்போது, மதுரமோ நித்யானந்தனோ, நகை, சுடிதார்செட், சேலை என்று வாங்கி வரும்போது அவள் முகம் மலரும். என்ன விலை, என்ன ஏது என்று விசாரிப்பாள். சந்தோஷமாக உள்ளே எடுத்து வைத்துக் கொள்வாள்.

நம் உறவினர், நம் வீடு என்கிற எண்ணம் இப்போ துதான் உண்டாகிறது என்று அம்மாவும் பிள்ளையும், அவரவர் மனதினுள் மகிழ்ந்து பேசுவார்கள்.

ஆனால், ஓரிரு நாட்களிலேயே, அவள் முகம் பழைய மாதிரியே ஆகிவிடும்.

மதுரத்துக்கு, வீட்டில் எல்லோரும், சிரித்துக் கல கலப்பாக இருக்க வேண்டும். அதையே, ஊட்டி வளர்த்தி ருந்ததால், பிள்ளைகளுக்கும் அதே எண்ணம்தான். எனவே மனைவியின் முகவாட்டம் பொறுக்காமல், ஏன் எதற்காக என்று நித்யானந்தன் பிரியாவிடம் காரணம் கேட்பான்.

அந்த ஒரு வகையில், அவன் மனைவியைப் பாராட்டத்தான் வேண்டும்.

ஒரு நாள்கூட, அவள் மாமியாரையோ, நாத்தனா ரையோ, குறை கூறியதில்லை.

குறை சொல்லும்படி, அவர்கள் நடந்து கொண்டது இல்லைதான் என்றாலும் பொய்யாகவேனும், அவர்க

ளைப் பற்றிக் குறை கூறிக் கணவனைப் பிரித்துக் கொண்டு போய்விட முயற்சிக்கும் பெண்கள் எத்தனை பேர் இல்லை? அவனிடம் சொந்தப் பணம் நிறைய உண்டு எனும்போது, அந்த மாதிரி எந்த முயற்சியும் செய்யாத பிரியா, ஒரு சிறந்த குணசாலியாகவே, நித்யா வின் கண்களுக்குத் தோற்றமளித்தாள்.

பிரியாவின் முகவாட்டத்தின் காரணம், எப்போ துமே, ஒன்றே ஒன்றுதான். 'அம்மாவைப் பார்க்க வேண் டும் போல, ஆசையாக இருக்கிறது...' என்று சொல்லி முடிக்குமுன், அவளது உதடுகள் நடுங்கத் தொடங்கி விடும்.

ஒரே குழந்தையாகத் தாயின் முழு அன்பில் முக்கு ளித்து வாழ்ந்தவளுக்கு, அந்தத் தாயைப் பிரிந்து வாழ் வது, மிகவும் கடினமாகப் பட்டது போலும்.

இத்தனைக்கும், பிரியாவுடைய தாயார் தங்கம் ஒன்றும், மகளிடம் உருகி வழிகிறவள் அல்ல. மதுரம் மருமகளுக்குச் செய்வதில் பாதிகூட, தங்கம் மகளுக்கா கச் செய்து, நித்யானந்தன் பார்த்தது இல்லை. ஆடை, அணிகலன்கள் என்று, இல்லை, சாப்பாட்டு சமாசாரம் கூட அப்படித்தான். பிரியாவுக்கு இது பிடிக்கும், அது பிடிக்கும் என்று, மதுரம் சமையல்காரியைச் செய்யச் சொல்லுவதும், தானே செய்வதும் போல, அந்தம்மாள் செய்வதே கிடையாது. வீட்டு மாப்பிள்ளை, ஒரே மகளு டைய கணவன் அவனுக்காகக் கூட அந்த அம்மாள் அலட்டிக் கொண்டது இல்லை.

'பயணப்பட்டு வந்திருக்கிறீர்கள், கனமாகச் சாப் பிட்டு, வயிறு கெட்டுவிடக் கூடாது என்று, ரசம்சாதம்

வைத்தேன்' என்பாள். அடுத்த நாள், என்ன வேண்டும் என்று மிகவும் மரியாதையோடு கேட்பாள், அவன் எதைச் சொன்னாலும் அதைச் செய்ய வசதிப்படாது, என்பாள்.

அது, உண்மையாகவும் இருக்கக் கூடும். ஆனால், நித்யானந்தனுக்குத்தான், மேலே எதைச் சொல்லவும் மனம் கூசிவிடும்.

உணவு விஷயத்தில், மதுரம் வேறு மாதிரி. அதிகப் படி உபசாரமும் இல்லாமல் அலட்சியமாகவும் தோன்றா மல், சொந்த வீட்டில் உண்பது போன்ற உணர்வை விருந்தினருக்கு உண்டாக்கி விடுவாள்.

அப்படி வளர்ந்தவனுக்கு, மனைவியைக் கூட்டி வந்து விடுகிறபோது, மாமியார் வீட்டில், மேலும் ஒரு நாள் தங்கக் கூட மனம் வராது.

வாய் திறந்து சொல்லாவிட்டாலும், தாயின் குணம் தெரிந்ததாலோ, என்னவோ 'இரண்டு நாள் இருந்து போங்களேன்' என்று பிரியாவும் சொல்ல மாட்டாள்.

தாயிடம் உள்ள பாசம் தாங்காமல், அவள் தாயோடு இருக்க விரும்பினாலும் தனக்காகக் கணவ னும் கவுரவத்தை விட்டு, அங்கே தங்குவது, அவளுக் குப் பிடிக்கவில்லை என்பது புரிந்தது. நித்யா, உடனே, மனைவியைக் கொண்டு விட்ட கையோடு, கிளம்பி விடுவான்.

'அம்மாவை, இங்கே வரவழையேன்' என்று, நித்யா யோசனை தெரிவித்தால், பிரியா 'முடியவே முடியாது' என்று மறுத்து விடுவாள். ஏனெனில், அது

அவள் அம்மாவுக்கு மரியாதை இல்லையாம், வசதிப்ப டாதாம், ஏதோ சொல்லுவாள்.

எப்படியோ, விக்கிரமாதித்த மகாராஜா நாடாறு மாதம், காடாறு மாதம் என்று வாழ்ந்த மாதிரி, பிரியா பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலுமாக, மாறி மாறி வாழ்ந்தாள்.

ஒரே ஒரு வித்தியாசம், பிரியா கணவனோடு ஒரு மாதம் வசித்தால், திண்டுக்கல்லில் அம்மா வீட்டில் இரண்டு மாதங்களைக் கழித்தாள். அவ்வளவே.

ஒற்றைக் குழந்தையாக வளர்ந்ததின் பரிதாபம்!

சில சமயங்களில், சிவப்பு முக்கோணத்துடன், 'ஒரு குடும்பம் ஒரு குழந்தை' என்கிற வாசகத்துடன் கூடிய குடும்பக் கட்டுப்பாட்டு விளம்பரங்களைப் பார்க்கும் போது நித்யாவுக்குக் கவலையாக இருக்கும்.

இதை எத்தனை பேர் பின்பற்றி, எத்தனை பிரியாக் கள் உருவாகப் போகிறார்கள்?

ஆனால், எத்தனையோ ஒற்றைப் பிள்ளைகள் இல் லையா? எல்லோரும் இப்படியா இருக்கிறார்கள்?

அவன் மனைவிக்கு, 'அம்மா பாசம்' அதிகம், அவ்வளவே. அதற்காகப் பெருமைப்படுவதோ, வருத் தப்படுவதோ, அந்தந்த நேரத்தில் அவனது மனநிலை யைப் பொறுத்து, அவன் பட்டுக் கொள்ள வேண்டியது தான்.

அவனது வயது, மனைவியைப் பிரிந்து வாழும் வயதல்ல என்று போதும் அவளது மகிழ்ச்சிக்காகப்

பொறுத்துப் போக, அவனால் முடிந்தது. ஆனால் அதையே அவனுடைய தாயாரிடம் எதிர்பார்க்க முடியாது தானே?

அதிலும் பேத்தியைச் சீராட்ட வேண்டும் என்று மதுரம் துடித்துக் கொண்டிருப்பது, வீட்டில் எல்லோரும் அறிந்த விஷயம்.

ஆனால், பிரியாதான் திண்டுக்கல்லை விட்டு இந்தப் பக்கம் காலடி எடுத்து வைக்கவே தயாராயில்லை.

முதலில், தலை தூக்கத் தெரியாத குழந்தையை எடுத்துக் கொண்டு வரப் பயம், என்றாள். பிறகு, தனக்கு உடம்பு தேறவில்லை என்றாள். கடைசியாக, புதிய ஏற்றுமதி வாடிக்கை பிடிப்பதற்காக நித்யானந்தன் நாலு மாதங்கள் தொடர்ந்து வெளிநாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொள்வது என்று முடிவாகவும், பயணம் முடிந்து, அவன் திரும்பி வந்த பிறகு வருவதாகச் சொல்லி முடித்து விட்டாள்.

அதை மறுக்க முடியாவிட்டாலும், அப்போதே மதுரத்துக்கு உள்ளூரப் பொறுமல்தான்.

இடையில் இருமுறை பேத்தியையும், மருமகளையும் பார்த்து வரச் சென்றவளுக்கு, சம்பந்தி வீட்டு உபசாரம், சற்று வருத்தம் அளிக்கவே, அதன் பிறகு அங்கு செல்ல அவளுக்கும் மனமில்லை.

எனவே, மகன் திரும்பி வந்ததும் விமான நிலையத்திலேயே மகனிடம் அரிக்கத் தொடங்கி விட்டாள்.

நித்யானந்தனுக்குத்தான், சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாத நிலை!

திரும்பி வரும் தேதி உறுதியானதும், மனைவிக்கு ∴போன் போட்டு, அவன் சொன்னபோது பிரியா சரியாகவே பேசவில்லை.

எப்போதுமே, அவள் அதிகம் பேசுகிறவள் இல்லைதான் என்றாலும், நாலு மாதம் அவளைப் பிரிந்து வெளிநாட்டில் இருந்த கணவன் வரப் போகிறான் எனும்போது, கொஞ்சமேனும் மகிழ்ச்சியாக இராதா?

அவள் பேச்சில், அது, கொஞ்சம் கூடத் தென்படவே, இல்லையே!

ஒருவேளை, அவளுக்கு அவனைப் பிடிக்கவே இல்லையோ என்று நினைத்து விட்டு நித்யானந்தன் தன்னைத்தானே கடிந்து கொண்டிருந்தான். பிடிக்காதவள், அவன் நேரடியாகக் கேட்டபோது, 'சம்மதம்' என்று எப்படிச் சொல்லுவாள்?

சின்னப் பெண், பாவம், இப்போதுதானே பத்தொன்பது வயதே அவளுக்கு நிரம்பியிருக்கிறதாம்! பதினேழு முடியுமுன்பே திருமணம் என்றால், பாவம், அப்போது அவளே குழந்தைதானே?

இடையில் வந்து, காலையில் யார் யாருக்கு, எத்தனை மணிக்கு, என்னென்ன வைப்பது என்று, வினவிய சமையல்காரம்மாளிடம் பேசி அனுப்பி விட்டு, மதுரம், மீண்டும் மகனிடம் திரும்பினாள்.

தாயார் தொடங்குமுன்பாகவே, ''பிரியா சின்னப் பெண்தானேம்மா, பாவம் நம் அனு வயதில் அவளுக்குத் திருமணமே ஆகிவிட்டது. சின்ன வயதில் கல்யாணம் செய்து விட்டதாலேயே, மனமும், முதிர்ந்து விடுமா?

அனு, உங்களைச் சுற்றுகிற மாதிரிதானே, அவளுக்கும் இருக்கும்? பதினேழு வயதில் பாவம் அவளை மணந்து அழைத்து வந்ததே தப்போ என்று, இப்போது தோன்றுகி றது'' என்று மனதில் நினைத்துக் கொண்டிருந்ததை, மகன் சொன்னான்.

''இதை தன் பெண்ணுக்குப் பத்தொன்பது வயது முடிந்து விட்டது என்று சொல்லித் திருமணம் நடத்தி வைத்த உன் மாமியாரிடம் போய்ச் சொல்லு!'' என்று ஆத்திரத்துடன் உரைத்தவள் உடனேயே இளகி, ''உன்னை வாட்டி என்னடா, பிரயோசனம்? உனக்கு மட்டும், மனைவி மகளைப் பார்க்கும் ஆவல் இராதா, என்ன? அது ஒரு வேதனை என்றால், நான் ஒரு பக்கம் குதறி விட்டேனே! சாரிடாம்மா!'' என்று வருந்தினாள்.

உதட்டைக் கடித்துக் கொண்டு தலை குனிந்து நின்ற மகனிடம் மேலும் மனம் உருகிவிட, ''சரிம்மா, அதெல் லாம் முடிந்த கதை. பிரியா, அப்படி என்ன, பொறுப்புத் தெரியாதவளா? இந்த 'அம்மா ஆசை' தவிர, அவளிடம் என்ன குறை, சொல்லு? இரண்டு நாள், நான் ஊருக்குப் போனபோதும், அவள் தனியாகச் சமாளிக்கவில் லையா? எடுத்துச் சொன்னால் அவளும் புரிந்து கொள் ளுவாள். நீ சீக்கிரமாக அவளைப் போய்ப் பார்த்து பேசு, நீயே அம்மாவாகி விட்ட பிறகு, இப்படி, 'அம்மா, அம்மா' என்று அங்கேயே இருக்கக் கூடாது. நம் மகள் அவள் வீட்டில்தான் வளர வேண்டுமா... என்று, இப்படி எடுத்துச் சொல்லி, நம் வீட்டுக்குக் கூட்டி வா, எல்லாம் சரியாகிப் போகும்'' என்று மகனோடு தனக்குமே நம்பிக் கையூட்டி மதுரம் பேச அவனும் முகம் தெளிந்தான்.

அவன் தாய் சொல்வது போல இது சரியான அணுகுமுறை. அவளே அம்மா ஆன பிறகு... நல்ல ஐடியா! இதைச் சொன்னால், பிரியா எப்படியும் புரிந்து கொள்வாள்.

உள்ளூர நிம்மதியுற்றவனாக அறையை அடைந்த வன், மனைவியை டெலி∴போனில் அழைத்தான்.

வழக்கம் போலவே ∴போனை எடுத்தது மாமியார் தான்.

உள்ளூர எழுந்த எரிச்சலை அடக்கிக் கொண்டு, மனைவியைக் கூப்பிடச் சொன்னான்.

சொல்லும்போதே, அவனுக்கு நம்பிக்கை இல்லை தான். அந்தம்மாள் ∴போனை எடுக்கும் போதெல்லாம், பகலானால் பிரியா வீட்டில் இருக்க மாட்டாள், இரவா னால் தூங்கப் போயிருப்பாள். மகள் தன்னை மறந்து விடுவாளோ என்கிற பயத்தில், இந்த அம்மாள்தான், பிரியாவின் மனதைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாளோ என்றோர் எண்ணம் கூட, நித்யாவுக்கு உண்டு. அப்படி யெல்லாம் செய்ய மாட்டோம் என்று எழுதியா கொடுக்க முடியும்?

நித்யானந்தன் எண்ணியது போலவே, மகள் தூங்கி விட்டதாகத் தங்கம்மாள் கூறவும், ஒரு கணம் அவனுக் குப் பெரும் சீற்றம் உண்டாயிற்று. மகளுக்கும் மருமக னுக்கும் இடையே, ஒரு மாமியார் இப்படி நந்தி வேலை செய்வாளா? அழைப்பது மகளுடைய கணவன் என்கிற எண்ணமே, இல்லையே! 'மரியாதையாகப் போய் என் மனைவியை எழுப்பிக் கூட்டி வா' என்று கத்த வேண்டும் போல, அவனது நாவு துடித்தது.

ஆனால், இன்றுடன் முடியக் கூடிய உறவல்ல இது. அவன் என்ன சொன்னாலும் அது, நாளை அவனது குடும்ப வாழ்வில் எதிரொலிக்கக் கூடும்!

சிரமப்பட்டுக் கோபத்தை அடக்கிக் கொண்டு, ''இங்கே, இரண்டு நாள் வேலை இருக்கிறது, அதை முடித்துக் கொண்டு நாளை மறுநாள் கிளம்பி அங்கே வருகிறேன். பிரியாவிடம் சொல்லுங்கள். என்னோடு கூட வரத் தயாராக இருக்கும்படியும் சொல்லுங்கள்'' என்றான்.

''இல்லை'' என்று அந்த அம்மாள் ஏதோ சொல்ல முயன்றதைக் காது கொடுத்துக் கேளாமலே, ''எந்தச் சம்பிரதாயங்களும் பார்க்கத் தேவையில்லை. குழந்தையையும், அவளையும் நானே கூட்டி வர முடிவு செய்து விட்டேன். கிளம்பத் தயாராக இருக்கச் சொல்லுங்கள்'' என்று, கறார்க் குரலில் கூறியவன், அதற்கு மேல் அந்த அம்மாள் பேச இடமே கொடாமல், ரிசீவரை வைத்து விட்டான்.

மறுநாள் முழுவதும் பயணத்தைத் தள்ளிப் போடக் கோரி மனைவியின் டெலி∴போன் அழைப்பை எதிர் பார்த்துக் காத்திருந்தவன், அப்படி எதுவும் வராது போகவும் தன்னைத்தானே மெச்சிக் கொண்டான்.

ஒரு கறார்க் குரலுக்கு இவ்வளவு மதிப்பா?

ஒன்பது மாதக் குழந்தை! பிடித்துக் கொண்டு நடக்கும் விட்டு விட்டு நிற்கும். சில சுட்டிப் பிள்ளைகள் ஓரிரு எட்டுகள் எடுத்து வைப்பதும் உண்டாம்! அவன், நித்யானந்தன் அப்படித்தான் செய்தானாம்!

ஒரு குட்டிப் பெண் குழந்தை தளர் நடை நடப்பது போலக் கற்பனை செய்து பார்த்தான். ஒன்றும் சரியாக மனக் கண்ணில் வர மறுத்தது. மகள் எப்படி இருப்பாள் என்பதே தெரியாத நிலை.

பிரியா நல்ல அழகி. அவளைப் போல, அவன் மகளும் கூட மிக அழகாக இருக்கக் கூடும்.

குழந்தையை ∴போட்டோ எடுத்து அனுப்புமாறு சொல்லி, ∴பிலிமும், ∴ப்ளாஷுக்காக பாட்டரி செல்லும் போட்டுக் காமிரா ஒன்றைக் கொடுத்து விட்டு வந்தது ஒரு வீண் வேலை. இன்று வரை ஒரு படம் வரவில்லை! செல்லும் கசிந்து காமிராவே வீணாகியிருக்கக் கூடும். என்ன பைத்தியக்காரத்தனம்!

இருக்கட்டும், இங்கே வந்த பிறகு, விட்டதற்கெல்லாம், ஈடு கட்டுகிற மாதிரி, நிறைய ∴போட்டோக்கள் எடுத்து, பெரிய பெரிய ஆல்பங்கள் தினுசு தினுசாகத் தயாரிக்கலாம்.

நித்யானந்தன், எண்ணிலடங்காத கனவுகள் எத்தனையோ கண்டு கொண்டிருக்க, அவைகள் அத்தனையும் சிதறடிப்பதுபோல, அன்றிரவு அவனுக்கு ஒரு ∴போனோகிராம் வந்தது.

அவனுடைய மனைவி பிரியாவின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அது தெரிவித்தது.

2

நித்யானந்தனால், இந்தச் சேதியை நம்பவே முடியவில்லை.

அவன் மனைவி பிரியா, பத்தொன்பது வயதே நிரம்பிய ஆரோக்கியமான இளம் பெண். குழந்தை பிறந்து ஒன்பது மாதங்களே ஆகின்றன. இந்த ஒன்பது மாதங்களில் உடல் நலக் கோளாறு என்று அவளுக்கு எதுவுமே வந்ததில்லை.

அதுபற்றி அவளுடைய சிறிய தந்தை - தகப்பனார் வழிச் சித்தப்பா, அவர் ஒரு மருத்துவரும் கூட, குழந்தை பிறந்த மறுநாளே பிரியா நடமாடியது பற்றிப் பேசிய போது கூட, சிறு வயதிலிருந்தே அவள் அப்படித்தான், நோய்நொடி என்று படுத்ததில்லை என்று சொன்னாரே. அவளுக்குப் போய், 'கவலைக்கிடம்' என்கிற அளவுக்கு, என்ன வரமுடியும்?

யோசிக்க, யோசிக்க, இந்த ஃபோனோகிராம் ஒரு பொய்யென்றே, நித்யாவுக்குத் தோன்றியது. ஆனால் பொய்தான் என்று ஒரேயடியாக அலட்சியப்படுத்தவும் அவனுக்குப் பயமாயிருந்தது.

ஒருவேளை, இது உண்மையாக இருந்து விட்டால்?

முயன்றும், அடக்க மாட்டாத சிறு படபடப்புடன் திண்டுக்கல்லுக்கு டெலிஃபோன் செய்தான்.

எத்தனை தரம் முயன்றும் அங்கே ஃபோனை எடுப்பதாகவே இல்லை.

அல்லது, எடுப்பதற்கு வீட்டில் ஆளில்லையோ என்று தோன்றவும் நித்யானந்தன் கலங்கி விட்டான்.

எல்லோரும் தங்கம்மாள், வேலைக்காரி, எடுபிடிப் பையன், மூவருமே பிரியாவோடு மருத்துவமனையில் தான் இருக்கிறார்களோ? குழந்தையுமா? அப்படியானால் இந்த ஃபோன் வழித் தந்தி மெய்யேதானா?

ஆனால் என்ன செய்வது, பிரியாவின் நிலையை எப்படி அறிவது என்று புரியாமல் ஒரு கணம் மலைத்து நின்றான்.

ஏனெனில், திண்டுக்கல் ஊரை அடையும் முன்பாகவே ஊருக்குச் சற்று வெளிப்புறமாகவே பிரியாவின் வீடு இருந்தது. அக்கம் பக்கம் என்று வீடுகள் அதிகம் கிடையாது. சற்றுத் தள்ளி இருந்தவர்களுடனும், தங்கமாளுக்கு, நல்ல உறவில்லாததால் ஓர் அவசரத்துக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காகக் கூட அவர்களில் யாருடைய டெலிஃபோன் எண்ணையும் நித்யாவிடம் அவன் மனைவியோ, மாமியாரோ, தந்ததில்லை.

வைத்தியரான சித்தப்பா விஷயமும், அப்படித் தான்!

மிகவும் சிரமப்பட்டு மனதை அமைதிப்படுத்திக் கொண்டு, யோசித்து விட்டு வெளியூர் டெலிஃபோன் டைரக்டரியில், பிரியாவுடைய சித்தப்பா சுகவனத்தின் எண்ணைக் கண்டுபிடித்துக் கேட்டான்.

பேசியவன் யாரென்று அறிந்ததும் அவரை அழைத்து வந்தார்கள்.

ஃபோன் செய்தி உண்மைதான் என்று உறுதிப்படுத்திய சுகவனம், நித்யானந்தனின் மற்ற எந்தக் கேள்விகளுக்கும் பதிலளிக்காமல், அவனை உடனே கிளம்பி வருமாறு மட்டும் சொன்னார்.

முடிந்த அளவு விரைவாக வரச் சொன்ன அவர், ''காரில் வருவதானால் டிரைவரை ஓட்டச் சொல்லுங்கள்'' என்று சேர்த்துச் சொல்லவும், நித்யானந்தன் ரொம்பவுமே பதறிப் போனான்.

''ஆ... அவ்வளவு மோசமா, அங்கிள்?'' என்று, குரல் நடுங்கக் கேட்டான்.

''ஆமாம். அவ்வளவு மோசம்தான். எங்களால் இயன்றமட்டும் அவளைப் பிடித்து வைத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், அவள் பிழைப்பது கடவுள் கையில்தான் இருக்கிறது. இப்போதுகூட, அவளைத்தான் பார்த்துக் கொண்டு இருந்தேன். வைக்கட்டுமா?'' என்ற வர் ஒருகணம் தயங்கி, அவரது மருத்துவமனையின் முகவரியைக் கொடுத்து விட்டு, அதன் பின் ரிசீவரை வைத்தார்.

பெற்றோரின் தூக்கத்தைக் கலைக்க மனமின்றி, இவ்வளவு நேரம் தனியனாகவே சமாளித்துக் கொண்டி ருந்தான் நித்யானந்தன். செய்தி பொய்யாயிருக்கக் கூடும் என்ற நம்பிக்கையும் பெருமளவு இருந்தது. ஆனால், நம்பிக்கை பொய்த்து சேதி மெய்யே என்று ஆகவும் கலக்கத்துடன், அவர்களையும் எழுப்பச் சென்றான்.

சுகவனம் சொன்னது போலவே, முடிந்த அளவு விரைவாகத்தான், கார் சென்றது.

ஆனாலும், ஊரை அடையும் போதே, அவர்கள் கேட்டது, ''என்னை ஏமாற்றி விட்டுப் போய்விட்டாயே, என் மகளே!'' என்ற தங்கம்மாளின் ஓலத்தைத்தான்!

காரை நிறுத்தி அவசரமாக இறங்கி, உள்ளே ஓடிச் சென்று, அந்தக் குடும்பம் பார்த்தது அவளது இயற்கை யான ரோஜா நிறம் மாறி, ரத்தப் பசையற்று வெளுத்தி ருந்த, பிரியாவின் உயிரற்ற உடலைத்தான்!

தொடர்ந்த களேபரத்தின் இடையேயும் மதுரம், தன் பேத்தியைத் தேடிச் சென்றாள். ஆற்றுவார் இன்றித்

தனியே கிடந்து, அழுது கொண்டிருந்த குழந்தையைக் கண்டதும் மனம் உருகிவிடப் பேத்தியை அன்போடு தூக்கி அணைத்துக் கொண்டாள்.

குழந்தைக்கு முன்பே தாய்ப் பாலை நிறுத்தி, வேறு ஆகாரம் கொடுத்துப் பழக்கியிருந்தது அவளுக்குத் தெரி யுமாதலால் - அதுபற்றி, மதுரத்துக்குச் சிறு வருத்தம் கூட உண்டு என்றாலும் - இப்போது, அதுவே சற்று வசதியாகிவிட, சம்பந்தி அம்மாளின் சோகத்தில், குறுக் கிட விரும்பாமல் தங்கள் டிரைவரையே அனுப்பி பால் பவுடர், ஃபாரெக்ஸ் எல்லாம் வாங்கிவரச் செய்து பேத்தி யின் தேவைகளைத் தானே கவனித்துக் கொண்டாள்.

காரியம் எல்லாம் முடிந்து கொஞ்சம் துக்கம் அமர்ந் ததும், தங்கத்திடம் பிரியாவுக்கு என்ன ஆயிற்று என்று விசாரிக்க முயன்றாள்.

ஆனால், எப்போது பிரியாவின் பேச்சை எடுத்தா லும், ''அய்யோ, என் மகள் என்னை விட்டு விட்டுப் போய் விட்டாளே!'' என்றோ, ''என் செல்ல மகளே, என்னை அனாதையாக்கி விட்டு எங்கேம்மா போனாய்?'' என்றோ தங்கம்மாள் ஒரேயடியாக ஓலமிட் டாளே தவிர, பிரியாவுக்கு என்ன ஆயிற்று என்று மதுரத்தால் ஒன்றும் அறிந்து கொள்ள முடியவில்லை.

நித்யானந்தனின் முயற்சிகளுக்கும் அதே கதிதான் நேர்ந்தன.

மனைவியையும், மகளையும், பிரிந்திருந்த காலம் முடிந்தது. இனிமேல் நல்லபடியாகக் குடும்பம் நடத்தப் போகிறோம் என்று கண்ட கனவுகள் சிதறிப் போன வேதனையோடு, கடைசி நேரத்தில் பிரியா அவனைத்

தேடியிருப்பாளோ, அவனிடம் என்ன சொல்ல ஏங்கினாளோ, அவர்களுடைய ஒரே மகளின் எதிர்காலம் பற்றி என்னென்ன திட்டமிட்டு, அதையெல்லாம் கணவனிடம் சொல்ல விரும்பித் துடித்தாளோ என்று பலவாறு எண்ணித் தவித்தான், அவன்.

ஆனால், இதைப் பற்றியெல்லாம் அவனுக்குச் சொல்லக் கூடிய மாமியாரோ, அவன் ஏதாவது கேட்க வாயைத் திறந்தாலே, 'ஓ' என்று ஓலமிட்டதோடு சரி.

ஒரே மகளை இழந்திருக்கிறாள். பாவம்தான்! ஆனால், நித்யானந்தனின் இழப்பும் சாதாரணமானது இல்லையே! அவன் பறிகொடுத்திருப்பது அவனுடைய வாழ்க்கைத் துணையை அல்லவா?

மனைவியின் விருப்பங்களை... குறைந்த பட்சம், குழந்தை பற்றி அவளது கனவுகளையாவது அவன் நிறைவேற்ற வேண்டாமா? அந்தக் கனவுகள் என்ன வென்றே தெரியாமல், அவற்றை நிறைவேற்றுவது, எப்படி?

அத்தோடு அவனுக்கு, பிரியாவுக்கு என்ன நேர்ந்தது என்றும் தெரிய வேண்டியிருந்தது.

அவனுக்கே அறிந்து கொள்ளும் தவிப்பு இருந்தோடு, உற்றம், சுற்றம் என்று வீடு திரும்பியதும், துக்கம் கேட்க வருகிறவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டுமே, ஓர் ஆரோக்கியமான பெண் திடுமென இறந்து விட்டாள் என்று, வெறுமனே சொன்னால் கேட்பவர்கள் என்னென்ன கதை கட்டுவார்கள்?

கவுரவமாக வாழ்ந்த அவனுடைய குடும்பத்துக்கு அனாவசியமாக ஏன் இந்த அபவாதம்?

இத்தனையும் மனதில் எண்ணித்தான், நித்யானந் தன் மாமியாரிடம் பேச முயன்றது.

தங்கம் கத்திக் கதறி அழவும், அவளது இழப்பை உணர்ந்து, இரங்கி, ஆறுதலாக பேச முயன்றான்.

ஆனால், அதற்கும் தங்கத்தின் பிரதிபலிப்பு அதே அலறலாக இருக்கவும், ஓரிரு முறைகளுக்குப் பிறகு நித்யானந்தன் பொறுமையிழந்தான்.

இறந்தவள், அவனுடைய மனைவி, அவள் எப்படி இறந்தாள் என்று அறிந்து கொள்ளும் உரிமை அவனுக்கு இல்லையா? அதைத் தெரிவிக்கும் கடமை, மகளைக் கணவர் வீட்டுக்கு அனுப்பாமல் ஓர் ஆண்டாகத் தன்னுடனேயே வைத்துக் கொண்டிருந்த அந்த அம்மாளின் கடமை இல்லையா?

ஆயினும், ஒரு தன்மையோடு வளர்க்கப் பட்டிருந்த விதத்தில் இந்தக் கடமை, உரிமைகள் பற்றி, மாமியாரிடம் இந்த நேரத்தில் சட்டம் பேச மனமற்று, விவரமறிய அடுத்த வழியைத் தேடினான்.

தங்கத்தின் நிழல் போல, அவள் பின்னேயே சுற்றிக் கொண்டிருந்த வேலைக்காரியை தனியே அழைத்து விசாரிப்பதோ, எடுபிடிப் பையனிடம் தூண்டித் துருவுவதோ, தரக் குறைவாகத் தோன்றவும், அடுத்த வழியாக பிரியாவின் கடைசி நேரத்தில், அவளுக்கு வைத்தியம் பார்த்த அவளுடைய சித்தப்பா சுகவனத்தைத் தேடிச் சென்றான்.

நித்யானந்தனின் இழப்புக்காக அனுதாபம் காட்டி ஆறுதலாகப் பேசிய போதும் பிரியாவைப் பலி கொண்ட

நோய் பற்றிய எந்த விவரத்தையும், அவள் கணவனுக் குத் தர அவரும் முன்வரவில்லை என்று உணர்ந்தபோது, அவனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

இவர்கள் எல்லோருமாக, அவனிடம் எதையாவது மறைக்க முயற்சிக்கிறார்களா?

உணர்ச்சி, உறவு முதலியவற்றை ஒதுக்கிப் பார்த்த போது தொழிலில் பயிற்சியும் வெற்றியும் பெற்றிருந்த அவனது மூளை சந்தேகப்படத் தொடங்கியது.

''செத்த குழந்தைக்கு ஜாதகம் பார்த்து என்ன மாப்பிள்ளை, பிரயோசனம். என்னவோ, பிரியாவின் கதை முடிந்து விட்டது. 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும், மாண்டார் வருவாரோ, இம்மானிலத்தே' என்று பாடலே இருக்கிறது. பெற்றோர், தங்கை என்று நல்ல குடும்பம் உங்களுக்கு இருக்கிறது. பிஞ்சாய் ஒரு குழந்தை இருக்கிறது. அதைக் கூடவே வைத்து வளருங் கள். அதன் முகத்தைப் பார்க்கப் பார்க்க, இந்த துக்கம் குறையும். நீங்கள் படித்தவர். பெரிய தொழில் செய்கிற வர் தொழிலைப் பார்க்க வேண்டும். குடும்பத்தைப் பார்க்க வேண்டும். குழந்தையை அழைத்துப் பேசுவ தைப் பார்க்க வேண்டும்... எத்தனையோ வேலைகள்! இந்தத் துக்கத்தை ஒதுக்கி வைத்து விட்டு, அடுத்த வேலையைப் பாருங்கள்'' என்று ஆறுதல் கூறி, ஆலோ சனை வழங்கினார், அவர்.

''ஆமாம், அடுத்த வேலையைப் பார்ப்பது, மிகவும் அவசியம்தான்'' என்று, அவரோடு ஒத்துப் பேசி விட்டு, நித்யானந்தன் கேட்டான். ''இங்கே, போலீஸ் ஸ்டேஷன் எங்கே இருக்கிறது?''

குழப்பமும், கேள்வியுமாக சுகவனம் நோக்கவும், ''என் மனைவி, இருபது வயது கூட நிரம்பாத சின்னப் பெண், திடீரென்று இறந்து போய் விட்டாள். அந்த உயிர் எப்படிப் போயிற்று என்று எனக்குச் சொல்ல போலீஸ் தான் வரவேண்டும் போலத் தோன்றுகிறது'' என்றான் நித்யா, வறண்ட குரலில்.

இரக்கமும் வருத்தமுமாகத் தலையசைத்து, ''குப் பையைக் கிளறுவானேன், மாப்பிள்ளை? நாற்றம் தானே? போனவள் போய் விட்டாள். கதை முடிந்து விட்டது என்று விட்டு விடுங்கள். நான் உங்களுக்காக வும் தான் சொல்லுகிறேன். வீணாகப் புழுதி பரப்ப வேண்டாம். பாதிப்பு உங்களுக்கும்தான்'' என்று ஒரு மூத்த உறவினராகச் சொன்ன சுகவனம், அவன் இளக்க மற்று நேரான நோக்குடன் அப்படியே உட்கார்ந்திருக்க வும், ஒரு பெருமூச்சுடன் தொடங்கினார்.

அவர் சொல்லச் சொல்ல வெறும் வெளியை வெறித் தபடி நித்யானந்தன், அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

அவன் முகத்தை ஒருதரம் நோட்டமிட்ட சுகவனம், டெலிஃபோனை எடுத்து யாரிடமோ, ஏதோ உத்தரவிட் டார்.

ஓரிரு நிமிடங்களில், ஒருவன் காஃபி கொணர்ந்து வைத்துவிட்டுப் போனான்.

கப்பை நித்யானந்தனின் பக்கம் தள்ளி வைத்து, ''காஃபி குடியுங்கள், மாப்பிள்ளை'' என்றார் மருத்துவர்.

தலையசைத்து மறுத்து விட்டு நித்யானந்தன் எழுந் தான். ''நிறைய விஷயங்கள் முன்பு புரிபடாமல் இருந்த

பல விஷயங்கள், எல்லாமே இப்போது நன்றாக விளங்குகின்றன. அங்கிள் முன்பே யோசித்திருக்க வேண்டும். ஆனால், என்ன நடந்திருக்கும் என்று இப்போது புரிகிறது... மிக நன்றாகப் புரிகிறது. விவரம் சொன்னதற்கு நன்றி, அங்கிள், கிளம்புகிறேன்'' என்று கையை அவர் புறம் நீட்டினான்.

குலுக்குவதற்காக நித்யா நீட்டிய கையை அழுந்தப் பற்றிய சுகவனம், ''உங்களுக்கு. இப்போது எப்படி இருக்கும் என்று எனக்குப் புரிகிறது, மாப்பிள்ளை. ஆனால், உங்களுக்குச் சின்ன வயது; இதையெல்லாம், 'பூ' என்று தூசியாய் உதறிவிட்டு, நல்லபடியாக வாழ முடியும். இந்தக் கச்சடாவை எல்லாம் விட்டுவிட்டு, சீக்கிரம் இங்கிருந்து கிளம்பி விடுங்கள். போகும் போது, குழந்தையை உங்களோடு அழைத்துச் சென்று விடுங்கள்'' என்று மீண்டும் ஆலோசனை சொன்னார்.

சட்டென இமை தூக்கி, அவரை உறுத்து நோக்கி, ''யார் குழந்தையை?'' என்று, கேட்டான் நித்யானந்தன்.

3

திடுக்கிட்டவராய் சுகவனம் திகைத்து நோக்கவும், ''சாரி, விட்டு விடுங்கள். உங்களிடம் காட்டியிருக்கக் கூடாது. ஆனால், எதிர்பாராததால் கொஞ்சம் தடுமாறி விட்டேன். மீண்டும் சாரி, வந்து, உங்கள் புத்திமதிக்கு நன்றி. அதன்படியே நடந்து கொள்ளுகிறேன். இனி சந்திப்பதற்கு வாய்ப்பிராது என்று நினைக்கிறேன். அதனால், இப்போதே விடை பெற்றுக் கொள்கிறேன், வருகிறேன்'' என்று தன் தடுமாற்றத்தைச் சமாளித்தபடி உரைத்து விட்டுக் கிளம்பினான் நித்யானந்தன்.

அவன் செல்வதையே பார்த்தபடி நின்ற சுகவனத்துக்கு மனம் கசிந்தது.

இந்த அருமையான பையனுடன் நல்லபடியாக வாழ அவருடைய அண்ணன் மகளுக்குக் கொடுத்து வைக்கவில்லையே!

விவரம் அறிவதற்காக நித்யானந்தன்தான், கொஞ்சம் தாமதப்படுத்தினானே தவிர, சம்பிரதாயப்படி எல்லாச் சடங்குகளையும் செய்து முடித்ததுமே அவனுடைய குடும்பம் பயணத்துக்குத் தயாராகிக் கொண்டுதான், இருந்தது.

தடுத்து நிறுத்த தங்கமும் முயற்சிக்கவில்லை.

குழந்தையைத் தன்னோடு நிறுத்திக் கொள்ளவும் அவள் விரும்பியதாகத் தெரியவில்லை. பேத்தியைக் கூட்டிப் போவதாக, மதுரம் தொடங்கியதுமே தலையாட்டி விட்டாள்.

ஓர் ஆண்டுக்கும் மேலாகத் தாய் வீட்டிலேயே, பிரியா இருந்து விட்டதால் அவளது பொருட்கள் என்று சென்னையிலிருந்து அனுப்ப வேண்டிய பொருள் என்று எதுவும் விசுவநாதன் வீட்டில் இல்லை.

மருமகளுக்கென்று வாங்கி, அணிவித்து மகிழ்ந்த அணிகலன்களை நினைக்கையில் மதுரத்துக்கு உள்ளூரக் கொஞ்சம் சங்கடமாகத்தான் இருந்தது. ஆனால், அவையெல்லாம் மதுரம் தன் விருப்பமாய், பிரியாவுக்கென்றே கொடுத்தது. திருப்பிக் கொடு என்று கேட்பது சரியல்ல.

நாகரீகம் தெரிந்து, பேத்திக்காக என்று சம்பந்தி அம்மாளே கொடுக்க வேண்டும்.

தங்கம், எந்த அளவுக்கு அப்படி நாகரீகமாய் நடந்து கொள்ளக் கூடும் என்று சொல்வதற்கில்லை!

ஆனால், வைரமாலை அப்படி அல்லவே. அதன் விலை லட்சக் கணக்கு என்பதோடு, அதை மதுரம் சும்மா ஒருதரம் அணிந்து கொள்ளத்தான் மருமகளுக்குக் கொடுத்தாளே தவிர, அவளுக்கே என்று பரிசளித்து விடவில்லை. அருமையான வைரங்கள் வேறு.

அவ்வளவு பெரிய நகையை விட்டு விட மனம் இல்லாமல் வைரமாலை பற்றி மதுரம் பிரியாவுடைய அன்னையிடம், அது பற்றிப் பேச்செடுத்தாள்.

''வைர மாலையா? அது எப்படியிருக்கும்?'' என்று அந்த அம்மாள் கண்ணை விரிக்கவும், மதுரத்துக்குப 'பகீ'ரென்றது.

சமாளித்துக் கொண்டு, அந்த நகையைப் பற்றி விவரிக்க முனைந்தாள்.

ஆனால், அதைக் காதிலேயே வாங்காமல், ''அய்யோ, என் மகளே, இப்படி ஒரு அல்பாயுசில் நீ என்னை அனாதையாக விட்டுப் போய் விட்டியே! ஒரு வார்த்தை இன்னது இப்படி என்று சொல்லவில்லையே! இப்போது நகையைக் கொண்டா, நட்டைக் கொண்டா என்கிறார்களே, வைரம் என்கிறார்களே! பொன்னுக்கும் வைரத்துக்கும் நான் எங்கேடி போவேன்?'' என்று நாலு வீட்டுக்குக் கேட்கிற மாதிரி தங்கம் பிலாக்கணம் வைக்கவும், தானே தான், ஏதோ குற்றம் புரிந்து விட்ட மாதிரி, மதுரத்துக்கு முகம் வியர்த்துப் போயிற்று.

மகளைப் பறி கொடுத்தவளிடம் பிடுங்க முயற்சிப் பது போல, அவள் அல்லவா தரம் இறங்கியவளாகத் தோன்றுவாள்?

அந்த எண்ணமே அவளுக்குக் கிடையாதே! இது குடும்ப நகை என்றுதானே...

ஏதேதோ எண்ணங்கள் மனதில் ஓடிய போதும், எல்லாமே தொண்டைக்குள் விக்கியதே தவிர, ஒன்றும் சொல்ல மதுரத்துக்கு வாய் வரவில்லை.

அவள் வளர்ந்து வாழ்ந்த இவ்வளவு காலமும், அவளுக்கு மரியாதை பெற்றுத்தான் பழக்கம். அவளது பெருந்தன்மையை மற்றவர்கள் கொண்டாடித்தான் வழக்கம்.

அன்று வரை அறிந்திராத நிலைமையில் மதுரம் குன்றி நிற்கையில், அவள் மகன் உள்ளே வந்தான்.

அவனிடம் வேறு, தங்கம் என்ன என்ன இட்டுக் கட்டிச் சொல்லப் போகிறாளோ? நித்யா, அதை நம்பா விட்டாலும் அவள் உரக்கச் சொல்லும் போது, மற்றவர் கள் காதில் அது விழத்தானே செய்யும் என்றெல்லாம், மானத்துக்குப் பயந்த மதுரம் கலங்கியவாறே மகனைப் பார்த்தாள்.

வீதி வரை கேட்ட தங்கத்தின் புலம்பலில் இருந்து, நடந்ததை ஊகித்திருந்த மகன், தாயைக் கனிவுடன் நோக்கி லேசாகத் தலையசைத்தான்.

'நான் உன் பக்கம்தான்' என்று சொல்லாமல், சொன்னவன் மாலையை விட்டு விடுமாறும் கூறுகிறான்!

உள்ளூர வேதனைதான் என்றாலும், தகுந்த காரணம் இல்லாமல் நித்யா எதையும் செய்ய மாட்டான்

என்ற நம்பிக்கை இருந்ததால், மதுரம் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை.

மாமியாரைத் திரும்பியும் பாராமல், அவள் அங்கே இருப்பதை அறிந்ததாகவே காட்டிக் கொள்ளாமல், ''இன்றைக்கே, நாம் கிளம்புகிறோம், அம்மா, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாகத் தயாராகுங்கள். அனு எங்கே?'' என்று கேட்டான்.

''குழந்தையோடு பின்புறம் இருக்கிறாள்.''

''குழந்தை... குழந்தைக்காகவும், எதையும் எடுத்து வரவேண்டாம் அம்மா. தேவைப்பட்டதை, நாமே வாங்கிக் கொள்ளலாம்'' என்றான், நித்யானந்தன்.

பெயர் சூட்டுகையில், குழந்தைக்கு அணிவித்த வைரப் பதக்கத்துடன் கூடிய சங்கிலியும், இடுப்புக் கொடியும் நினைவு வர மதுரம் மகனைக் கூர்ந்து நோக்கினாள்.

''தப்பு செய்தால், அபராதம் செலுத்தித்தான் ஆக வேண்டும், அம்மா; முடிந்தவரை விரைவாகக் கிளம்புங்கள். அப்பா வேறு, அங்கே தனியாகத் திண்டாடிக் கொண்டு இருப்பார்'' என்று அவன் ஒரு மாதிரிக் குரலில் கூறவும், தலையாட்டி விட்டுப் பயண ஏற்பாடுகளைப் பார்க்கப் போனாள் அவள்.

திரும்பி வந்த பயணத்தின் போது நித்யானந்தன் மிக அவசியமான வேலைகள் தவிர, மவுனமாக இருந்ததை, மதுரம் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அழகிய மனைவியைப் பறிகொடுத்த ஓர் இளைஞன் வேறு எப்படி இருப்பான்?

ஆனால், சென்னை திரும்பிப் பல நாட்கள் சென்ற பிறகும், அவனது மவுனம் கலைவதாக இல்லை எனவும் மதுரம் கவலைப்படத் தொடங்கினாள்.

முதலில் அள்ளை, பிறகு மற்றவர்கள்.

தொழிலைப் பொறுத்தவரையில் எந்தவிதக் குறையும் இல்லாமலே நடத்தி வந்த போதும், அவன் வீட்டில் தங்கும் நேரமும் குறைந்து போனது. அப்படித் தங்கும் நேரத்தில் தாய், தங்கையிடம் முன்போல அவன் சிரித்துக் கலகலப்பாகப் பேசுவதும் நின்றே போயிற்று.

உணவருந்தும் வேளைகளிலும், அதே கதைதான் நடந்தது.

வெகு தாமதமாக வீடு திரும்பி, அறைக்குள்ளேயே அடைந்து கிடப்பது, அவனது வழக்கமாக ஆகவும், அதை மாற்ற குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்கள் முயன்றனர்.

அவனுடைய குழந்தைதான், அவனது துயரை மாற்றுவதற்குரிய சரியான மருந்து என்று கருதி, அவளை அவன் முன்னே விளையாட விட்டுப் பார்த்தாள், மதுரம்.

ஆனால் நித்யா அதைக் கவனித்ததாகவே தெரியாது போகவும், மகனைப் பிடித்து வைத்து அவனுடைய மகளைப் பற்றிப் பேசினாள்.

பிரியா, தன் மகளை 'டிங்கு' என்று, அழைத்ததாகச் சொல்லப்பட்டிருந்தது.

ஆனால், அது, ஏதோ விஷக் காய்ச்சலின் பெயர் போல, மதுரத்துக்குத் தோன்றி விட, பெயர் சூட்டு விழாவின் போது, வைத்த பெயரான தீபிகாவைச் சுருக்கி, தீபா என்று கூப்பிட்டாள்.

தீபா உட்கார்ந்தாள். தீபா ஒருவாறு தவழத் தொடங்கி விட்டாள்.. என்று அவள் சொன்னதெல்லாம், 'எருமை மாட்டின் மீது பெய்த மழை' என்பது போல, அவன் காதிலேயே விழாமல் சற்றும் பலனின்றிப் போயிற்று.

அப்போதும் விடாமல், மதுரம் பேத்தியைப் பற்றி மகனிடம் பேசிக் கொண்டேதான் இருந்தாள். மகன் பதிலேதும்.... பதிலென்ன, அவள் அபிப்பிராயம் கூட சொல்லா விட்டாலும்.

அப்படித்தான் ஒருநாள், ''தீபா யார் ஜாடை என்றே தெரியவில்லை, நித்தி. பிரியா சாயலோ என்று முதலில் நினைத்தேன். நன்றாகப் பார்த்தால், கொஞ்சம் கூட அவளைப் போல, இல்லவே இல்லை. நம் வீடோ என்றும் யோசித்துப் பார்த்தேன். ஆனால், நம் நாலு பேரில் ஒருவரைப் போலவும், இவளுக்கு மூக்கு, முழி ஒன்று கூட இல்லையே!'' என்று வியந்தவள், சட்டென ''எப்படி இருக்கும்?'' என்று, கைத்த குரலில் மகன் கேட்டு விடவும், அதிர்ந்து போனாள்!

''கண்ணா, நீ என்ன சொல்லுகிறாய்?'' என்று திகைப்புடன் வினவினாள்.

கண நேர அமைதிக்குப் பின் 'சொல்வதென்ன, அம்மா? இந்த முயற்சியெல்லாம் இனி வேண்டாம். பிரியாவைப் பற்றிய பேச்சும், இனி நம் வீட்டில் யாரும் பேச வேண்டாம். கொஞ்சமேனும், அமைதி கிட்டுகிறதா என்று பார்ப்போம்'' என்றவன் அத்தோடு அந்தப் பேச்சை முடித்து விட்டு, எழுந்து சென்றான்.

இந்தப் பேச்சின் பிறகு, குழந்தையிடம் முழு மன தோடு ஈடுபட மதுரத்தால் முடியவில்லை. தொட்டுத்

தூக்கிக் கொஞ்சப் பிடிக்கவில்லை. ஆனால், ஒன்றும் அறியாத அந்தச் சிசுவை அடியோடு விட்டு விடவும் இயலவில்லை.

விவரங்கள் எதுவும் தெளிவாகத் தெரியாத போதும், அதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் திடமும் இல்லாத நிலையில், மகன் மனதை நோகடித்த பிள்ளை என்பதே அந்தப் பிள்ளையிடமிருந்து அவளை ஒதுங்க வைத்தது. அந்தப் பிஞ்சு முகத்தைப் பார்க்கப் பார்க்க, வேண்டாத பல்வேறு எண்ணங்கள் தோன்றி, அவளை வாட்டி வதைத்தன.

அதைத் தவிர்க்க அவள் முயலவும், குழந்தை மெல்ல மெல்ல வேலைக்காரர் வசம் வளரலாயிற்று.

மதுரத்துக்கு, கருப்பையில் கட்டி வந்து, மெல்ல வளர்ந்து, அதன் காரணமாக ரத்த சோகை வந்து அறுவை சிகிச்சை செய்து கருப்பையை நீக்கும்படியான தும் அன்னைக்கு உதவி செய்ததோடு, அனு கல்லூரிப் படிப்போடு, கம்ப்யூட்டர் வகுப்புகளுக்கும் சென்று வந்த தும், இந்த நிலை ஏற்பட்டதற்கான மற்ற காரணங்கள்.

இந்நிலையில் வீட்டில் நல்லது, கெட்டது என்று மனதைப் பாதிக்கும்படியாக இன்னும் சில சம்பவங்க ளும் நடந்தன.

பத்தொன்பது வயது அடைந்து விட்டிருந்த அனுப மாவைப் பெண் கேட்டு வந்தார்கள்.

நித்யானந்தனுக்குப் பிறகு, பத்து ஆண்டுகள் கழித் துப் பிறந்த அனுபமா, அன்று வரை அந்த வீட்டில் ஒரு சின்னப் பிள்ளைதான். அவளைத் திருமணத்துக்குத்

தகுந்த யுவதியாகக் கருதிக் கேட்டார்கள் என்பது மற்ற மூவருக்குமே, உள்ளூர ஒரு திடுக்கிடலோடு கூடிய கிளர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இருபத்தொன்றுக்குப் பிறகுதான், அனுவின் திருமணம் பற்றிப் பேசுவது என்று விசுவநாதன் முடிவெடுத்து விட்ட போதும், அன்றிலிருந்தே அந்தப் பொறுப்பு மதுரத்தின் மனதில் ஒரு பளுவாக அழுத்திக் கொண்டே இருக்கத் தொடங்கியது.

அறுவை சிகிச்சையும், அதன் முன்னும் பின்னுமாக அவளைப் பாதித்த சிறுசிறு சுகவீனங்களும், அவளது தெம்பைப் பெரிதும் குறைத்து விட்டிருந்தன.

மகளுக்குத் திருமணம் என்றால் எவ்வளவு வேலை யிருக்கும்? அவை அனைத்தையும், தனியாக அவளால் எப்படிச் செய்ய முடியும்?

மகனான நித்யாவின் திருமணத்துக்கே எவ்வளவு வேலை இருந்தது? இப்போது, இருமடங்கு இருக்குமே!

வெகுவாக யோசித்துப் பார்த்துவிட்டு, தன்னால் முடியாது என்ற முடிவுக்கு மதுரம் வந்தாள்.

உடல் அயர்ச்சியின் காரணமாக, 'தனக்குப் பிறகு' என்று யோசிக்கத் தொடங்கியிருந்த மதுரத்தின் இன்னொரு தீர்மானத்தையே இந்த முடிவும் வலியுறுத்தியது.

ஒரு பெண் இல்லாமல், இந்த வீடு நடக்காது.

தொழில், தொழில் என்று நித்யானந்தனும் அவன் தந்தையும் உணவு, உறக்கம் மறந்து போவார்கள் என்றால் படிப்பு படிப்பு என்று அனுபமா அவர்களுக்கு மேல்!

நோய், நொடி, வயிற்று உப்புசம் பார்த்து, வேண்டியது செய்ய வைத்து, அதை உண்ணச் சொல்ல வேண்டும்.

இதற்கு மேல் வேலையாட்கள்!

கண் குத்திப் பாம்பாகக் கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும். தார்க் குச்சி போட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒன்றும் நடவாது.

இவை அனைத்தையும் விட, நித்யா மூப்பது வயதாகுமுன் சன்னியாசி ஆகிவிடக் கூடாது!

மகன் என்பதற்காகவோ, அவன் ஆண் என்பதற்காகவோ, அவன் மறுமணம் செய்ய வேண்டும் என்று மதுரம் நினைக்கவில்லை.

இளம் வயதில் ஒரு பெண் கணவனையிழந்தால், அவள் மறுபடி மணந்து கொள்ள வேண்டும் என்று அடித்துச் சொல்லுகிறவள்தான் மதுரம். மகளிர் மன்றத்தின் மூலம் அப்படிச் சில திருமணங்களை நடத்தி வைத்தும் இருக்கிறாள்.

எனவே, மனைவியை இழந்த மகனுக்கு, இன்னொரு திருமணம் செய்து வைக்க, அவள் விரும்பியதில் குறை காண முடியாது.

ஆனால், நித்யானந்தன்தான் அதை, வெகுவாக எதிர்த்தான்.

அவனுக்குப் பெண் துணையே இனித் தேவையில்லையாம். அதனால் திருமணமும் அவசியம் இல்லையாம். நடந்த அந்த ஒரு திருமணமே, இந்தப் பிறவி முழுமைக்கும் அவனுக்குப் போதுமாம்!

மதுரம், தன் காரணங்களை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், அவள் பிள்ளை சற்றும் அசைவதாக இல்லை.

இந்த நிலையில்தான் பிரியாவுடைய தாயிடமிருந்து, நித்யானந்தனுக்கு ஒரு கடிதம் வந்தது.

அதில் அந்த அம்மா நிறைய எழுதியிருந்தாள்.

அநியாயமாய்ப் பறி கொடுத்த தன் அருமை மகளை, அவள் எப்படிப் பாராட்டி சீராட்டி வளர்த்தாள் என்பது பற்றி, ஓர் இரண்டு பக்கம். அவளை இழந்து தான் வாடுவது பற்றி, இன்னும் இரு பக்கங்கள், அதன் பின், பேத்தியிடம் வைத்திருக்கும் பேரன்பு பற்றி, மேலும் ஒரு பக்கம். தாயை இழந்த அந்தக் குழந்தை, தந்தையுடனாவது இருந்து வளரட்டும் என்று விட்டுக் கொடுத்த தனது தியாக உள்ளம் பற்றி, இன்னுமோர் பக்கம் என்று கடிதம் வெகு நீளமாக எழுதப்பட்டு இருந்தது.

இவ்வளவு நீண்ட முகவுரையின் பின், கடிதத்தின் சாராம்சம் கடைசிப் பகுதியில் இருந்தது.

ஆனால், அவளது தியாகம் பலனின்றிப் போய் விட்டதாம். தந்தை வீட்டில் குழந்தைக்குப் பராமரிப்பு சரியில்லையாம். தந்தை வழிப்பாட்டி நோயாளியாம். அத்தை படிக்கிற மாணவியாம். இருவராலும் பிள்ளையைப் பார்த்துக் கொள்ள முடிய வில்லையாம். அதனால், பேத்தி மிகவும் மெலிந்து இருக்கிறாளாம். அதனால் இனிமேல் பேத்தியை அவளே வளர்க்கப் போகிறாளாம்.

கடிதத்தின் மிக முக்கியமான பகுதி பின் குறிப்பில் இருந்தது.

கணவனை இழந்த அவளுக்குக் குழந்தையை உரிய முறைப்படி வளர்ப்பது சிரமம் என்பதாலும், நித்யானந்தனுடைய வாரிசான அந்தக் குழந்தைக்கு, அவன் சொத்தில் உரிமை உண்டு என்பதாலும், பேத்தியோடு அவளுக்குச் சேர வேண்டிய சொத்தையும் அவள் வசம் ஒப்படைக்கச் சொன்னது, அந்தப் பின் குறிப்பு.

4

"திமிரைப் பாருங்கள், அம்மா!" என்று கடிதத்தைக் கொணர்ந்து தாயிடம் காட்டினான் நித்யானந்தன். "முன்பு அடித்த பணமெல்லாம் செலவாகி விட்டது போல. இப்போது அடுத்த வருமானத்துக்கு அடி போட்டாகிறது! போய்த் தொலைகிறது என்று விட்டு விட்டு வந்தால் ஏமாளி என்று எண்ணி விட்டார்கள். மிரட்டுவதற்காக கடிதத்தின் கடைசியில், எழுதியிருப்பதைப் பாருங்கள். திருமதி தங்கம்மாளின் விருப்பப்படி, இந்தக் கடிதத்தை எழுதியிருப்பது வக்கீல் வரதனாம். கேட்டபடி கொடுக்காவிட்டால், கோர்ட்டுக்குப் போவேன் என்கிறார்கள். இதற்கெல்லாம், நான் பயந்து விடுவேன் என்று கனவு காண்கிறார்கள். பகல் கனவு! குழந்தையை வேண்டுமானால், வந்து தூக்கிக் கொண்டு போ, ஆனால், சொத்தில் ஒரு பைசா கூடத் தர முடியாது என்று பதில் எழுதிவிடப் போகிறேன்" என்று ஆத்திரத்துடன் உரைத்தான் அவன்.

"கூடாது, கண்ணா! என்று, அவசரமாக மறுத்துப் பேசினாள், மதுரம்.

''என்னம்மா, சொல்லுகிறீர்கள்?''

தங்கம்மாளின் கடிதத்தில், மதுரம் தனக்குச் சாதக மாக ஒரு விஷயத்தைக் கண்டுபிடித்திருந்தாள். அதைக் கொண்டு, மகனை மடக்கிவிடவும் அவள் மனதில் ஒரு யுக்தி தோன்றிவிட்டிருந்தது.

''தீபா உன் மகள், இன்றில்லா விட்டாலும், என் றைக்கேனும் அவளுக்கு என்று சொல்லிச் சொத்தைப் பெற, அவர்களால் முடியும்தானே? குழந்தையை, அவர் களிடம் விடுவது என்றைக்கும் ஆபத்து...''

''அப்படியானால், தீபாவைத் தர முடியாது. என்ன வேண்டுமானாலும் பண்ணிக் கொள், என்று எழுதி விடட்டுமா?''

''அதுவும் சரிப்படாதே. இன்றைக்குத் தீபா இருக் கிற விதத்துக்கு. அவளை நாம் சரியாக வளர்க்கவில்லை என்று அவர்கள் கோர்ட்டுக்குப் போனால், நீதிபதி யார் பக்கம் சாய்வார்? அவளைக் கொஞ்சம் நல்லபடியாகக் கவனித்து, உருப்படியாக்கிய பிறகுதான், கோர்ட்டுப் பக்கம் போவதெல்லாம்.''

''அப்படியானால், அவளைப் பார்த்துக் கொள்ள வென்று ஒரு ஆயா வையுங்கள்.''

''இந்த இரண்டாண்டு காலமாக, இவளை யார் பார்த்துக் கொண்டார்களாம். ஆயாக்கள்தானே?'' என்ற தாயாரைக் கூர்மையாக நோக்கி, ''நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்று புரிகிறது, அம்மா. ஆனால், அப்படி வருகிறவள் மட்டும், தீபாவை நன்றாகக் கவனித்துக் கொள்வாள் என்று என்ன நிச்சயம்? மாற்றாந்தாய்க் கொடுமை என்று நீங்கள் கேட்டதே இல்லையா?'' என்று சிறு கேலியாகக் கேட்டான், நித்யா.

''அப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ளும் திறமை உனக்கு இல்லை என்றா சொல்லுகிறாய்?'' என்று பதி லுக்கு அவன் தாயார் அதே குரலில் கேட்கவும், நித்யா னந்தனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

''கொக்குக்கு ஒன்றே மதி என்று அதிலேயே நிற்கி றீர்களே, அம்மா!'' என்று, அவன் குறைப்பட்ட போதும், அவன் குரலில் கடுமை இருக்கவில்லை.

''பின்னே என்னப்பா, செய்வது?'' என்றாள் மதுர மும் மீண்டும் அவனைப் போலவே கேட்டாள். பிறகு, ''நீங்கள் ஆண்கள், எல்லோரும் சம்பாதித்துப் போட் டால் குடும்பம் தானாக நடக்கிறது என்றுதான் நினைக்கி றீர்கள். சமையல்காரி சமைத்து வைப்பாள்தான். ஆனால், பிள்ளைக்குச் சளி பிடித்திருக்கிறது என்று பூண்டு ரசமும், அப்பா வயதுக்கு இரவு இலகு சமையலும் செய்ய வேண்டும் என்று அவளுக்கு யார் சொல்வது? நான் இருக்கும் போதே, உரிமைக்காரியாக ஒருத்தியைப் பழக்கி விட்டால் எனக்கும் போகிற போது நிம்மதியாக இருக்....'' என்று சொல்லிக் கொண்டே போனவளை இடைமறித்து, நித்யானந்தன் பேசினான்.

''என்னம்மா, போகிற வருகிற என்று நீங்கள்கூடக் கண்ணறாவியாகப் பேசிக் கொண்டு! கேட்க சகிக்க வில்லை!'' என்று எரிச்சல்பட்டான்.

''அம்மாவுக்கு வயது இறங்கிக் கொண்டே போகி றது என்று நினைத்தாயாக்கும்? அத்தோடு, இந்த உடம்பு வேறு அந்தப் பக்கம் இழுத்துக் கொண்டே இருக்கிறதே!''

''சும்மா இருங்கள், அம்மா, உங்களுக்கு அந்த அளவு வயது ஆகவும் இல்லை. எதுவும், உங்களை

வேறெங்கும் இழுத்துப் போக, நாங்கள் விட்டு விடவும் மாட்டோம். அதனால், இந்தப் பேச்சை விடுங்கள்'' என்று ஓர் அதட்டலோடு பேச்சை முடிக்க முயன்றான் பிள்ளை.

இந்த அதட்டல், எரிச்சல் எல்லாம் அன்னை மீது கொண்ட அன்பினால் வந்தது என்பதால், மதுரத்துக்கு இதமாகத்தான் இருந்தது. ஆனால், அதற்காகச் சும்மா இருந்து எடுத்த காரியத்தை விட்டுவிடக் கூடாது.

எனவே தொடர்ந்து, ''என் உடம்பு எப்படியிருக்கி றது என்று எனக்குத்தானேப்பா, தெரியும்? அத்தோடு குழந்தையைப் பார்ப்பதற்கு இங்கே ஆளில்லை என்கிற வாதமும் அடிபட்டுப் போகும். பொறு, நான் சொல்லி முடித்து விடுகிறேன். மூன்று தலைமுறையாகப் பாடு பட்டு வளர்த்து வருகிற தொழில். நாலாவது தலைமுறை யாக, நீயும் பெருக்கிக் கொண்டுதான் இருக்கிறாய். இதன் ஒரு பகுதி, தகுதியற்றவர்கள் கையில் ஒரு வேளை சிக்கிச் சீரழிந்து விடுமோ என்கிற எண்ணமே என் இதயத்தைப் பதற வைக்கிறதப்பா. கெட்ட காலம் என் றும் ஒன்று இருக்கிறதில்லையா? மனசு, உடம்பு என்று நான் என் நிலையைச் சொல்லிவிட்டேன். இனி முடிவு செய்வது, உன் பொறுப்பு'' என்று படபடவென்று சொல்லி முடித்து விட்டு, சற்று வேக மூச்சு வாங்கினாள், மதுரம்.

தாயின் சுவாசம் மெல்ல நிதானப்படுவதை, யோச னையோடு பார்த்துக் கொண்டு நின்றான் நித்யானந்தன்.

பிறகு ''சரி அம்மா, உங்கள் விருப்பப்படி நான் மீண்டும் திருமணம் செய்து கொள்கிறேன். ஆனால்,

பெண் என் விருப்பம் போல அமைய வேண்டும்'' என்றான், மைந்தன்.

மிக்க மகிழ்ச்சியுடன், ''சொல்லு கண்ணா, சொல்லு. உனக்கு எந்த மாதிரிப் பெண் வேண்டும்? எவ்வளவு அழகாய், அந்த ரதி மாதிரியே வேண்டும் என்றாலும், எப்படியாவது ஏற்பாடு பண்ணி விடலாம்?'' என்று மகிழ்ச்சியோடு மதுரம், மகனிடம் வினவினாள்.

வெறுப்பும், ஏளனமும் கலந்த விசித்திரப் புன்னகை ஒன்று நித்யானந்தனின் முகத்தில் தோன்றியது. ''அழகா?!'' என்றவனின் குரலிலும், அந்த இரு உணர்ச் சிகளும் கலந்தே இருந்தன.

மதுரம் சற்றுத் திகைப்புடன் நோக்க, அவன், ''நான் சொல்வதை நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். அம்மா, என் மிக முக்கியமான நிபந்தனை, அந்தப் பெண் அழகாக இருக்கக் கூடாது. அடுத்தது, சின்ன வயதாகவும் இருக்கக் கூடாது. என் வயது, அல்லது கிட்டத்தட்ட என் வயதாக இருக்க வேண்டும். காதல், கீதல் என்று பட்டாம்பூச்சி வாழ்க்கைக்கு ஆசைப்படக் கூடாது. இந்த நிபந்தனை எல்லாவற்றுக்கும் ஏற்றவளாக ஒரு பெண் கிடைத்தால் மீண்டும் மணந்து கொள்ளுகி றேன். இல்லாவிட்டால், எனக்கு மறுமணம் என்கிற எண்ணத்தையே மறந்து விடுங்கள்'' என்று மிகவும் கண்டிப்பான குரலில் கூறி முடித்தான்.

மகனின் நிபந்தனைகளில், மதுரத்துக்கு மிகவும் வருத்தம்தான்.

நித்யானந்தனின் கம்பீரமான உருவத்தின் அருகில் அழகற்ற ஒருத்தியா? பொருத்தமே இராதே என்று வேதனைப்பட்டாள்.

ஆனால், தோற்றப் பொருத்தம் பிரமாதமாக இருக்கும் என்று மற்ற எதையும் பாராமல், செய்து வைத்த திருமணம் நிலைக்கவா செய்தது?

அதிர்ஷ்டம் இருந்தால், பிறக்கும் குழந்தை நித்யாவைக் கொண்டு பிறக்கட்டுமே... இந்தத் தீபாவுக்கு, வீட்டில் யார் சாயலேனும் கொஞ்சமேனும் இருக்கிறதா?

வழக்கம் போலவே, இந்த ஆராய்ச்சியை ஒதுக்கி விட்டு, வேறு விஷயங்களில் மனதைச் செலுத்த முயன்றாள்.

நல்ல வேளையாக, மகனின் திருமணம் சிந்தனைக்குத் தீனியாகக் கிடைத்திருக்கவே, அது பற்றி மேலே என்ன செய்வது என்று திட்டமிடத் தொடங்கினாள்.

அறிந்த, தெரிந்த பெண்களை எல்லாம், மனக்கண் முன் கொண்டு வந்து ஆராய்ந்தவள், அவர்களுள் யாரும் நித்யானந்தனின் நிபந்தனைகளுக்குச் சரிவர மாட்டார்கள் என்று உணர்ந்து, திருமணத் தரகருக்குச் சொல்லியனுப்பினாள்.

மதுரம் கூறிய எல்லா நிபந்தனைகளுக்கும் பொருந்தி வருகிற பெண் என்று தரகர் சொன்ன ஒரு பெண்ணைப் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்த மதுரத்துக்கும் அவள் மகள் அனுபமாவுக்கும், அன்றிரவு சரியாகத் தூக்கமே வரவில்லை.

தாயார் மிகவும் மனம் உளைவதைப் பார்த்துவிட்டு, அனுபமாதான் தாயைத் தேற்றினாள்.

இவ்வளவு நாள் திருமணம் ஆகாததில், அவள் முகம் முதிர்ந்து போயிருக்கக் கூடும். அம்மா, நம் வீட்டுக்கு வந்து, நம் எல்லோர் பிரியத்தையும் அனுபவிக்கிறபோது, ஆளே மாறி விடுவார்கள், பாருங்கள்'' என்று அன்னைக்கு ஆறுதல் சொன்னாள்.

இருக்குமோ என்று எண்ணி மதுரமும், அமைதியடைந்தாள்.

''எதற்கும், நீயும் ஒரு தரம் பார்த்து விடுகிறாயா?'' என்று கேட்டதற்கு, அவர்கள் இருவரும் பார்த்ததே போதும் என்று விட்டான் நித்யானந்தன்.

திருமணம் கோயிலில், அதற்கு முன் பின் சடங்குகள் எதுவும் கூடாது என்று அவன் கூறியதற்கும் பெண் தரப்பில், யாரும் ஆட்சேபிக்கவில்லை.

கல்யாணத்துக்கு முதல்நாள் வரை, வழக்கம் போல அலுவலில் ஈடுபட்டிருந்த மகனைப் பார்க்கையில், மதுரத்துக்கு உள்ளே வலித்தது.

மணமகனுக்குரிய மகிழ்ச்சி, அவன் முகத்தில் கொஞ்சம்கூட இல்லையே!

அதுபற்றி, அவள் கணவனிடம் அங்கலாய்த்த போது, ''அவன் அனுபவித்ததற்கு, நித்யா திருமணம் செய்து கொள்வதே பெரிய விஷயம். அதை நினைத்து சந்தோஷப்படாமல், உப்புப் பெறாததையெல்லாம் நினைத்து மனதை அலட்டிக் கொள்கிறாயே. அவன் இப்படி இருப்பதுதான் அவனது வருங்காலத்துக்கு, நல்லது. இப்போதே, பெரிதாகக் காட்டினால் அப்புறம், இன்னும் இன்னும் என்று முன்னைப் போல ஆகிவிடப் போகிறது. அதனால் சும்மா மனதைப் போட்டு குழப்பிக் கொள்ளாமல் நிம்மதியாக இரு'' என்று விசுவநாதன்

கூறிய பிறகே, மதுரத்தின் மனம் ஒருவாறு அமைதிய டைந்தது.

எல்லாம் கொஞ்ச நேரம்தான்.

ஏதோ கனவு கண்டு வீறிட்டு அழுத தீபாவைப் போய்ப் பார்த்தால், அவளுக்குக் காய்ச்சல் வந்திருந்தது.

காய்ச்சல் மருந்தைக் கொடுத்து அவளைத் தூங்க வைத்து, வேலைக்காரியைத் துணையாக விட்டுவிட்டு, வந்து படுத்துத் தூங்கினேன் என்று பேர் பண்ணிவிட்டு, எழுந்து, கிளம்பி, போக்குவரத்து நெரிசலில் வேறு சிக்கி, ஒரு வழியாகக் கோயிலுக்குச் சென்றபோது, முகூர்த்த நேரமே தொடங்கி விட்டிருந்தது.

மாப்பிள்ளையை மனையில் உட்கார வைத்து சடங் குகள் நடக்க, மணமேடைக்கு அழைத்து வரப்பட்ட பெண்ணை, உள்ளூர வருத்தத்துடன் நிமிர்ந்து பார்த்த மதுரம் அதிர்ச்சியடைந்தாள்.

தாயின் அதிர்ச்சியைக் கவனித்துத் திரும்பிப் பார்த்த அனுபமாவுக்கும் அதே உணர்ச்சிதான்.

சுற்றி அலைந்த பார்வையில் சற்றுத் தொலைவில் சென்று கொண்டிருந்த தரகர் பட்டுவிட, அவரை நோக்கி மதுரம் செல்ல, அனுபமாவும் தாயைப் பின் தொடர்ந் தாள்.

கெட்டிமேளம் கொட்டச் சொல்லித் தாலியைக் கையில் கொடுக்கும் வரை, அருகில் அமர்ந்திருந்த பெண்ணைத் திரும்பிப் பார்க்கக் கூட, நித்யானந்தனுக் குத் தோன்றவில்லை.

மாங்கல்யத்தைக் கையில் ஏந்தியவாறு, திரும்பிய வன் திகைத்துப் போனான்.

அவசரமாகத் துழாவிய விழிகளில், தாயும் தங்கை யும் தூர நிற்பது தெரிந்தது.

கையிலிருந்ததை வீசி எறிந்து விட்டுப் போய்விட லாமா, என்று ஒரு கணம் ஆத்திரம் வந்தது.

ஆனால், தப்பு செய்தது, அவனுடைய தாயும் தங்கையும்!

அவர்கள் செய்த தப்புக்கு, இந்தப் பெண்ணைத் தண்டிப்பது, என்ன நியாயம்?

தாயும் தங்கையும் தப்பு செய்ததும், அவனது நன்மைக்காக என்று எண்ணித்தான்!

என்ன அசட்டுத்தனம்?! பட்டும் புத்தி வரவில் லையே!

ஆனால், அதையெல்லாம் யோசித்துக் கொண்டி ருக்க, இப்போது அவகாசம் இல்லை.

அங்கே கெட்டி மேளமும், இங்கே தாலியைக் கட்டச் சொல்லி புரோகிதரின் அவசரப்படுத்தலும்...

மீண்டும் ஒரு தரம் தாயின் பக்கம் நோக்கினான். ஆனால், இப்போதைக்கு இந்தப் பக்கம் வரும் எண்ணம், மதுரத்துக்கு இருந்ததாகவே தெரியவில்லை! ஏதோ முக்கியம் போல, யாருடனோ சீரியசாகப் பேசிக் கொண் டிருந்தாள்.

மகா முக்கியம்! மகனின் நல்வாழ்வை விடவும் முக்கியமாக்கும்?!

அடக்கப்பட்ட கோபத்தில், இறுகிப் போன முகத்து டன் நித்யானந்தன், அருகில் அமர்ந்திருந்த பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

5

சாருமதியின் மனம், கலக்கப்பட்ட தடாகம், போல, ஒரே குழப்பமாக இருந்தது.

கொஞ்சம் மகிழ்ச்சி, கொஞ்சம் பயம், கூடவே கலக்கம். வேதனை... நிம்மதி... எல்லாமே!

ஒரே வாரத்தில், திருமணம் பேசி முடித்து நடந்தேறுவது என்றால், ஒரு பெண் தலை எது கால் எது என்று புரியாத நிலையில் தவிப்பது இயற்கைதான்.

அதிலும், புகைப்படத்தில் மணமகனைப் பார்த்தது தவிர, மாப்பிள்ளை வீட்டார் யாரையும், அவள் பார்த்தது கூட இல்லை எனும்போது, அவளுக்குக் குழப்பம் ஏற்படுவதும் தவிர்க்க முடியாததுதான்.

ஆனால், தாலி கட்டி முடிந்தபோது, சாருமதியின் மனதில் தலைதூக்கி நின்ற உணர்ச்சி நிம்மதிதான்.

எப்படியும், தாமரையின் வாழ்வில் இனிமேல் சஞ்சலம் இராது! கணவன், குழந்தை, என்று அவள் நல்லபடியாக வாழ்வாள்!

கடந்த சில மாதங்களை எண்ணிப் பார்க்கையில், இப்போதும் சாருமதிக்கு உடல் நடுங்கியது.

எவ்வளவு மகிழ்ச்சியோடு வந்துவிட்டு, என்ன மாதிரி தவிக்கும்படி ஆகிவிட்டது.

சாருமதி, தாமரை, இருவருமே அன்பு இல்லத்தில் ஒன்றாக வளர்ந்தவர்கள்தான். ஒருவருக்கு, ஒருவர் என்பது போல, இணைபிரியாத தோழிகளும் கூட.

சாருமதிக்குப் படிப்பில் மிகுந்த ஆர்வம் இருந்தது. இல்லத் தலைவியும் உதவி புரிய, பல போட்டிகளில் கலந்து, ஒரு சில உதவித் தொகைகளையும் பெற்று, மேற்படிப்பும் படித்தாள். பெரிய படிப்பு படித்து, பெரிய வேலை பார்த்து, நிறைய சம்பாதித்து, தன்னை வளர்த்த இல்லத்துக்குப் பண உதவி செய்ய வேண்டும் என்பது அவளது ஆசை. அது ஓரளவுக்கு நிறைவேறி, அவளுக்குக் கோவையில், தனியார் நிறுவனம் ஒன்றில் ஒரு வேலையும் கிடைத்தது. பெண்கள் விடுதி ஒன்றில் தங்கிக் கொண்டு, சிக்கனமாய்ச் செலவு செய்து, அவள் சேமித்த பணத்தில் இல்லத்துத் தோழியருக்கு, அவள் சில சிறு பரிசுகள் கூட வாங்கி அனுப்பினாள். கூடவே, பகுதி நேரப் படிப்பாக, அதிகச் செலவில்லாத 'கோர்ஸ்' ஒன்றும் செய்யத் தொடங்கியிருந்தாள்.

அந்தச் சமயத்தில்தான், இல்லத்தில் தாமரையின் திருமணம் நடந்தது.

தாமரைக்குப் படிப்பில் அதிக ஈடுபாடு கிடையாது. வீடு, குடும்பம் என்று அறிந்தறியாத விஷயங்களுக்கு ஏங்கியது அவள் மனது.

கைத் தொழில் ஒன்றைக் கற்றாக வேண்டும் என்ற இல்லத்து விதிப்படி, மணிப்பை போடக் கற்றிருந்தாள் தாமரை.

நகரின் பெரிய 'டெப்பார்ட்மென்டல் ஸ்டோர்' ஒன்றில், பொருட்களை வாங்கும் பிரிவின் இளநிலை அதிகாரி, மதியழகன் அங்கங்கே பொருட்கள் மலிவாகக் கிடைக்கும் இடம் தேடிச் சென்று கொள்முதல் செய்கிற வேலை, அவனுடையது.

மணிப்பை வாங்கவென்றுதான், மதியழகன் முதலில் அன்பு இல்லத்துக்குச் சென்றது. பிறகு, காரணம் இல்லாமலே அடிக்கடி சென்றான்.

இல்லத் தலைவி, கவனித்துவிட்டு, இருவருக்கும் திருமணத்துக்கு ஏற்பாடு செய்தார்.

மதியழகனுக்கும், பெரியதாக உறவு என்று அவனை அதிகாரம் செய்யக் கூடியவர்களாக யாரும் இல்லாதபடியால், திருமணத்துக்குத் தடை ஏதும் ஏற்பட வில்லை.

தாமரை, சாருமதிக்கு எழுதிய கடிதங்கள் எல்லாம், ஒரே மதியழகன் புராணமாகத்தான் இருந்தன.

தோழியின் ஏக்கம் அறிந்திருந்த சாருமதிக்கு, மிகவும் சந்தோஷமே.

ஆனால், பகுதி நேர வகுப்பில் அப்போதுதான் சேர்ந்திருந்ததாலும், வேலையிலும் விடுமுறை கிடைக்காததாலும், அவளால் தாமரையின் திருமணத்தில் கலந்து கொள்ள முடியாது போயிற்று.

அவரவர் ஆசைகள் நிறைவேறி, தோழியர் இருவருமே மகிழ்ச்சியுடன் இருந்த போதுதான், முதலில் சாருமதியின் வாழ்வில் சலசலப்பு ஏற்பட்டது.

நிறுவனத்தின் செலவைக் குறைக்க வேண்டியிருப்பதாகக் காரணம் சொல்லி, ஆள் குறைப்பு செய்தபோது, வேலையில் கடைசியாகச் சேர்ந்த சாருமதிக்கு வேலை போயிற்று.

சாருமதி, அதிகமாகச் சேமித்து வைத்திருக்க வில்லை. இப்படி வேலையை இழக்கக் கூடும் என்று

அவள் சற்றும் எதிர்பாராததால், அவளால் சேமிக்க முடிந்த தொகையில் பெரும் பகுதியை, எதிர்காலத்துக்கு முதலீடு என்று, அவளது பகுதி நேர வகுப்புக்குச் சம்பளமாகக் கட்டி வந்தாள்.

எனவே, அவள் கையில் பணம் கொஞ்சமாகத்தான் இருந்தது.

முதல் வேலை, இலகுவாகக் கிடைத்த மாதிரி, அடுத்த வேலை கிடைப்பதாகவும் இல்லை.

திணறித் திகைத்து நின்றவளைத் தாமரை தன் வீட்டுக்கு அழைத்தாள்.

சென்னை பெரிய நகரம். வேலை வாய்ப்புகள் அதிகம் உள்ள இடம். அத்தோடு, கணவன் மூலமாகவும், அவனுக்குப் பழக்கமானவர்களிடம் வேலை கேட்கலாமில்லையா?

இப்படியெல்லாம் எண்ணித்தான், தாமரை தன் தோழியைத் தன் வீட்டுக்குக் கூப்பிட்டது.

தன் வீடு என்று ஒன்று இருப்பதும், அங்கே வந்து தங்குமாறு, ஒருவரை அழைக்கக் கூடிய நிலைமையில் இருப்பதுமே, அவளுக்குப் பெரும் பரவசமாய் இருந்தது. சினேகிதிக்கு, உதவப் போவது தன் கணவன் என்பது, அதைவிடவும் அவளுக்குப் பேரானந்தம் அளித்தது!

தோழியின் மன நிலையைச் சாருமதியால் புரிந்து கொள்ள முடிந்தது. தன் வசதி நோக்காமலே அவளுக்கும், அதில் சந்தோஷம்தான். ஆயினும், தாமரையுடைய கணவனுக்கும் இந்த ஏற்பாட்டில் உடன்பாடுதானா என்று

தெளிவுபடுத்திக் கொண்ட பிறகே, சாருமதி சென்னைக்குக் கிளம்பினாள்.

அதுவரை, சம்பந்தப்பட்ட எல்லாருக்குமே சந்தோஷம்தான்.

அதுவரை மட்டும்தான் சந்தோஷம்!

ஏனெனில் அதன் பிறகு நடந்ததெல்லாம் முடிவற்றுத் தொடர்ந்த ஒரு பயங்கரக் கனவு போலத் தான் சாருமதிக்குத் தோன்றியது.

அழகு என்று பார்க்கப் போனால், சாருமதியோடு ஒப்பிடும்போது, தாமரை சற்று சாதாரணம்தான். ஆனால், 'உலகப் பேரழகி, என் மனைவி' என்றும் இருக்கிறதல்லவா?

அப்படி ஒரு வாக்கியம் இருப்பதாக, மதியழகனுக்குத் தோன்றாமல் போனதுதான் சாருமதிக்குப் பெரும் துன்பமாக முடிந்தது.

முழுமையாகத் தெரிந்திருந்தால், தாமரைக்கு அவளை விடவும் அதிக வேதனையாகிப் போயிருக்கும்.

சொர்க்கத்தில் வாழ்வதாக எண்ணிக் கொண்டிருந்த தாமரைக்கு, அந்த மாதிரித் துன்பம் நேர்ந்து விடாமல் காப்பதற்காகச் சாருமதி, தன்னால் ஆனமட்டும் மதியழகனோடு, போராடிக் கொண்டிருந்தாள்.

பெற்றோர் இல்லாமல், அனாதை இல்லங்களில் வளர்ந்த பெண்களைப் பற்றி, இந்த மதியழகன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் என்று அவளுக்கு ஆச்சரியத்தோடு விசித்திரமாகவும் இருந்தது.

சோறு, துணி கொடுத்தால் போதும், மானம், மரியாதை, நியாய, அநியாயம் பற்றிக் கவலையே படமாட்டார்கள் என்று எண்ணினானா?

மற்றபடி, அங்கே வளர்ந்த ஒருத்தியைத் திருமணமே செய்து வாழ்கிறவன், இன்னொருத்தியிடம் தன்னோடு வாழச் சொல்லி எப்படிக் கேட்பான்?

சாருமதியைப் பார்த்ததுமே மயங்கி விட்டானாம். வாழ்க்கை முழுவதற்கும், அவளது சாப்பாடு, துணிமணிக்குக் கவலையில்லாமல் பார்த்துக் கொள்ளுவானாம். வள்ளி தேவானை மாதிரி, இருவரையுமே நல்லபடியாக வைத்துக் கொள்ளுவானாம்!

முதலில் சாருமதி, இதை மெய்யென்றே நினைக்கவில்லை. அவளை, ஒரு மைத்துனியாக எண்ணி வேடிக்கை செய்கிறான் என்றுதான் நினைத்தாள்.

அப்படி நினைத்ததாலேயே, "வள்ளி தேவானையா? கொஞ்ச நாளில், இன்னொரு பெண் மீது ஆசை வந்தால், உதாரணமாக, எந்தக் கடவுளைக் காட்டுவீர்கள்? நம் புராணங்களில் மூன்று பெண்டாட்டிக்காரர் கடவுளே கிடையாதே!" என்று கிண்டலடித்தாள்.

ஆனால், அவன் அவளைக் கூர்ந்து நோக்கி விட்டு, "ஆக இதுதான், உன் கவலையா? நான், இன்னும் வேறு யாராவது ஒருத்தியையும் கொண்டு வந்து விடுவேனோ என்று பயப்படுகிறாயாக்கும்? உனக்கு அந்தப் பயமே வேண்டாம். அழகுக்கு நீயும், வேலைக்குத் தாமரையும் இருக்க, எதற்காக எனக்கு இன்னொருத்தி? அத்தோடு நீயும், அவளும் என்றால், ஏற்கனவே ஒன்றாக இருந்து பழகியவர்கள். சண்டை சச்சரவு இல்லாமல் ஒற்றுமை

யாக வாழ்வீர்கள். எனக்கும் வாழ்க்கை வண்டி நிம்மதி யாக ஓடும். போதுமா, விளக்கம்? இப்போது என்ன சொல்லுகிறாய்?'' என்று அவன் காரண காரியத்தோடு விளக்கவும், சாருமதிக்குத் தலை சுற்றிவிட்டது.

கடவுளே! இவன் நிஜமாகவேதான் கேட்கிறான்!

''பாருங்கள், மதியழகன், தாமரை உங்களை உயி ராக நேசிக்கிறாள். நீங்கள் இப்படிப் பேசுவது தெரிந் தால், அவளுக்கு எப்படி இருக்கும்? அதைக் கொஞ்சம் யோசித்துப் பார்த்து விட்டு, அப்புறம் பேசுங்கள்'' என்று கோபத்தை அடக்கிக் கொண்டு, முடிந்தவரை நிதானமாக எடுத்துச் சொன்னாள்.

ஆனால் ''எப்படி இருக்கும்? நான் ஒன்றும், அவ ளைத் துரத்திவிட்டு, உன்னைச் சேர்த்துக் கொள்வதாகச் சொல்லவில்லையே! எனக்கும், அவளிடம் பிரியம்தான். வீட்டையும் என்னையும், எவ்வளவு நன்றாகப் பார்த்துக் கொள்கிறாள்! இவ்வளவு அழகாக இருக்கும் உன்னை விட்டு விடவும் என்னால் முடியாது. அதனால்தான், இரண்டு பேரையும் வைத்துக் கொள்ளுகிறேன் என்கி றேன்'' என்று மேலும் விவரித்தான், அந்த அயோக்கி யன்.

சாருமதிக்குக் கொதித்துக் கொண்டு வந்தது. ஆனால், தாமரையின் மன அமைதியை முதன்மையாகக் கொண்டு, மதியழகனிடம் பொறுமையாகவே பேசி னாள்.

''மிஸ்டர் மதியழகன், எங்கள் 'இல்ல'த்தில் எங்க ளுக்கு, ஒழுக்கத்தைப் பற்றி, ரொம்பவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதனால், நீங்கள் சொல்லுவது

போல, 'சேர்ந்து வாழ்வது', 'வைத்துக் கொள்வது' எல்லாம் கேட்கவே எனக்கு அருவருப்பாக இருக்கிறது. என்னால் முடியாது'' என்று, விஷயத்தை அத்தோடு முடிக்க முயன்றாள்.

ஆனால், ''ஓகோ, கல்யாணம் இல்லாமல், கூடி வாழக் கூடாது என்று, சொல்லிக் கொடுத்திருக்கிறார்க ளாக்கும். போகட்டும், உங்கள் ஆசிரமத்து அம்மாள், தாமரையைப் பதிவுத் திருமணம் செய்து வைத்து விட் டாள். அதனால், உனக்கு வேண்டுமானால் ஏதாவது கோயிலில் வைத்துத் தாலியைக் கட்டி விடுகிறேன்'' என்று பெருந்தன்மையாகச் சொன்னான், அந்தத் தாராள மனசுக்காரன்!

''திருமணம் என்பது, ஒருவனுக்கும், ஒருத்திக்கும் மட்டுமாகத்தான் நடக்க வேண்டும், மதியழகன்! என்னை மணப்பவர், எனக்கு மட்டும்தான் கணவராக இருக்க வேண்டும்'' என்றாள் அவள், பல்லைக் கடித்துக் கொண்டு.

''அப்படியானால், நான் தாமரையை விலக்கி விடு கிறேன்'' என்றான் அவன் சர்வசாதாரணமாக.

திகைத்துப் போய், ''அவளிடம் பிரியம் உண்டு என்கிறீர்களே?'' என்று சாருமதி கேட்க, ''உண்டுதான். ஆனால், உன் அழகு அதைவிட அதிகமாகப் பிடிக்கி றதே! பார், சாருமதி, எனக்கு நீ வேண்டும். தாமரை யோடு சேர்ந்து, நீயும் கிடைத்தால், எனக்கு இரட்டிப்பு சந்தோஷம்தான். அது, முடியாதது என்றால், எனக்கு நீ மட்டும் போதும்'' என்றான் அவன் விளக்கமாக.

''தாமரைக்கு, என் மீது பைத்தியம். அவளிடம், இப்போது என் ஆசையைச் சொன்னால், அவளே,

எனக்காக உன்னிடம் தூது வருவாள்'' என்று வேறு பீற்றிக் கொண்டான்.

சாருமதி, தன்னால் ஆன மட்டும் சொல்லிப் பார்த்தும், மதியழகன் தன் நிலையிலேயே நின்றான்.

தாமரைக்கு, அவளுடைய கணவனின் இந்த போக்கிரித்தனம் பற்றித் தெரியவிடாமல் காப்பதே, சாருமதிக்குப் பெரும் பாடாயிற்று.

ஏதாவது வேலை கிடைத்தாலாவது அங்கிருந்து வெளியேறி விடலாம் என்று பார்த்தால், அதற்கும் வழியற்றுப் போயிற்று.

வேலியே பயிரை மேய்ந்த கதையாக, வேலையைத் தேடித் தர வேண்டியவனே, அது கிடைக்காமல் இருப்பதற்கு ஆன முயற்சி அத்தனையும் செய்தானே!

மீண்டும் 'இல்ல'த்துக்கே சென்று கதவைத் தட்டலாம் என்று எண்ணிப் பார்த்துவிட்டு, அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

தொழில் கல்வி ஒன்று பயிற்றுவித்து விட்டால், வேலை கிடைத்து வெளியேறிய பிறகு, மீண்டும் அங்கே அடைக்கலம் புக முடியாது. அப்படிப் பெரியவர்கள் எல்லாம் அங்கேயே உட்கார்ந்து விட்டால், அப்புறம் ஆதரவற்ற இளம் சிறார்களுக்கு, அங்கே இடம் எப்படி இருக்கும்? எனவே, அந்த மாதிரி ஒரு விதியை அமைத்ததற்காக அவர்களைக் குற்றம் சொல்ல முடியாது.

இந்த நேரத்தில்தான், எதிர்வீட்டுப் பெண்மணி, சாருமதிக்குப் பழக்கமானது.

சகுந்தலாவுடைய கணவர், ஒரு கல்யாணத் தரகர் என்று தாமரை அவளிடம் சொல்லியிருந்தாள்.

திருமணம் பேசுகிறவருக்குப் பலதரப்பட்ட மனிதர்களையும் தெரிந்திருக்குமே, பேச்சுவாக்கில் வேலை பற்றி ஏதாவது, யாராவது கேட்டால் சொல்லக் கூடுமே என்று தோன்ற, சாருமதி அந்தப் பெண்மணியிடம் தன் தேவை பற்றிச் சொல்லி வைத்தாள்.

தோழிக்குப் பாரமாக இருக்க விரும்பாததால், கொஞ்சம் குறைவான சம்பளம் என்றாலும், முடிந்த அளவு சீக்கிரமாக ஏதாவது ஒரு வேலை தேடித் தரும்படி கணவன், மனைவி இருவரிடமும் ரொம்பவே கேட்டுக் கொண்டாள்.

சகுந்தலா, சற்று புத்தியுள்ள பெண்மணி, பெண் குழந்தைகள் இல்லாத அவளுக்கு, தாமரையிடம் பிரியம் உண்டு. அவள் வீட்டுக்கு, அன்றலர்ந்த பூ மாதிரி வந்த சாருமதியிடமும் அன்புதான்.

மறைக்க முயன்ற போதும், வந்த போது இருந்த மலர்ச்சி மாறி, சாருமதியின் முகத்தில் இறுக்கம் படருவதையும், மதியழகன் வீட்டில் இருக்கும் நேரங்களில், அவள் இங்கே வந்து பேசிக் கொண்டிருப்பதையும் கவனித்து, உண்மையை ஊகித்து அறிந்தாள்.

ஆனால், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், சின்னவளுக்கு அனுசரணையாக நடந்து கொண்டாள்.

மனைவி ஒருத்தி இருக்கும்போதே, மதியழகன் இப்படி இருக்கிறான். வேலை கிடைத்து வெளியேறினாலும், இந்த உலகத்தில் எத்தனை மதியழகன்களோ? இவள் எப்படி சமாளிக்கப் போகிறாளோ என்று அவள் கவலைப்படுவதும் உண்டு.

சாருமதிக்கு, நல்ல இடத்தில் நல்ல வேலையாகப் பார்த்துக் கொடுக்கும்படிக் கணவனிடம் சிபாரிசு செய்வாள். அவரும் அதுபோலத் தேடிக் கொண்டுதான் இருந்தார்.

இந்த நிலையில்தான், தாமரை கருவுற்றிருப்பது தெரியவந்தது.

மதியழகனின் வெளிப்படையான மகிழ்ச்சியைக் காணவும், சாருமதிக்கு 'அப்பாடி'யென்றிருந்தது. இனித் தன் குடும்பம், தன் பிள்ளை என்று எண்ணத் தொடங்கி பிள்ளையைப் பெறும் தாய் தேவதையாகி விடுவாள்!

எப்படியும், தன் பிள்ளைக்கு ஒரு மோசமான முன்மாதிரியாக இருக்க, அவன் விரும்பமாட்டான் தானே?

ஆனால், அந்த மாதிரி எண்ணங்கள் ஒன்றும் தனக்குக் கிடையாது என்றான் மதியழகன்.

பிள்ளை, அதுபாட்டில் பிறந்து வளர வேண்டியது தான். அதற்காகத் தன் ஆசைகளை அடக்கிக் கொள்வது முடியாத காரியம் என்றவன், சாருமதிக்குக் கெடு விதித் தான்.

அவனது நிறுவனத்துக்கு, மதுரையில் ஒரு கிளை தொடங்குவது தொடர்பாக, அங்கே செல்லும் குழுவில் அவனும் செல்லுகிறான். திரும்பிவர, மூன்று வாரங்கள் ஆகும். திரும்பி வந்ததும், தாமரையிடம் சொல்லிவிட்டு இரண்டாம் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யப் போகி றான்.

அவன் திரும்பி வரும்முன், சாருமதி வீட்டை விட்டு கிளம்பி வேறு எங்காவது போக நினைத்தால்,

அப்புறம் விளைவுகள் பயங்கரமாக இருக்கும். அவன் கையில், தாமரை படுகிற பாட்டில், சாருமதி தானாக வந்து, அவனுக்குக் கழுத்தை நீட்டுவாள்!

பாவி! மனைவி என்று இல்லை, மகவைத் தாங்கும் தாய் என்று இல்லை, கொடுமைப்படுத்துவானாமே! சொல்லவும் வாய் வருகிறதே!

எந்த நிலையிலும், சாருமதி மதியழகனை மணப்ப தாக இல்லைதான்.

ஆனால், தன் கணவன் தோழியை விரும்புகிறான் என்று அறிய நேர்வதே தாமரைக்கு இழைக்கப்பட இருக்கும் பெரும் கொடுமை அல்லவா?

அதைத் தடுக்க முடியுமோ, இல்லையோ, குறைந்த பட்சமாய் அந்த வீட்டிலிருந்து வெளியேறிவிடக் கருதி, வேலைக்காகச் சாருமதி, பெரு முயற்சி செய்தாள்.

பட்டணத்தில் வேலை கொட்டிக் கிடப்பதாக, அவ ளைப் போலவே, பல்லாயிரம் பேர் நினைத்திருப்பார்கள் போலும். எத்தனை படி ஏறி, இறங்கியும் ஒரு பயனும் இல்லாது போயிற்று. எங்கே வேலை தேடிச் சென்றாலும், அவளுக்கு முன்னே, பத்து பேர் வந்து காத்திருந்தார்கள்.

இப்போதும், தாமரையின் வீட்டைவிட்டு வெளி யேறி விடலாம்தான். ஆனால், கையில் பணமே இல்லா மல், வெளியே போய்ப் பிச்சை எடுத்தா பிழைப்பது? அவளிடம், இருந்த சிறு தொகையையும், வேலை விஷய மாகச் செலவு செய்யவென்று, தன் சுயரூபத்தைக் காட்டு முன்பாகவே, மதியழகன் பறித்து விட்டிருந்தானே!

மதியழகனின் கெடுவில், இரு வாரங்கள் பறந்து சென்றுவிட, செய்வது அறியாது சாருமதி கலங்கிப்

போனாள். இனி, நாசூக்குப் பார்ப்பது கூடாது, என் றெண்ணி எதிர் வீட்டு சகுந்தலாவிடம் போய் நின்றாள்!

அப்போதுதான், இந்த மாபெரும் சிக்கலில் இருந்து மீள, தரகர் வைத்தியலிங்கம் அவளுக்கு ஒரு வழியைக் காட்டினார்!

அதுதான் அவளது திருமணம்!

6

தரகர் வைத்தியலிங்கம், பெரும் இக்கட்டில் மாட் டிக் கொண்டிருந்தார்.

நகரின் முக்கியமான புள்ளிகளில் ஒருவர், விசுவ நாதன். அவருடைய மனைவி மதுரமும், மகளிர் மன்றம், பொதுத் தொண்டு என்று தன்னளவிலும் செல்வாக்குப் பெற்றவளே.

இந்த இருவருடைய வாரிசான நித்யானந்தனும் தொழிலில் கெட்டிக்காரன் என்ற பெயரைச் சிறு வயதி லேயே எடுத்துக் கொண்டிருந்தான்.

இப்படிப் பட்டவனுக்கு மாலையிட பெண்கள், விரும்பி வந்து வரிசையில் நிற்கக் கூடும். அது, இரண் டாம் தாரமே என்றாலும்.

ஏனெனில் செல்வம், செல்வாக்கு உடையவன் என்பதோடு, நித்யானந்தன் ஒழுக்கம் பேணுகிறவனும் கூட.

அவனுடைய முதல் மனைவியை எப்படிப் போற்றி வைத்திருந்தார்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷ

யம். அவள் எப்பேர்ப்பட்ட அழகி என்பதும்கூட உலகப் பிரசித்தம்.

இரண்டாவதாக, அவன் மணக்கக் கூடியவளும், அழகில் முன்னவளை மிஞ்சியவளாக இருப்பாள் என்று தான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள்.

விசுவநாதன் வீட்டிலிருந்து அழைப்பு என்றதுமே, வைத்தியலிங்கம், அவர் அறிந்த பெண்களில் அந்த மாதிரி அழகான பெண்களை, மனதில் பட்டியலிட்டுக் கொண்டுதான் சென்றார்.

ஆனால், மதுரம் கேட்டது அவரைத் திணறடித்து விட்டது.

அழகான இளம் பெண்கள் எத்தனையோ பேர் இருந்தார்கள்.

இல்லாத அழகையும், இளமையையும் இருப்பது போலக் காட்டக் கூடியவர்கள் உண்டு.

ஆனால், முப்பது வயதை நெருங்கிய அழகற்ற பெண்ணல்லவா வேண்டுமாம்!

சென்ற முறை வாய்த்த அழகும், இளமையும் ராசியில்லாமல் போய்விட்டதால், இப்போது, இப்படித் தேடுகிறார்களோ?

ராசிக்காக, இப்படி ஒருத்தியை மணந்தாலும், நாளைக்கு அந்தப் பெண்ணின் முகம் பார்த்துப் பேசும் போது, மனதுக்குச் சங்கடமாக இருக்காதா?

உள்ளூர என்ன எண்ணிய போதும், அதை, முகத் தில் சிறிதும் காட்டாமல் மறைத்து, நாலே நாளில்

வருவதாகச் சொல்லி, முறுவல் பூத்த முகத்தோடு விடை பெற்றுச் சென்றார்.

அழகற்ற, முப்பதை ஒட்டிய பிராயத்துப் பெண்! அவர் அறிந்த பெண்களில், அப்படி யார், இந்த மாதிரி யார் இருக்கிறார்கள்?

உலகில், அழகற்ற பெண் என்று யாருமே கிடையாது என்பாள், அவருடைய மனைவி! அழகுபடுத்திக் கொள்ளத் தெரியாதவர்கள்தான், உண்டாம்!

விஷயம் அப்படியிருக்க, அழகற்ற பெண்ணை அவர் எங்கே போய்ப் பிடிப்பது?

முடியாதென்று விட்டுவிட, அவருக்குப் பிடிக்க வில்லை.

இந்தத் தொழிலில், அவர் ஒருநாளும் தோற்றதில்லை!

அவரவருக்குப் பொருத்தம் பார்த்து, வைத்தியலிங்கம், எத்தனையோ கல்யாணங்களைச் செய்து வைத்திருக்கிறார்!

நித்யானந்தனுக்குப் போய், இப்படி ஒரு பெண்ணைத் தேட, அவருக்கே மனம் வரவில்லைதான்.

ஆனால், அவர்கள் கேட்பது இதுதான். அதை நிறைவேற்றுவது தவிர, அவரால் வேறு என்ன செய்ய முடியும்?

வெகுவாகத் தேடி, அந்தக் குடும்பத்துக்குத் தேவை என்று அவர்கள் கூறியது போலவே, ஒரு பெண்ணை அவர் கண்டுபிடித்தார்!

விவரம் அறிந்ததும், சிந்திப்பதற்கு ஒரு நாள் அவகாசம் கேட்ட, அந்தப் பெண், மறுநாள் தானாகவே வந்து சம்மதம் தெரிவித்தாள்.

அதில் அதிசயப்பட எதுவுமில்லை, நித்யானந்தனின் படத்தைப் பார்த்தே மயங்கிவிட்டிருப்பாள்.

மற்ற விவரங்கள் அறிந்ததும், நமக்கு இவ்வளவு அதிருஷ்டமா? விட்டுவிடக் கூடாது என்று ஓடி வந்திருப்பாள்!

இந்த எண்ணத்தோடுதான், வைத்தியலிங்கம் மேற்கொண்டு திருமண வேலைகளை நடத்தத் தொடங்கியது.

திருமதி, விசுவநாதன், மகளோடு வந்து பெண்ணைப் பார்த்துவிட்டுப் போனாள்.

திருமணத் தேதியைக் குறித்துவிட்டுப் போனதோடு, சுளையாக வைத்தியலிங்கத்தின் கமிஷனையும் அனுப்பி வைத்தாள்.

எத்தனையோ பேர், என்னென்னவோ செலவு செய்தபோதும், அவருக்குக் கொடுக்க மட்டும் மூக்கால் அழுவார்கள்! பலர் திருமணம் நிச்சயமான பிறகு, அவர் ஒருத்தர் இருப்பதைக் கண்டுகொள்ளவே மாட்டார்கள். இத்தனைக்கும், அந்தக் கல்யாணமே முழுக்க முழுக்க வைத்தியலிங்கத்தின் முயற்சியினாலேயே ஏற்பாடான தாக இருக்கும்!

எனவே, கையில் பணமும் வந்து விடவே அவர், மிகுந்த உற்சாகத்துடன் இருந்தார்.

ஒரே ஒரு சிறு வருத்தமும் இல்லாமலில்லை.

நித்யானந்தனுக்கு இன்னும் கொஞ்சம் பொருத்த மான பெண்ணாகப் பார்த்திருக்கலாம். எதிர் வீட்டுத் தாமரையுடைய சினேகிதி போல அழகு. இளமை, துடிப்பு நிறைந்தவளாக, அவளையே கூடப் பார்த்திருக்க லாம்!

என்ன செய்வது? ஆட்டுக்கு வால், அளந்துதான் வைத்திருப்பான், ஆண்டவன் என்பது போல அவன் தலைவிதி. அந்த உம்மணா மூஞ்சியுடன் குடும்பம் நடத்துவது. அந்த உம்மணாமூஞ்சியின் அதிர்ஷ்டம். அந்த வீட்டு மருமகளாவது! இந்தச் சாருமதியின் அதிர்ஷ்டம். இந்த மாதிரி கஷ்டப்படுவது!

இதில் அவர் வருத்தப்பட்டு, ஆவது ஒன்றும் இல்லை.

தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டு, திருமணத்தில் மேற்கொண்டு மதுரம் கேட்ட சில உதவி களை, வைத்தியலிங்கம் தொடர்ந்து செய்தார். மேளம், ஐயர், பெண் வீட்டுடன் தொடர்பு இத்யாதி.

கூடவே, நித்யானந்தனுடன் இணைந்து நினைத்துப் பார்த்து விட்டதாலோ, அல்லது, மனைவியின் வற்புறுத்த லாலோ, என்னவோ, சாருமதியின் நினைவு அடிக்கடி வர, தன் அடுத்த வேலை, அவளுக்கு ஒரு வழிகாட்டுவ துதான் என்று உள்ளூர உறுதி எடுத்துக் கொண்டார்.

அதற்கான வாய்ப்பு விரைவிலேயே வரப் போகி றது என்பது அவருக்குத் தெரியாது!

திருமணத்துக்கு இன்னும் ஒரே வாரம் என்கிற போது, திருமணச் சேலைக்கான பணம், பெண் வீட்டில்

சேர்த்துவிடும்படியான கோரிக்கையோடு, டிரைவர் மூலம் வைத்தியலிங்கத்துக்கு, வந்து சேர்ந்தது. பெண் வீடு சென்று வருவதற்காக அவருக்கு ஒரு சிறு தொகை!

பெரிய மனிதர்கள், பெரிய மனிதர்கள்தான் என்று எண்ணியபடி, பெண் வீட்டை அடைந்தவருக்கு, வீடு பூட்டிக் கிடக்கவும், ஏனோ, உள்ளூர மனம் கலங்கியது.

திருமண வேலையாக எங்கேனும் சென்றிருப்பார் கள் என்று காரணம் கற்பித்துக் கொண்டு, அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது அவர் தலையில் இடி விழுந் தது.

முதலில் இருந்தே, சாரதாவுக்குத் திருமணத்தில் நாட்டம் கிடையாது. அமெரிக்காவில் வேலைக்காகப் பெரிதும் முயன்று கொண்டிருந்தவள். அது கிடைக்காது என்ற எண்ணத்தில்தான் கல்யாணத்துக்குச் சம்மதித்தது. அவள் யோசிப்பதற்குக் கேட்ட அந்த ஒரு நாள் அவகா சம், இது பற்றி யோசிக்கத்தான்.

ஆனால், அவள் அதிர்ஷ்டம், திருமணம் நிச்சய மான பிறகே, அவள் விரும்பிய வேலை உறுதிப்பட்டது. வெளியே தெரிந்தால், தடுத்துப் பிடித்து வைத்து விடு வார்களோ என்று கமுக்கமாக வீட்டைக் காலிபண்ணிக் கொண்டு, அப்பாவும், பெண்ணும் விமானம் ஏற, பம் பாய்க்குக் கிளம்பிப் போய்விட்டார்கள!

இப்போது, என்ன செய்வது?

முதலிலேயே, மதுரம் எச்சரித்திருந்தாள்!

மகனுக்கு, இரண்டாம் திருமணத்தில், அவ்வளவாக விருப்பம் கிடையாது, தன் கட்டாயத்துக்காகத்தான், ஒரு

மாதிரி இறங்கி வந்திருக்கிறான். எனவே, எந்தவித இடைஞ்சலும் இல்லாமல், 'கிரீஸ் தடவிய இயந்திரம் மாதிரி, கல்யாணம் ஒரு சின்னத் தட்டல், தடங்கல் கூட இல்லாமல் நல்லபடியாக நடக்க வேண்டும்' என்று சற்று அழுத்தம் திருத்தமாகவே, சொல்லியிருந்தாள்.

இப்போதானால், பெண்ணையே காணவில்லையே!

அதுவும், எவ்வளவு, கஷ்டப்பட்டுத் தேடிப் பிடித்த பெண்!

மனதில் கொஞ்சம் வருத்தத்துடனேயே தேடிப் பிடித்தவள் வேறு!

எதிர் வீட்டு சாருமதியைப் போல அவனுக்குப் பொருத்தமான பெண்கள் பலரையும் விட்டுவிட்டு இவளைத் தேர்ந்தெடுத்தால், என்னமோ ஒன்றுக்கு, முழுத் தேங்காய் ஒட்டுமா, என்பது போல நடந்து கொண்டு விட்டாளே! பாவி!

தரகர் வைத்தியலிங்கத்திடம் சொன்னாலே போதும், திருமணம் நடந்துவிட்டாற் போல என்று இவ்வளவு காலம் பாடுபட்டுச் சம்பாதித்த பெயர் அநியாயமாய்க் கெட்டுப் போய்விடுமே!

திருமணம் நின்று போவதைவிட வைத்தியலிங்கத்துக்கு இதுதான் பெருங் கவலையாக இருந்தது.

வயிற்றுக்குச் சோறு போடும் தொழிலல்லவா. அழிந்து போகும்!

அத்தோடு, கை நீட்டி வாங்கிய கணிசமான பணத்தை வேறு, திருப்பிக் கொடுத்தாக வேண்டும்.

அதை, வாங்கிக் கொள்வதோடு விட்டுவிடுவார்களா, அல்லது மான நஷ்ட வழக்கு, அது, இது என்று விசுவநாதன் குடும்பம் கிளம்பினால், வைத்தியலிங்கம் அத்தோடு அழிந்தார்! அடியோடு!

பணம், குடும்ப நிலை, எதுவும் பிரச்சினை அல்ல என்ற பிறகு, தோற்றத்திலும், குணத்திலும் இந்தப் பெண் சாருமதியைப் போல, நித்யானந்தனுக்குப் பொருத்தமானவள், உலகில் எங்கே கிடைப்பாள்? அவளை விட்டு விட்டு, இந்தக் குரங்கைப் போய்க் காட்டினாரே, அவரைச் சொல்ல வேண்டும்!

சாதாரண அலங்காரத்தில் சாருமதியைக் காட்டியிருந்தால் கூட, அழகற்றவள், வயது கூடுதல் என்பதெல்லாம் மறந்து, இவளையே கட்டிக் கொள்ள முடிவு செய்திருப்பார்கள். என்றெல்லாம் மனதோடு புலம்பிக் கொண்டு இருந்தவருக்குச் சட்டென, ஓர் ஐடியா தோன்றியது.

இந்தச் சாருமதியையே, திருமணப் பெண்ணாக்கி விட்டால் என்ன?

அந்தப் பெண்ணையும், அந்த ராஸ்கலிடமிருந்து காப்பாற்றியதாக ஆகும்! மற்றபடி மீந்திருக்கும் இந்த ஒரு வாரத்துக்குள்ளாக, அவளுக்கு எங்கே, என்ன வேலை வாங்கிக் கொடுத்து மதியழகனின் கண்படாத எந்த இடத்துக்கு அனுப்பி வைக்க முடியும்?

ஆதரவற்றவள் என்று வாலை ஆட்டுகிறவன், அவளுக்குத் திருமணமாகி விட்டது. அதிலும் நல்ல இடத்தில் என்றால் அவள் இருக்கும் இடத்தை எட்டிப் பார்க்கக் கூட அஞ்சுவான்.

அவளோடு சேர்த்து, அந்த அப்பாவி தாமரையையும் வேதனைப் படாமல் காப்பாற்ற, இது தவிர, வேறு என்ன வழி இருக்க முடியும்?

யோசிக்க, யோசிக்க, வைத்தியலிங்கத்துக்கு இது, மிக நல்ல ஐடியா என்றே தோன்றத் தொடங்கியது.

மதுரத்தைப் பொறுத்த அளவில் அவளுக்குச் சாரதா மருமகளாக வருவது அவ்வளவாகப் பிடித்தம் என்றும் சொல்ல முடியாது. ஏனெனில் பெண்ணைப் பார்க்க, அவள் வந்தபோது அவள் முகத்தை, வைத்தியலிங்கம் கவனித்துக் கொண்டேதான் இருந்தார்.

சாரதாவைப் பார்த்ததும், அவள் முகம் சட்டென ஒளியிழந்ததும், உடனேயே அவள் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டதும், தரகரின் கூரிய கண்களுக்குத் தப்பவில்லை.

அத்துடன், தாயையே எதிரொலித்த அனுபமாவின் முகத்தோற்றமும் - பாவம், சின்னப் பெண், பெரியவர் கள் போல அவ்வளவு சீக்கிரமாக, முகபாவத்தை மாற்றிக் கொள்ளத் தெரியவில்லை. வருத்தத்தைத்தான் காட்டி யது.

சாரதாவின் தோற்றம்தானே, காரணம்?

என்னதான், ராசி ஜோசியம் என்று இதுபோலப் பெண் தேடினாலும், வீட்டுக்கு விளக்கேற்ற வரப் போகி றவள், பார்வைக்கு லட்சணமாக இருக்க வேண்டும் என்ற ஆசை, இருக்கத்தானே, செய்யும்?

உள் மனதில் இருக்கும் அந்த ஆசைப்படியே, ஒருத்தி மணமகளானால் கோபமா வரும்? உள்ளம் குளிரத்தானே, செய்யும்?

என்ன, உன்னிடம் நான் என்ன கேட்டேன் என்று அவரிடம், கொஞ்சம் கோபம் வரலாம் அதுவும் கூட, சாருமதியின், அழகோடு இணைந்த குணத்தைக் கண்டு, கொஞ்சநாளில் மாறிவிடும்.

வெகு நேரம், யோசித்த வைத்தியலிங்கத்துக்கு, நித்யானந்தனுக்குச் சாருமதியைத் திருமணம் செய்து வைப்பதன் மூலம், தான் அந்தக் குடும்பத்துக்குப் பேரு தவி செய்யப் போவதாகவே தோன்றலாயிற்று.

தற்சமயம் இல்லாவிட்டாலும், விரைவிலேயே அவர்கள், அதை உணர்ந்தே தீருவார்கள் என்று அவர் நிச்சயமாக நம்பினார்.

அதுவரை, அவர்கள் கண்ணில் படாமல், ஒதுங்கியி ருந்து விட்டால் போயிற்று!

நித்யானந்தனின் மனைவியால் அப்படி ஒதுங்கியி ருக்க முடியாதுதான். ஆனால், சாருமதி படித்த பெண், நல்ல அழகி, நித்யானந்தனுடைய மனைவி என்ற உரி மையோடு அந்த வீட்டிற்குள் செல்லப் போகிறாள்.

அதற்கு மேல், 'மகளே, உன் சமர்த்து'!

சாருமதியை மணமகள் ஆக்குவது என்று தீர்மா னித்த பின், அதை நிறைவேற்றும் வழி, அதற்கு வரக்கூ டிய தடைகள் பற்றி வைத்தியலிங்கம் ஆராய்ந்தார்.

பெண் மாறிவிட்டது என்று பிள்ளை வீட்டார் கலாட்டா செய்யக் கூடும்.

ஆனால், அது சந்தேகம்தான். விசுவநாதன் குடும் பம், கவுரமானது. 'கல்யாண நேரத்தில் கலாட்டா' என் றெல்லாம் தரம் இறங்கித் தகராறு செய்ய மாட்டார்கள்!

நாலுபேர் நம்மைப் பற்றி நீட்டி முழக்கிக் கதை பேசுவார் களே என்ற எண்ணமே அவர்கள் வாயை அடைத்து விடும்!

ஆனால், அதற்காகத் திருமண விஷயத்தில் கூடப் பலியாடு மாதிரிச் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க மாட்டார்கள் தான். அந்த அளவுக்கு எதிர்பார்க்க முடியாது தான்.

ஆனால், அவர் ஒன்றும் நல்லதைக் காட்டிக் கெட்டதைத் தலையில் கட்டவில்லையே! ஒப்பிடவே முடியாத அளவுக்கு, உயர்ந்ததையல்லவா கொடுக்கிறார்! இதில் கோபப்படவோ, குறை சொல்லவோ எப்படி முடியும்?

அதிலும், பால் நிலா மாதிரி சாருமதியின் முகத்தைப் பார்த்தாலே, வருகிற கோபமும் பறந்து போய் விடாதா? அவளது முகராசியே, மற்ற ராசிகளை மறக்கடித்து விடாதா?

நித்யானந்தன் பெண்ணைப் பார்த்ததில்லை. ∴போட்டோ கூட, அவர்கள் வாங்கிப் போகவில்லை. குடும்பத் தலைவரும் அப்படித்தான்.

இவள்தான் பெண் என்றால் பிள்ளை சந்தோஷமாகத் தாலியைக் கட்ட அப்பாவும், அப்படியே 'ஆஹா' என்று, ஆசீர்வாதம் பண்ணிவிடப் போகிறார்!

பார்த்தவர்கள், அம்மாவும் பெண்ணும் தான். இரண்டு பேருக்குமே, அந்தப் பெண்ணிடம் அவ்வளவாகத் திருப்தி கிடையாது. பிறகு திருமணத்தை அவர்கள் ஏன் நிறுத்தப் போகிறார்கள்? நிச்சயமாய் மாட்டார்கள்.

ஆக, மாப்பிள்ளை வீட்டாரிடம் இருந்து திருமணத்துக்குத் தடை ஏற்படாது.

இனிமேல், சாருமதி!

அவளுக்கும், இதில் என்ன தடை இருக்கப் போகிறது?

தாமரையின், வீட்டை விட்டு வெளியே போனால் சோற்றுக்கே லாட்டரி. இவ்வளவு வசதியான, வளமான இடம் என்று தெரிந்தால், ஓடிப் போய் மணையில் உட்கார்ந்து விட மாட்டாளா?

யோசிக்கும் போதே, வைத்தியலிங்கத்துக்கு உள்ளூர நெருடியது. அப்படித் தன் சுகத்தைப் பெரிதாக நினைக்கிறவள், இவ்வளவு சிரமப்பட்டு வேலை தேடுவானேன்? வேகாத வெய்யிலில் படிப்படியாக ஏறி, இறங்கி உடல் "நோவானேன்? எவ்வளவு கஷ்டமான வேலையானாலும் செய்யத் தயார். ஏதாவது வேலை தேடித் தாருங்கள் என்று காலில் விழாத குறையாகக் கெஞ்சுவானேன்?

மதியழகனுக்கு, நல்ல வருமானம்தான். பேசாமல் அவன் சொற்படி, அவளையே கட்டிக் கொண்டு, அவனோடு குடித்தனம் பண்ணலாமே? முதலில் எதிர்த்தாலும், மெள்ள மெள்ளத் தாமரையைச் சமாதானப்படுத்தி விட முடியும் தானே?

அதை மறுத்து, அவள், இந்தக் கஷ்டம் படத் தேவையில்லை தானே?

மனதில் இந்தக் கேள்வி உறுத்திய போதும், இன்றைய நிலையில் சாருமதிக்கு வேறு வழியில்லை என்பது, வைத்தியலிங்கத்துக்குத் தென்பளித்தது.

முன்தினம் மாலையில், அந்தப் பெண் வந்து சொல்லி அழுததாக, அவர் மனைவி சகுந்தலா சொன்ன

தகவலை வைத்துப் பார்க்கும்போது, இந்த வாய்ப்பை அவள் இருகையேந்தி வரவேற்பாள் என்றுதான் அவருக்குத் தோன்றியது.

அதிலும், அந்த வில்லப் பயல் திரும்பி வருமுன், அந்த வீட்டை விட்டே கிளம்பிவிடும் வாய்ப்பை சாருமதி எப்படிக் கைநழுவ விடுவாள்?

நிச்சயமாய் விடமாட்டாள். அதனால், அவரது புதிய திட்டப்படி, இந்தத் திருமணம் நல்லபடியாகவே நடந்தேறும் என்று ஒருவாறு நிம்மதியடைந்தார், அவர்.

அதாவது, வைத்தியலிங்கத்திடம், ஒப்படைத்த திருமணம் நிச்சயமாக, நல்லபடியாக நடக்கும் என்கிற அவரது நல்ல பெயருக்கு, எந்தவித இழுக்கும் நேர்ந்து விடாது!

அதுவல்லவா, மிகமிக முக்கியம்?!

உள்ளூர உற்சாகமும், நிம்மதியுமாக மனைவியிடம் சென்று, விஷயத்தைச் சொன்னார்.

ஆனால், ''இரண்டாந் தாரமா?'' என்று, அவளே முகம் சுளிக்கவும், வைத்தியலிங்கம் திகைத்தார்.

இதுவே, பிடிக்கவில்லை என்றால் சற்று நிதானித்து, குழந்தை இருப்பதைச் சொல்லாமல் விடுத்தார்.

சாருமதியை அழைத்துவரச் சொல்லி, அவளிடமும் பேசினார்.

இரண்டாவது என்பது அவளையும் தயங்க வைப்பது கண்ட, மதியழகன் பெயரைக் கொஞ்சம் அதிகமாகவே பயன்படுத்தினார். அவள் கலங்கி நின்ற வேளையில், நித்யானந்தன் குடும்பத்தைப் பற்றிப் போற்றிப் பேசினார்.

கடைசியாக, நித்யானந்தனின் புகைப்படத்தை எடுத்துக் காட்டினர்.

நிச்சயமற்ற நிலைமாறி சாருமதியின் முகம் தெளிவடைந்தது.

வைத்தியலிங்கமும், 'அப்பாடி' என்று பெருமளவு, நிம்மதியுற்றார்.

ஆனால், முழுமையாக அல்ல. 'கைக்கும் வாய்க்கும் இடையே எவ்வளவு தூரம்' என்பது போல, இன்னமும் இந்தத் திருமணத்துக்கு நேரக்கூடிய தடைகள் எத்தனையோ இருந்தன.

ஏன், மதுரமே வருங்கால மருமகளை, இன்னொரு தரம் பார்க்க ஆசைப்பட்டு விடலாம்! அப்படி வந்து பார்த்த வினாடியே, அவரது சாயம் வெளுத்துவிடுமே!

என்னவோ, மாப்பிள்ளை வீட்டில், இது இரண்டாவது என்பதால் ஏற்பட்ட ஆர்வமின்மையாலோ, என்னவோ அப்படி யாரும் வந்து, வைத்தியலிங்கத்தை வியர்க்க விறுவிறுக்க வைக்கவில்லை.

அவர்கள் யாரேனும் வந்து விடுவார்களோ என்ற பயத்திலேயே, தினம் தினம் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தார். அவர் வந்துவிடக் கூடாதே என்று வேண்டிக் கொண்டுமிருந்தார்.

திடுமென அவருக்கு இன்று தோன்றிவிட, சாருமதியிடம் சென்று ''அம்மா சாரு, உன் முழுப் பெயர் சாரதாதானேம்மா?'' என்று தேனொழுகக் கேட்டார்.

''இல்லையே!'' என்று அவள் தன் பெயரைச் சொல்லவும், ''அச்சச்சோ!'' என்று கையை உதறிக் கொண்டார்.

கேள்வியாய் நோக்கியவளிடம், ''சாரு, சாரு என்று மட்டுமே, உன் ஆன்ட்டி சொல்லவாளா? நான், சாரதா வாகத்தான் இருக்கும் என்று எண்ணி, மாப்பிள்ளை வீட்டில் சொல்லி விட்டேன். இப்போது போய், வேறு என்று சொன்னால் அவ்வளவு நன்றாயிராதே! பெயர் கூடச் சரியாகத் தெரியாத பெண்ணைப் போய், எங்கள் மருமகளாக்குவதா என்று அந்த அம்மாள் கேட்பார் களே! நீ பேசாமல், சாரதாவாகவே இருந்துவிடேன். உனக்குப் பெரிய வேறுபாடு ஒன்றும் தெரியப் போவது இல்லை. எப்படியும், அவர்கள், உன்னைச் செல்லமாகச் 'சாரு' என்றுதானே அழைக்கப் போகிறார்கள்? அவர் கள் அப்படிப்பட்ட அருமையான மனிதர்கள், அம்மா. அவர்கள் மனதில் அனாவசியமாகச் சஞ்சலத்தை உண்டு பண்ணுவானேன். நீ சாரதாவாகவே இருந்துவிடம்மா என்று முடித்தார்.

சாருமதி, சாரதா! வெறும் பெயர்களில் பெரிதாக எதுவும் சாருமதிக்குத் தோன்றவில்லை. அவள் மனதை வேறு ஒரு பிரச்சினை, பளுவாக அழுத்திக் கொண்டிருந் தது. அதை இப்போது, வைத்தியலிங்கத்திடம் நேரே கேட்டாள்.

''அங்கிள், திருமணத்துக்கு இன்னும், இரண்டே நாடகள்தான் இருக்கின்றன. அவர்கள் வீட்டிலிருந்து யாரும் வந்து, எட்டிக்கூடப் பார்க்கவில்லை!'' என்று தயக்கத்துடன் விசாரித்தாள்.

அனாதையாக இருந்தாலென்ன? ஆசிரமத்தில் வளர்ந்தால் என்ன? திருமணத்தைப் பற்றிய கனவுகள் எல்லோருக்கும் பொதுதானே? வருங்காலக் கணவன் தன்னை வந்து பார்க்கவில்லையே என்ற ஏக்கம், சாரும திக்குப் பெரிதாக இருந்தது.

ஏக்கம் மட்டும் அல்ல. குழப்பமும், பயமும் கூட.

இன்னும் நாற்பத்தி எட்டு மணி நேரத்தில் அவள், நித்யானந்தனுடன் மணமேடையில் உட்கார வேண்டும். ஆனால், திருமணம் நிச்சயமாகி, இந்த ஐந்து நாட்களில், மணமகன் வீட்டார் அவளைப் பார்க்க விரும்பியதாகக் கூடத் தெரியவில்லை!

ஏன்? திருமணம் பிடிக்கவில்லையா? அல்லது, அவளைத்தான் பிடிக்க வில்லையா?

பிடிக்காவிட்டால், ஏன் இந்த ஏற்பாடு செய்தார் கள்?

இந்தத் திருமணத்தை அவளாக நிச்சயித்து விடவில் லையே!

அல்லது, பின்னோடு துரத்திக் கொண்டு போய், மாப்பிள்ளையை விரட்டிப் பிடிக்கவும் இல்லையே!

பின்னே, ஏன் இப்படி? 'கடனே' என்று வேண்டா வெறுப்பாகக் கல்யாணம் செய்வது போலல்லவா, தோன் றுகிறது. ஏதோ, ஒரு கட்டாயத்துக்காக மணமுடிப்பது போல இருக்கிறதே...

மணமகனும் கூட, வருங்கால மனைவியிடம் எந்த வித அக்கறையும் காட்டவில்லையே! ஏன்?

தாமரை வேறு, அவளது காதல் திருமணம் பற்றி, எதையும் மறைக்காமல் பிதற்றி வைத்திருந்தாளா, சாருமதிக்கு, மனம் ரொம்பவுமே தவித்தது.

ஆனால், தாமரையின் பிதற்றல் இன்னொரு வகையில், சாருமதியின் மனதை அமைதிப்படுத்தவும் செய்தது.

அப்படி ஆசை, காதல் என்று விரட்டிப் பிடித்துத் திருமணம் செய்யவும் வேண்டாம், எண்ணி, ஆறே மாதத்தில் இன்னொருத்தியிடம் பல்லை இளிக்கவும் வேண்டாம்!

அதைவிட, கிணற்று நீரை, வெள்ளமா கொண்டு போய்விடும்! என்கிற மாதிரியாக இப்படி இருப்பதே மேல்! சீட்டுக் கட்டு மாளிகை போலப் பெரிதாகக் காட்டி பிறகு, ஒருசிறு காற்றில் ஒன்றுமில்லாமல் போய் விடுவதை விட, ஆர்ப்பாட்டம் இல்லாமல் வலுவான அடிப்படை மீது மெல்ல மெல்ல வளர்ப்பதுதான் உயர்வானதும் கூட.

ஆனால், அடிப்படை அமைப்பதின் அடையாளமேனும், இருக்க வேண்டும் அல்லவா? அப்படி ஒன்றுமே இல்லாததுதான், சாருமதியைக் கலங்கடித்துக் கொண்டிருந்தது.

மணமகனின் வீட்டிலிருந்து யாரும் வராதிருக்க வேண்டும் என்று, அன்றாடம் கடவுளை வேண்டிக் கொண்டிருப்பவரிடம், அப்படி யாரும் வரவில்லையே என்று வருத்தப்பட்டால் அவர் என்ன சொல்வார், பாவம்!

மாப்பிள்ளைக்கு இது, இரண்டாவது திருமணம். பெரிதாகக் காட்டிக் கொள்ளக் கூச்சம். முதல் தடவை ரொம்பவும் படாடோபமாகச் செய்தது அநியாயமாய் வீணாய்ப் போய்விட்டதால், இப்போது நேர்மாறாக இருந்து பார்க்கிறார்கள் என்று அவள் மனம் ஏற்கும்படியாக, ஏதேதோ கோவையாகக் கூறிச் சமாளித்தார்.

கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாகத் திருமணத் தரகராக இருந்து, இது கூட முடியவில்லை என்றால் எப்படி?

கூடவே, முன்தினம் அவரும் அவருடைய மனைவியுமாகச் சென்று வாங்கிவந்த திருமணச் சேலை, சட்டையோ பெண்ணைப் பார்க்க வந்த அன்று, மதுரம் கொடுத்து விட்டுப் போயிருந்த ஒரு ஜோடி தங்க வளையலோடு சாரதா அந்தர்த்தானம் ஆகியிருந்ததை, ஆராயாமல் அவளைக் காட்டியதை தன் குற்றமாகக் கருதி, தாராளமாகத் தரப்பட்ட 'கமிஷ'னில் இருந்து, தன் குற்றத்தின் பிராயச்சித்தமென அவர் வாங்கி வைத்திருந்த வளையலையும், அவர் காட்டவே சாருமதி ஓரளவு அமைதியடைந்தாள்.

திருமணத்தன்று காலையில் மணமகளுக்குத் தேவையான நகை, மற்ற அலங்காரப் பொருட்களுடன், ஒரு பெண்மணி வந்தாள்.

பெண்ணைப் பார்த்துச் சற்று வியப்புற்றவளாகத் தோன்றிய அவள், மணமகனின் நிறுவனத்தில் முக்கியப் பொறுப்பு வகிக்கும் உதவி நிர்வாகி ஒருவருடைய மனைவி என்று, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். அழகு நிலையம் ஒன்றில் வேலை பார்ப்பவள்

என்பதால், பெண்ணை அலங்கரிப்பதற்காக, மதுரம் தன்னை அனுப்பியதாகச் சொல்லி, வேலையைத் தொடங்கினாள்.

சற்று எளிமையான அலங்காரம்தான். செய்து முடித்து விட்டு சாருமதியை ஏற இறங்கப் பார்த்தவள் கன்னத்தில், திருஷ்டிப் பொட்டு ஒன்றையும் வைத்தாள். ''எத்தனை பேர் கண் போடப் போகிறார்களோ?!'' என்றவள் தொடர்ந்து, ''முக்கியமானவர் கண்போட்டால் மட்டும், இந்தப் பொட்டு அதை ஒன்றும் பண்ணாது'' என்று சிரித்தாள்.

கொஞ்சம் இறுக்கம் தளர்ந்த சாருமதியின் மனது, மாப்பிள்ளை வீட்டார் வரத் தாமதம் ஆகவும், மீண்டும் கனக்கத் தொடங்கியது.

மணமகன் வீட்டைவிட்டுக் கிளம்புவதற்காகக் குறித்துக் கொடுத்திருந்த நேரத்தையும், அந்த நேரத்துப் போக்குவரத்து நெரிசலையும், தனக்குச் சாதகமாக எண்ணிக் கொண்டிருந்த வைத்தியலிங்கம் மட்டும் நிம்மதியாக இருந்தார்.

அவர் எதிர்பார்த்தபடியே, சற்று தாமதமாக, ஆனால், முகூர்த்த நேரம் தொடங்கும் சமயத்தில் வந்து சேர்ந்தது நித்யானந்தனுடைய குடும்பம்.

நித்யானந்தன் நேராக மணமேடையில் அமர, சடங்குகள் தொடங்கின.

சடங்குகள் சுருக்கமாக இருக்க வேண்டும் என்று, ஏற்கனவே சொல்லப் பட்டிருந்ததால், முக்கியமான திருநாண்பூட்டுதல்தான் சடங்காகவே இருந்தது.

மணப்பெண்ணை அழைத்துவரும் சமயத்தில் பெண்ணைப் பார்த்த மதுரத்தின் விழிகள் அகலவுமே, வைத்தியலிங்கம் நைசாக எழுந்து, வாயிற்புறம் நழுவி விட்டார்.

மதுரமும், அனுபமாவும், அவரைத் தேடி விசாரித்து வருவதையும், நித்யானந்தன் தாயைக் கண்களால் தேடுவதையும், மறைந்திருந்து மூச்சடைக்கப் பார்த்தார்.

நித்யானந்தன் தாலிகட்டுவதையும் பார்த்தவர், அதற்குமேல் அங்கே நில்லாமல் கிளம்பிவிட்டார்.

அவரைப் பொறுத்தவரையில் திருமணத்தோடு, அவர் பொறுப்பு முடிந்தது.

இனிக் கடவுளின் அருளும், சாருமதியின் சாமர்த்தியமும், சேர்ந்து அவளை நல்லபடியாக வாழ வைக்க வேண்டியதுதான்!

7

சாருமதி, வெகுவாகக் குழப்பமுற்றிருந்தாள். எதுவுமே புரியாத நிலை அவளுக்கு.

அவளுக்குத் திருமணம் முடிந்து விட்டது. இனி மதியழகன் அவளை ஒன்றும் பண்ண முடியாது. அவளுடைய தோழியையும் நோகடிக்க முடியாது. தாமரையின் வாழ்வு தொடர்ந்து அமைதியானதாகவே இருக்கும். இப்போதைக்கு, மதியழகனை நம்ப முடியாது என்றாலும், குழந்தை பிறந்த பிறகு அவன் நிச்சயமாக நேராகி விடுவான் என்றே அவளுக்குத் தோன்றியது.

அந்த வரையில் அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியே.

ஆனால், அது மட்டும்தான் மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்றாகி விடுமா?

அதுதான் பயமாக இருந்தது, அவளுக்கு.

ஏனெனில், திருமணம் முடித்து, இவ்வளவு நேரத்தில் நித்யானந்தன் அவளுடைய கணவன், ஒருதரம் கூட, அவளைப் பார்த்துச் சிரிக்கவில்லை.

சிரிப்பதென்ன? அவளை, அவன் திரும்பிச் சரியாகப் பார்க்கக் கூட இல்லை!

கையில் எடுத்த மாங்கல்யத்தை, அவள் கழுத்தில் அணிவிக்குமுன், அவன் பார்வை தன் மீது படிந்ததைச் சாருமதி உணராமல் இல்லை. தன் தோற்றத்தில் குறைப்பட எதுவும் கிடையாது என்று அறிந்திருந்ததால், உடலில் இதமான சிலிர்ப்பு ஓட, அவள் மகிழ்ச்சியுடனேயே உட்கார்ந்திருந்தாள்.

ஆனால், அதன்பிறகு அவள் மனம் மீண்டும் குழம்பி விட்டது.

மாலை மாற்றும் போது, கல்லாயிருந்த அவன் முகம், வாழ்த்துச் சொன்ன வெகு சிலரை - நிறுவனத்தின் முக்கியப் பொறுப்பில் இருந்த நாலைந்து பேரைத் தவிர, அவன் வேறு யாரையும் திருமணத்துக்கு அழைக்கவில்லை. அப்படி வந்தவர்களையும், அவள் முகத்தைப் பாராமலே அவன் சுருக்கமாக அறிமுகப்படுத்திய விதம், அவள் பின்னே வருகிறாளா, இல்லையா என்று பாராமலே அவன் காருக்குச் சென்றது, இப்படி ஒவ்வொன்றாக அவளைத் திகைக்கச் செய்தன.

வெளி ஆட்களிடம், இரண்டாம் திருமணம் ஆயிற்றே என்ற கூச்சமாக இருக்கக் கூடும் என்று எண்ணியவளுக்கு வீட்டில் நடந்தது, மேலும் அதிர்ச்சியாக இருந்தது.

ஆரத்தித் தட்டைக் கொணர்ந்து நீட்டிய வேலைக்காரியிடம், அவளையே ஆலம் சுற்றும்படி, மதுரம் சைகை செய்தது சாருமதியின் கலக்கத்தை அதிகரித்தது.

மகாலட்சுமியைப் போலத் தோற்றமளித்த மாமியாருக்கு, அவளைப் பிடிக்கவில்லை என்பதைத்தானே, இது காட்டுகிறது? வீட்டுத் தலைவிக்கே அவளைப் பிடிக்கவில்லை என்றால், அந்த வீட்டில் அவளது நிலைமை என்ன ஆகும்?

ஏற்கனவே, கணவனுக்கு, அவளிடம் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. நிறுவனத்திலிருந்து திருமணத்துக்கு வந்திருந்தவர்களோடு சேர்ந்து, அவரும் அலுவலகத்துக்குப் போயாயிற்று.

இங்கானால், இப்படி!

கோவையில், முதல் முதலாக வேலை பார்க்கச் சென்ற இடத்திலும் சரி, தங்குவதற்காகச் சேர்ந்த பெண்கள் விடுதியிலும் சரி, இரு இடங்களிலும் அவளது இடம், பொறுப்பு, அங்கு கடைப்பிடிக்கும் வழிமுறைகள், போன்ற விவரங்களை முதலிலேயே எடுத்துச் சொன்னார்கள். அவளும் அதன்படி நடந்து, நல்ல பெயர் வாங்கினாள்.

விடுதியில் இன்னொருத்தியோடு சேர்ந்து தங்கியிருந்த சின்ன அறை போல அல்லாமல் இங்கே வீடு பெரியதாக இருந்தது.

ஆனால், அவள் தங்கியிருந்த அறை மட்டுமின்றி, விடுதி முழுவதுமே சொந்தம் போல, உரிமையோடு சுற்றிவந்த மாதிரி இங்கே, அவளால் இயல்பாக இருக்க முடியவில்லை.

இவ்வளவு பெரிய வீட்டில், அவளுக்கு என்று ஓர் இடமும் இல்லாததுபோல, எந்த இடத்திலும் அவள் ஓர் அனாவசியமான அதிகப்படி போன்று, சாருமதிக்குத் தோன்றலாயிற்று.

''இங்கே இரு'' என்று ஹாலில் ஒரு சோஃபாவைக் காட்டிவிட்டு, வேலைக்காரியிடம் 'குழந்தை எப்படி இருக்கிறாள், செண்பகம்?'' என்று மதுரம் விசாரித்தாள்.

'குழந்தை' என்றால் மாமியாருக்கு, இன்னொரு மகள் உண்டு போலும். கடைசி மகவைக் குழந்தை என்று குறிப்பிடுவது, இயல்புதானே, என்று சாருமதி எண்ணினாள்.

''முளிச்சிச்சும்மா, பால் கொணாந்து குடுத்தேன். வாணாமின்று சொல்லிட்டு, திரும்பவும் படுத்துக்கிச்சு'' என்று பதிலிறுத்தாள், அந்த செண்பகம்.

'உடம்புக்கு என்ன?' என்று, கேட்க வேண்டுமா? என்று, சாருமதி யோசிக்கும் போதே, ''சின்னைய்யா, உங்களையும், அக்காவையும், அய்யா அறைக்குக் கூட்டியாரச் சொன்னாங்கம்மா'' என்று ஒரு பையன் வந்து நின்றான்.

அழைப்பது, தன் கணவன்தான் என்பது, சாருமதிக்குப் புரிந்தது.

அவளுடைய கணவனின் அறைக்கு, மற்றவர்களுக்கு மட்டும் அழைப்பு. ஆனால், அவளுக்கு இல்லை!

உள்ளே வலியுடன், அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, மருமகள் என்று ஒருத்தி அங்கே இருப்பதையே மறந்தவள் போன்று, ''அக்காவிடம் சொல்லிவிட்டாயா, பாலா?'' என்று கேட்டவாறே, மதுரம் திரும்பி மடமடவென்று சென்றுவிட்டாள்.

விக்கித்து நின்றாள், சாருமதி.

கூட அழைத்துச் செல்ல வேண்டாம். ஒரு முறுவல், ஒரு சின்ன தலையசைப்பு. ''இரும்மா, வருகிறேன்' என்று சிக்கனமாக எண்ணி, இரண்டே இரண்டு வார்த்தைகள் எதுவுமே, இல்லையே!

வீட்டு மனிதர்களிடம் இருந்துதானே, வேலையாட்கள் படிப்பார்கள். செண்பகமும், சாருமதியைக் கண்டு கொள்ளாமலே அங்கிருந்து சென்று விட்டாள்.

வேண்டாத விருந்தாளி போலத் தவிப்புடன், தரையில் வேரோடி விட்டவள் போன்று, அங்கேயே நின்று கொண்டிருந்தாள், சாருமதி.

தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டார்களே! மகன் அறைக்குத்தானே செல்கிறார்கள்? மகனுடைய மனைவியையும் கூட்டிச் சென்றால் என்ன குறைந்துவிடும்? அவளுக்கு அவ்வளவு உரிமை கொடுக்கக் கூடாதா?

பலவாறு, உள்ளுரப் பொருமியவாறு நின்றுகொண்டிருந்த சாருமதிக்கு, நல்ல வேளையாக அவளுடைய கணவனின் அறையில் நடந்த பேச்சுவார்த்தை தெரியாமல் போயிற்று.

அல்லது, அவளது கெட்ட வேளை என்றுதான் அதைச் சொல்ல வேண்டுமோ?

அறையினுள் வந்த தாயையும், தங்கையையும், கண்களில் கண்டனத்தோடு, நித்யானந்தன் நோக்கினான். ''என்னம்மா, இது? படித்துப் படித்து, நான் எவ்வளவு சொன்னேன்? கொஞ்சம் கூட மனதில் வாங்காமல் என்ன காரியம் செய்து வைத்திருக்கிறீர்கள்?'' என்று ஆத்திரப் பட்டான்.

மதுரத்துக்கும் இன்னமும் திகைப்புதான். எனவே, குழப்பத்துடன் மகனை நோக்கி ''அதில்லையடா, நித்தி நாங்கள் பார்த்தது.'' என்று அவள் தொடங்கிய விதமே, நித்யானந்தனின் கோபத்தை அதிகரித்தது.

அதற்கேற்றபடி, அவன் பேச்சிலும் சூடு ஏறியது. ''சூடு பட்ட பூனை என்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் தானே, அம்மா? ஓர் அறிவு குறைந்த மிருகம். அதற் குள்ள புத்தி நமக்கு வேண்டாமா? இப்படிச் செய்துவிட் டீர்களே! ஒரு தரம், பட்டது போதாதா?'' என்று வருத்த மும், கோபமுமாக வினவினான்.

முதலில் பேசாமல் நின்று கொண்டிருந்த அனுபமா வுக்கு, அண்ணன் பேச்சு சினமூட்ட ''இந்தக் காலத்துப் பூனை, சூடு பாலை ஆற வைத்துக் குடிக்கும் டிஸ்கவரி, நேஷனல் ஜியாகிராஃபி மாதிரி டீவி 'சேனல்'களை வைத்துப் பாருங்கள். புரியும். ஒன்றை, நமக்கு வேண்டி யபடி, மாற்றிக் கொள்ளத் தெரியாமல் அம்மாவிடம் பாய்கிறீர்களே'' என்றாள், சுள்ளென்று பதிலுக்கு.

''ஓகோ.! இப்படி நினைத்துத்தான் நான் சொன்ன தற்கு, நேர்மாறாகப் பெண் பார்த்தீர்களாக்கும்?'' என்று அவன் திரும்பவும், ''ஐயையோ, இல்லை அண்ணா'' என்றாள், அவசரமாக.

''நீங்கள் சொன்ன மாதிரியே, இம்மி பிசகாமல்தான் பார்த்தோம், அண்ணா. உங்கள் பக்கத்தில் அந்தப் பெண்ணை நினைத்துப் பார்த்துப் பார்த்து அம்மா, அன்றைக்குத் தூங்கவே இல்லை, அண்ணா''

''சின்னப் பெண்ணாக மாற்றிவிட்டாயாக்கும்?'' என்று பரிகாசமாகக் கேட்டான், அவளுடைய அண்ணன் ''அதுதானே அண்ணா, எங்களுக்கும் புரியவில்லை!'' என்று விழித்தாள், தங்கை.

''என்ன புரியவில்லை? யாரோ ஓர் ஏமாற்றுக்காரி, நம் எல்லோரையும் ஏமாற்றி விட்டு, வீட்டுக்குள் வந்து உட்கார்ந்திருக்கிறாள், அவ்வளவுதான் விஷயம்'' என் றான் நித்யானந்தன்.

தலையசைத்து ''அழகான பெண்ணைக் காட்டி அழகில்லாத சொரூபத்தைத் தலையில் கட்டினால், நீ சொல்வது போல ஏமாற்று எனலாம். ஆனால், இது நேர் மாறாக இருக்கிறதே! இப்படி ஓர் அழகி என்றாலும் எனக்கும் குழப்பமாக இருப்பது, இதுதான், நித்தி'' என்றாள் மதுரம்.

''இதில் குழம்புவதற்கு என்னம்மா, இருக்கிறது? இந்தப் பெண்ணுக்கு, நம் தேவை தெரிந்திருக்கிறது. அவளுக்கு, நம் வீட்டுக்குள் நுழைந்துவிட ஆசை. நம் தேவையைப் பயன்படுத்திக் கொண்டாள். அவ்வளவு தான் விஷயம்.''

''ஐயோ!'' என்றாள், அனுபமா மிரட்சியுடன், ''பேசாமல், அவளை விரட்டி விடலாமா? ஏமாற்றி வந்தவள் என்பதால், அவளாலும் மறுக்க முடியாதில் லையா? என்னண்ணா?''

''மக்கு அவளை, அவ்வளவு எளிதாக எப்படி விரட்ட முடியும்? வீட்டுக்கு, அழகான பெண் வேண்டும் என்று நீங்களே இவளைத்தான், தேர்ந்தெடுத்து விட்டீர்களாக்கும் என்று தாலியை வேறு கட்டி விட்டேனே. அதுவும் நிறுவனத்து முக்கியஸ்தர்கள், மற்றவர்கள் முன்னிலையில் எல்லோரிடமும் போய், இந்தச் சிறு பெண்ணிடம் நாங்கள் ஏமாந்து விட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? சொன்னால்தான் நன்றாய் இருக்குமா? நமக்குத்தானே கேவலம்? கொஞ்சம் யோசித்துத் தானே பேசு.''

அண்ணனின் கண்டனம் ஆத்திரமூட்ட ''ஆமாமாம், அழகான பெண் என்றதும், தலை சுற்றிப் போய்த் தாலியைக் கட்டி விட்டீர்கள். அப்புறம், எங்களிடம் என்ன பாய்ச்சல்?'' என்று திருப்பினாள், தங்கை.

ஒருகணம் திகைத்துவிட்டு, ''நானாவது ஓர் அழகான பெண்ணைப் பார்த்து மயங்குவதாவது? இன்றைக்கு, அழகான பெண் என்றாரே, அது கழுதை என்று எனக்குத் தெரியாதா?'' என்றவன் அனுபமா முறைப்பதைக் கண்டதும், புருவம் சுருக்கி ஒரு கணம் யோசித்து விட்டுச் சட்டெனச் சிரித்தான்.

தோற்றவனைப் போலக் கையை உயர்த்தி, ''சாரிம்மா நான் உன்னைச் சொல்வேனா? என் அருமைத் தங்கையான உன்னைத் தவிர, மற்ற அழகான பெண்களைப் பற்றி மட்டும்தான் அப்படிச் சொன்னேன். என்ன... நீயும் அழகான பெண்தான் என்பது, அவ்வப்போது மறந்து போய் விடுகிறதா? பட்டென்று, அப்படி வாயில் வந்து விட்டது. ஒன்று செய்யேன், 'நான் அழகி'

என்று, சிரியாமல் அவன் யோசனை சொல்ல, ''பாருங்கள் அம்மா'' என்று குறை கூறத் தொடங்கிய தங்கை தன்னை மீறிச் சிரித்தாள்.

அண்ணன் தங்கைத் தகராறை, முறுவலோடு கவனித்திருந்துவிட்டு, மதுரம் பேசினாள். ''என்னடா, அசட்டுச் சண்டை? இப்போது கையிலிருக்கும் பிரச்சினைக்கு வாருங்கள். இப்போது நாம் என்ன செய்வது?

''அவள் பெயர் கூட, சாரதா இல்லை என்று நினைக்கிறேன். அவளுடன் இருந்த இரு பெண்களுமே, சாருமதியைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றுதான் சொன்னார்கள். கூடவே, அவள் மிகவும் நல்லவள் என்றும் சொன்னார்கள்...''

''ஆமாம், பேரை மாற்றி, ஆள்மாறாட்டம் செய்கிற ஒருத்தி மகாமகா நல்லவளாகத்தான் இருப்பாள். கூடச் சேர்ந்தவர்கள், வேறு என்னம்மா சொல்லுவார்கள்? அதைப் போய்ப் பெரிதாகச் சொல்ல வந்து விட்டீர்களே!

மகனின் பேச்சைக் கேட்டதும், மதுரத்தின் விழிகள் அகன்றன. ''இப்போது என்னடா, செய்யலாம்? வெளியே போகச் சொல்ல முடியாது என்கிறாய். நீ சொல்வதைப் பார்த்தால், ஒரு கூட்டமே திட்டம் போட்டு வேலை செய்கிற மாதிரி இருக்கிறதே!'' என்றாள் கவலையுடன்.

''ஊகூம், அந்த அளவுக்குக் கொள்ளைக்காரக் கூட்டம் என்று எனக்குத் தோன்றவில்லை. ஏதோ, வசதிக்கு ஆசைப்பட்டவள், வாய்ப்பு கிடைத்தது, பயன்படுத்திக் கொண்டு வந்துவிட்டாள். அவ்வளவுதான்

உங்கள் திருப்திக்கு நகையோ, அதிகப் பணமோ, வீட்டில் எப்போதும், வைத்துக் கொள்வது இல்லைதானே? அதே போல, இப்போதும் இருந்து கொள்ளுங்கள். மற்றபடியும், சற்று அதிகப்படி எச்சரிக்கையோடு இருந்து கொள்ளுங்கள். இது நம் வீடு அம்மா. நம் இத்தனை பேருக்கு நடுவில் தனியாக இருந்துகொண்டு, அவளால் ஒன்றும் பண்ண முடியாது'' என்று தாயாருக்குத் தைரிய மூட்டினான், மகன்.

''அண்ணன் கூறுவது சரிதான், அம்மா நன்றாகச் சாப்பிடலாம், தூங்கலாமே தவிர, அவளால் நம் வீட்டில், வேறு ஒன்றும் செய்ய முடியாதுதான். ஆனால், இவ்வ ளவு பெரிய மோசக்காரியை, அவள் விருப்பம் போலச் சாப்பிடு, தூங்கு என்று விட்டுவிட்டு, நாம் சும்மா தான் இருக்க வேண்டுமா? அநியாயமாக இருக்கிறதே!''

''அவள் விரும்பிப் பெற்ற பதவிக்கு, நன்றாக உண்ணவும், உறங்கவும் உரிமை உண்டுதான். ஆனால், அத்தோடு தீபாவைப் பராமரிக்கும் கடமையும் உண்டு. கொள்ளுக்கு வாயைப் பிளக்கும் குதிரை, கடிவாளத்தை யும் ஏற்றுத்தான் ஆகவேண்டும். நாலுநாள் தீபாவை உண்ண உறங்க வைப்பதற்குள், அவளுக்கு உயிரே வெறுத்து விடாதா?'' என்றான் நித்யானந்தன், உதட்டோ ரம் ஓர் ஏளனச் சுழிப்புடன்.

தலையாட்டிய மதுரம், மீண்டும் தயங்கினாள். ''இதை அவளிடம் நீயே சொல்லிவிடுவாயல்லவா?''

''நிச்சயமாய்!'' என்றான் மகன், ஒரு குரூரப் புன்ன கையோடு...

8

மதுரம் உட்காரச் சொன்ன இடத்திலேயே, பிடித்து வைத்த சிலை போல, சாருமதி ஆடாமல், அசையாமல் அமர்ந்திருந்தாள்.

எப்போதாவது, மரத்துப் போய்விடும் போலத் தோன்றுகையில் மட்டும் சற்றே, கை, கால்களை மடக்கி நீட்டுவாள். அந்த உணர்ச்சி மாறியதும், பழைய நிலைக்கே போய்விடுவாள். சற்று இலகுவாகச் சாய்ந்து அமரக் கூட அவளுக்குப் பயமாக இருந்தது.

'பெரிய இடம், அவர்கள் பழகுகிற விதமே வேறாக இருக்கும். நீதான் பொறுமையோடு சமாளித்துப் போக வேண்டும்' என்று வைத்தியலிங்கம் சொன்னபோது, சாருமதி அதைப் பெரிதாக எண்ணிப் பயந்து விட வில்லை.

பெரிய இடமோ, சின்ன இடமோ, எங்கேயும் மனிதர்கள், மனிதர்களாகத்தானே இருக்க முடியும்? நாம் நல்லபடியாக நடந்து கொண்டால், மற்றவர்கள், வேறு மாதிரி ஏன் நடந்து கொள்ளப் போகிறார்கள்? சுவரில் அடித்த பந்து போல அன்பு, பாசம், கோபம், வெறுப்பு என்று பிறர் நம்மிடம் காட்டுவது எல்லாமே, நாம் அவர்களிடம் காட்டியதின் பிரதிபலிப்பாகத்தானே இருக் கும் என்பது, அன்று வரை அவளது நினைப்பாக இருந்தது.

ஆனால், நித்யானந்தன் அவள் கழுத்தில் தாலி கட்டிய வினாடியிலிருந்து அவளது நம்பிக்கை, ஆட்டம் கண்டு விட்டது.

ஏனெனில், நித்யானந்தன் உட்பட, அவன் வீட்டில் எல்லாருமே, அவளை வெறுப்பது போலவும், அவளிடம் தப்புக் கண்டுபிடிக்கக் காத்திருப்பது போலவுமே அவளுக்குத் தோன்றியது.

இதை, எதனுடைய பிரதிபலிப்பு என்று சொல்வது? மூச்சு விடுவது தவிர, அவள் வேறெதையும் செய்யவே இல்லையே! ஒரு வேளை, அதுவும்கூட இவர்களுக்குத் தப்பாகத் தெரிகிறதோ, என்னவோ!

மிகவும் சிரமப்பட்டு, சாருமதி இந்த வகையான எண்ண ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தினாள்.

இந்த மாதிரி நினைப்பது பைத்தியக்காரத்தனம் மூச்சு விடுவது தப்பு என்றால், அவள் செத்துப் போவதையா இவர்கள் விரும்பக் கூடும்?

இல்லை, வைத்தியலிங்கம் அங்கிள் சொன்னது போல, இது பணக்காரர்களின் நடப்பு முறைதான். தன் விஷயம் தவிர, மற்ற விஷயம் மனதிலேயே படுவதில்லை. வீட்டுக்கு ஒருத்தி, புதிதாக வந்திருக்கிறாளே, அவளுக்கு எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்க்கக் கூடத் தோன்றாமல், தன்னிலேயே நிலைத்திருப்பது.

இல்லத்திலும் கூட, அத்தனை பேரில், ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் கவனிக்க முடியாதுதான். யாருக்கும் தனிப்பட்ட கவனம் கிடைக்காதுதான். ஆனால், யாரையும் இப்படி அலட்சியப் படுத்தவும் முடியாது. வீட்டுக்கு வந்த புது மருமகள் இருக்கிறாளா, செத்தேவிட்டாளா என்று கூடப் பாராமல் இது என்ன வீடு? என்ன குடும்பம்?

பல்லைக் கடித்து வைத்தியலிங்கம் சொன்னபடி, சாருமதி பிடிவாதமாய்ப் பொறுமை காத்துக் கொண்டிருந்தபோது, மேலே அரவம் கேட்டது.

மாடிப்படி முடிகிற இடத்தில், கீழ் ஹாலில் பாதியளவு வருமாறு, தனமாக நீட்டி, அழகாகப் பளபளப்பாகப் பித்தளைக் கிராதியிட்டிருந்த இடத்தில், நித்யானந்தனும், அவள் தங்கையும் நின்று கொண்டிருந்தார்கள்.

சாருமதி மெல்ல எழுந்து நிற்கவும், ''செண்பகம்!'' என்று குரல் கொடுத்து வேலைக்காரியை நித்யானந்தன் அழைத்தான்.

ஓடி வந்து நின்றவளிடம், ''அந்தம்மாவுக்கு, அவர்கள் அறையைக் காட்டவில்லையா? போ, கூட்டிப் போ'' என்று, உத்தரவிட்டான்.

ஏன்? வேலைக்காரிதான். அவளது அறையைக் காட்ட வேண்டுமா? அவன் காட்டக் கூடாதா? அவன் தங்கை..? அவர்கள் தகுதி குறைந்துவிடுமாக்கும்?

உள்ளம் பொருமியபோதும் முகத்தில் எதையும் காட்டாமல் ''என்னோட வாங்க'' என்ற வேலைக்காரியைச் சாருமதி பின் தொடர்ந்து சென்றாள்.

அண்ணனும் தங்கையும், தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தன்னை எடை போடுகிறார்கள் என்ற எண்ணமே, சாருமதியின் கால்களைப் பின்ன வைத்தது.

படிகளில் தடுமாறிவிடாமல் கவனத்துடன் படி ஏறி முடித்தபோது, அவள் வருவதை லட்சியமே செய்யாமல் கணவனும், நாத்தனாரும், மறுபுறமாய்ச் சென்று கொண்டிருப்பது, அவளது கண்ணோரத்தில் படவும், அவளுக்கு வேதனையாக இருந்தது.

அண்ணனும் தங்கையும் பார்க்கிறார்களோ, எடை போடுகிறார்களோ என்று தவித்துத் தடுமாறியது வீண் என்பதைவிட இந்த அசிரத்தை அவள் மனதை, மிகவும் பாதித்தது.

உனக்கு இங்கே வரவேற்பு இல்லை என்பதை, இதைவிடத் தெளிவாக எப்படிச் சொல்ல முடியும்?

'முதலிலேயே தட்டி வைக்காவிட்டால், எகிறிவிடு வாள்' என்று குட்டிக் கொண்டே இருந்த தன் புகுந்த வீட்டாரைப் பற்றி விடுதித் தோழி காதம்பரி சொன் னாளே. இவர்களும் அந்த மாதிரிப்பட்டவர்களா?

என்ன அநியாயம்?

காதம்பரி கணவன் வீட்டை விட்டு, வெளியேறி விட்டாள். நல்ல படிப்பு இருந்ததால் நல்ல வேலையும் கிடைத்தது.

அதற்கு மேல், சாருமதிக்கு அந்த வழியில் எண் ணம் ஓட மறுத்தது.

ஏனெனில், ''நல்லாப் பாத்துக்கம்மா. இது, உன் னோட ரூம்பு. அந்தாண்டை இருக்குதே, அது எங்க சின்னய்யாவது, இந்தப் பக்கம், உன் பொண்ணோட ரூம்பு'' என்று விவரம் தெரிவித்துக் கொண்டிருந்தாள், செண்பகம்.

பெண்ணா?!

சாருமதி திகைத்து நிற்கையிலேயே, கதவைத் திறந்து விட்டவள், ''உள்ள வந்து உக்காரு. அப்பறமாக காப்பி எடுத்தாரேன்'' என்று விட்டுப் போனாள்.

சாருமதிக்கும், உட்கார்ந்தாக வேண்டியிருந்தது.

ஏனெனில், அவளது தலை அப்படிச் சுழன்று கொண்டிருந்தது.

இரண்டாம் தாரம் என்பதையே, ரொம்பவும் சிரமப் பட்டு ஜீரணித்தவள் அவள். அவளது, இக்கட்டான குழ்நிலையில் மட்டுமே, வேறு வழியில்லை என்று சாருமதி, அதை ஏற்றிருந்தாள்.

இப்போது, மகள் வேறு இருக்கிறாள் என்றால்?

சரியாக, இந்தப் பிறந்த நாள் வந்தால்தான் - 'இல்ல'த்துக்கு வந்து சேரும் நாளையே, பிறந்த நாளாகக் கொள்வது, அங்குள்ள வழக்கம். அதன்படி, அவளுக்கு, இருபத்து இரண்டு வயது நிறையவே, இன்னும் நாலு மாதங்கள் இருக்கின்றன. திருமணத்துக்கு உரிய வய தாக, அரசாங்கத்தால் ஆலோசனை கூறப்படுகிற இருபத் தொன்றுதான் இப்போது நடக்கிறது.

அதற்குள், அவளுக்கு ஒரு மகளா?

வைத்தியலிங்கம் அங்கிளுக்கு இது தெரியாதா? அல்லது, அவள் மறுக்கக் கூடும் என்று தெரிந்தும் அவளிடம் தெரிவியாமல் மறைத்து விட்டாரா?

இரண்டு விதமாகவும் நடந்திருக்கக் கூடும்!

பல்வேறு விஷயங்களைப் போல இதுவும், அவ ளுக்கு இழைக்கப்பட்ட பெருத்த அநியாயமாகவே சாரு மதிக்குத் தோன்றியது.

ஆனால், இதையெல்லாம் எப்படி எதிர்ப்பது? எதிர்த்து என்ன செய்வது என்று அவளுக்கு ஒன்றும் புரிபட மறுத்தது.

எதிர்த்து, வீட்டை விட்டு வெளியேறினாலோ, வெளியேற்றப் பட்டாலோ, அவளுக்கு இருக்கும் ஒரே போக்கிடம் தாமரையின் வீடுதானே?

அங்கே, மதியழகனும் இருப்பானே!

முன்னேயாவது, கொஞ்சமேனும் மரியாதை இருந்தது இனி... சேச்சே! என்ன ஆனாலும், அங்கே போக முடியாது முயன்று சகித்துக் கொண்டு, இங்கேயேதான் இருந்தாக வேண்டும்!

கதவைத் தட்டிவிட்டு, சாருமதி 'வா' என்று அனுமதி அளிக்குமுன்பாகவே, செண்பகம் உள்ள வந்து, ஓரமாகக் கிடந்த 'டீபாய்' மீது ஒரு கப்பை வைத்தாள்.

''காப்பி குடிச்சுக்க'' என்று சொன்னதோடு, வேலை முடிந்தது என்பதுபோல, திரும்பிச் சென்று விட்டாள்.

சூடு அதிகமா? சர்க்கரை போதுமா? ஒரு மரியாதைக்கு சும்மா, வாய் வார்த்தையாகக் கூடக் கேட்கவில்லை. வீடு வந்ததும், ஆரத்தி எடுக்கப் பிடிக்காததை, மதுரம் வெளிக் காட்டியதின் விளைவு. இரண்டாவது வேலையாட்களைச் சொல்லிப் பயன் இல்லை. அவர்கள் வீட்டாரிடம், அதிலும் அதிகாரத்தில் இருப்பவர்களின் மனதைப் பிடித்து, அதைத் தங்கள் செயலால் ஒத்து ஊதி, இச்சகம் செய்வார்கள். இதைச் செண்பகம் இரண்டாம் முறை செய்கிறாள்.

இன்னும் எத்தனை முறை செய்வாளோ? எத்தனை பேர் செய்வார்களோ?

சோர்வுடன், சாருமதி அமர்ந்திருந்தது, எவ்வளவு நேரமோ?

வெகு நேரம் ஆனபின், மீண்டும், கதவைத் தள்ளித் திறந்து கொண்டு, செண்பகமே உள்ளே, வந்தாள்.

ஏடு பிடித்திருந்த காபியைப் பார்த்ததும், அவளுக்கு எரிச்சல் உண்டாயிற்று.

''காப்பி பிடிக்காதுண்ணா, சொல்லக் கூடாது? வேலை மெனக்கெட்டுத் தூக்கியாந்தேனே?'' என்ற புலம்பலுடன் ஆறிய காஃபியை எடுத்துச் சென்றாள்.

பதில் சொல்லியிருக்க வேண்டுமோ, என்னவோ? ஆனால், யாரிடமும், எதையும் பேசும் மனநிலையில் சாருமதி இல்லை.

இந்த ஏடு பிடித்த காஃபியை வைத்துக் கொண்டு, கீழே ஒரு படடி மன்றமே நடக்கக் கூடும், குடும்பத்தினரும், அதில் கலந்து கொள்ளலாம். ஆனால், அதைப் பற்றிக் கவலைப் படவும் அவளுக்குத் தோன்றவில்லை. இவைகளைவிடப் பெரிய கவலைகள், எத்தனையோ, அவள் நெஞ்சில் முட்ட நிறைந்திருந்தன. அவைகளோடு ஒப்பிடும் போது, இது, வெறும் சுண்டைக்காய்.

குழப்பமும் கலக்கமுமாகச் சாருமதி, அந்த அறையிலேயே, வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள்.

இப்படி, அவளை அலட்சியப்படுத்துகிறவர்கள், எதற்காக அவளை மருமகளாக அந்த வீட்டுக்கு அழைத்து வர வேண்டும் என்று அவளது பெரும் குழப்பத்துக்கு விரைவிலேயே விடை கிடைத்தது.

அறையை விட்டு வெளியே செல்லத் தைரியமோ, பிரியமோ இல்லாமல் அறையை அளந்து கொண்டிருந்தவள், அதுவும் வெறுத்துப் போய் ஜன்னல் வழியே வெளியை வெறித்தபடி, அவள் நின்று கொண்டிருந்த

போது, ''நீ தான் அம்மாவா?'' என்று ஒரு மழலை முழுமையாக மாறாத இளங்குரல் கேட்கவும், தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு திரும்பிப் பார்த்தாள்.

'உன் பொண்ணு' என்று, செண்பகம் கூறியதைக் கொண்டு, இதுதான் நித்யானந்தனுடைய குழந்தை என்று, சாருமதியால் ஊகிக்க முடிந்தது.

ஆனால், மற்ற எந்த வகையிலும் இது இந்த வீட்டுப் பிள்ளை என்று கூறவே முடியாது.

முதலாவதாக, அந்த வீட்டினரிடம் இருந்த ஒரு செழுமை, ஒரு பணக்காரக் களை அந்தக் குழந்தையிடம் இல்லை. அனுபமாவிடம் காணப்பட்ட திடம், நிமிர்வு, உறுதி எதையுமே, இவளிடம் காண முடியவில்லை.

இரண்டு வயதே ஆகியிருக்கக் கூடிய குழந்தையி டம், நிமிர்வையும் உறுதியையும் எதிர்பார்க்க முடியாது தான்.

ஆனால், இந்த வயதில்தான் பிள்ளைகளிடம், அச்ச மற்ற துடிப்பு இருக்கும். மெலிந்து நடுங்கிப் போய், கதவு நிலையைப் பிடித்துக் கொண்டு நின்ற அந்தக் குழந்தை யின் பெரிய கண்களில், கலக்கம் தான் இருந்தது!

கலக்கம் என்றால் என்னவென்றே புரியாத இந்த வயதில், எதற்காகக் கலங்குகிறாள்; இவள்?

குழந்தையின் கண்களில் இருந்த கலக்கம், எங்கெங் கிருந்தோ மீட்கப் பட்டு, அன்பு இல்லத்துக்குக் கூட்டி வரப்படும் பிள்ளைகளை நினைவூட்டவே, சாருமதிக்கு அந்தச் சிறுமியிடம் தன்னைமீறி, ஒரு சொந்த உணர்ச்சி உண்டாயிற்று.

இந்த வீட்டில், இந்தக் குழந்தையும் ஓர் அனாதை தான். பணக்கார அனாதை. அந்தப் பிள்ளைகளுக் காகவாவது, சக அனாதைகளின் துணை இருக்கிறது. இதற்குப் பாவம், அதுவுமில்லை!

பொருத்தமற்று, தொளதொளவென்று, தொங்கிக் கொண்டிருந்த உடை, விலை உயர்ந்தது என்று பார்த் தாலே, தெரிந்து கொள்ள முடிந்தது. ஆனால், அந்த ஆடையின் உள்ளிருந்த உடம்பில், கிள்ளி எடுக்கச் சதை இல்லையே!

குச்சி குச்சியாகக் கையும், காலும், கண்ணில் உயிரை வைத்துக் கொண்டு அவள் பார்த்த விதமும் சாருமதியின் மனதைத் தொட்டுவிட, உள்ளே வருமாறு சைகையால் அசைத்தாள்.

ஆவலாக உள்ள ஓடிவந்ததில் குழந்தை கால் தடுமாறி விழப் போவதைக் கண்டதும், சட்டெனத் தாவிக் குழந்தை விழுந்து விடாமல், தாங்கிப் பிடித்தாள், அவள்.

கழுத்தை இறுகக் கட்டிக்கொண்ட பிள்ளையின் நெஞ்சு படபடவென்று அதிருவதை உணர்ந்து,அவ ளைக் கையில் ஏந்தியவாறே அமர்ந்தவள், குழந்தையின் மனதை மாற்றுவதற்காக ''இவ்வளவு நேரம் தூங்கினா யா?'' என்று கேட்டாள்.

''இல்லையே'' என்றாள், குழந்தை. ''நீங்கல்லாம் வந்தப் போவே முழிச்சிட்டேனே!'' என்றாள் தொடர்ந்து,

வீட்டினுள் வந்ததும், மதுரம் கேட்டதற்குச் செண்ப கம் குழந்தை தூங்குவதாகச் சொன்னதோடு இதுவரை,

கண்ணிலேயே படாததால், தொடர்ந்து தூங்கியிருக்கக் கூடும் என்றெண்ணி, முதலில் கேட்டவள், மேலே பேச்சுக் கொடுப்பதற்காக, ''முழிச்சு, இவ்வளவு நேரம் என்ன விளையாட்டு விளையாடினாய்?'' என்று கேட்டாள்.

''வெள்ளாடலை. சும்மா உட்காந்துகிட்டு இருந்தேன்'' என்ற பிள்ளையின் பதிலில், சாருமதி அதிர்ந்தாள்.

ஓர் இரண்டு வயதுக் குழந்தை, மூன்று மணி நேரத்துக்கும் மேலாகச் சும்மா உட்கார்ந்திருந்தாளாமா?

என்ன அநியாயம்? எப்படி முடியும்?

யோசிக்கும் போதே, குந்தையின் வயதைப் பற்றிச் சந்தேகம் எழுந்தது. இரண்டு வயதுக் குழந்தை, இவ்வ எவு பேசமா? இந்த மெலிந்த உடலின் பின்னே, வளர்ச்சி குன்றிய வயதும் மறைந்திருக்குமோ?

பாவம் என்று எண்ணியவளாய், ''சும்மா என்றால், ஏதாவது படம் பார்த்தாயா? அல்லது, டீவி பார்த்துக் கொண்டிருந்தாயா?'' என்று, சாருமதி வினவினாள்.

''இல்லம்மா, சும்மாதான் உட்கார்ந்திருந்தேம்மா!'' என்று தன் பெரிய கண்களை உருட்டியது குழந்தை. ''வெளீல வந்தா, செம்பா திட்டுவா. அதான், சும்மா உள்ளயே, உட்கார்ந்திட்டிருந்தேன்'' என்று சிசு சாருமதி யின் தலையை அருகே இழுத்து, ''அம்மா, அந்த செம்பாவ நல்லாத் திட்டி விடுறியாம்மா?'' என்று கெஞ்சு தலாகக் கேட்டது.

''சரி'' என்று மறுப்பின்றி ஒத்துக் கொண்டுவிட்டு, ''ஆமாம், செண்பகம் எதற்கம்மா உன்னைத் திட்டி னாள்?'' என்று சாருமதி விசாரித்தாள்.

''சும்மாதாம்மா'' என்று 'அம்மா'வை நிலை நிறுத் திக் கொண்டது குழந்தை. ''நான் சாப்பிடலை, பாலு குடிக்கலை, கீழே விழுந்திருவேனே அதான் திட்டும்.''

இல்லத்தில், 'அக்கா' பழக்கம். சின்னப் பிள்ளைகள் எல்லாம், பெரியவர்களை 'அக்கா' என்றுதான் அழைப் பார்கள் அதனால் இந்த 'அம்மா' சற்று உறுத்திய போதும், சாருமதியை அதிகமாகப் பாதித்து விட வில்லை. மாறாக இந்த வீட்டில், என்னுடன் நல்லபடியா கப் பேசும் ஒரே ஜீவன் என்று ஓர் ஒத்த உணர்ச்சி தான் அவளுக்கு உண்டாயிற்று.

பேச்சைத் தொடர விரும்பியதோடு, காரணத்தை யும் அறிய எண்ணி, ''ஏம்மா, கீழே விழுவாய்?'' என்று வினவினாள்.

சாருமதியின் கைவிரல்களைப் பற்றி விளையாடிய படி, ''விழுந்திருவேன், விழுந்திருவேன்! இப்பக் கூட விழப் போனேனே!'' என்றாள் குழந்தை, அழுத்தமாக.

''விழமாட்டாய்'' என்றாள் சாருமதி, பதிலுக்கு. ''சாப்பிடாமல், பால் குடிக்காமல், இப்படிக் குச்சியாகப் பலமே இல்லாமல் இருப்பதால் தான் விழுகிறாய். நன்றா கச் சாப்பிட்டுக் குண்டாகிவிட்டால், விழவே மாட்டாய் பார், நானெல்லாம் விழவா செய்கிறேன்? உன்னைக்கூட விழாமல் பிடித்துவிட்டேனே!''

''ம்ம்ம்...'' என்று குழந்தை விழி விரித்துப் பார்த்துக் கொண்டிருக்க, ''ஏனம்மா நீ பால் குடிக்காமல் நன்றாகச் சாப்பிடாமல் இப்படி ஒல்லியாக இருக்கிறாய்?'' என்று சாருமதி வினவினாள்.

''அது...'' என்று தொடங்கும்போதே, சிறுமியின் கண்கள் கலங்கின. சாருமதியின் மடியிலிருந்து இறங்கி,

அவள் கையைப் பிடித்து, அறையின் மறுபுறமிருந்த 'பால்கனி'க்கு அழைத்துச் சென்றாள். கைநீட்டி, அடுத்த வீட்டைக் காட்டினாள்.

பக்கத்து வீட்டு 'சிட் அவுட்' நன்றாகத் தெரிந்தது. குரல் தெளிவாகக் கேட்காவிட்டாலும், ஒரு பெண், இவளைவிடச் சற்று பெரிய பெண்ணை மடியில் அமர்த்திக் கொஞ்சிக் கொண்டிருப்பது, புரிந்தது.

''அவள் பேர், சுமதி. அவங்கம்மாதான், அவளுக்கு எப்பவும் ஊட்டுவாங்க. இப்பிடி சிரிச்சுகிட்டே செம்பா திட்டிக்கிட்டே இருப்பா. அவ கையே நல்லாவே இருக்காது. அதான்'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போது, ''தீபாப் பொண்ணு, ஏ தீபா'' என்று செண்பகத்தின் குரல் கேட்டது.

முகத்திலிருந்த சிரிப்பு மாறி, 'உம்' மென்று முகம் இறுகிப் போன குழந்தை ஒருகணம் அசையாமல் அப்படியே நின்றிருந்துவிட மீண்டும் செண்பகம் கூப்பிடவும், மனமின்றியே தயங்கித் தயங்கி, வெளியே சென்றது.

உதட்டைக் கடித்துக் கொண்டு, பேசாமல், பார்த்துக் கொண்டு நின்றாள், சாருமதி.

அப்போதைக்கு, அவளால், அதை மட்டும் தானே செய்ய முடியும்!

ஆயினும், பிறருக்கு உதவும் குணம் உள்ளவளாதலால், அவளால் முடிந்தால் இந்தக் குழந்தைக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று மனதினுள் நினைத்துக் கொண்டாள்.

எண்ணும்போதே, ஓர் ஏளன நகையும் அவள் முகத்தில் தோன்றியது. அவளுக்கே, அடுத்தவர் உதவி

மிகவும் தேவைப்படுகிற நிலை! இதில் இன்னொருவருக்கு உதவி செய்ய, அவள் ஆசைப்படுவதா? வேடிக்கைதான்! ஆனால், வேதனையான வேடிக்கை!

மேலும் நேரம் சென்று கொண்டே இருந்தது.

ஆனால், வீட்டினர் யாரும் அவளைப் பற்றிக் கவலைப் படுவதாகவே, ஏன் அவள் அந்த வீட்டில் இருக்கிறாள் என்ற எண்ணமே, யாருக்கும் இருப்பதாகவே தோன்றவில்லை!

அந்த எண்ணம் இருந்தால்தான் யாராவது வந்து, ஏதாவது பேசக்கூடுமே!

மற்றவர்கள் அவளை மறக்கலாம். ஆனால், தாலி கட்டிய கணவன்?

நாய்க்குக் கட்டும் 'லைசன்ஸ்' தகடா, தாலி என்பது. அப்புறம் எக்கேடும் கெடட்டும் என்று, விடுவதற்கு?

சாருமதிக்கு மெள்ள மெள்ள உள்ளுரக் கோபம் உண்டாகத் தொடங்கியது.

இரவு சுமார் எட்டு மணியளவில் செண்பகம் மீண்டும் வந்தாள். ''உனக்குச் சாப்பாடு இங்கே கொண்டாரவா? அங்க வந்து சாப்பிடுறியா?'' என்று, கேட்டுக் கொண்டு.

இரண்டுமே வெறுப்பாயிருக்க, ''பசியில்லை'' என்று முடிக்கும் போதே அந்தக் குழந்தைக்கு ஏன் உணவு பிடிக்காமல் போயிற்று என்று புரிவது போல இருந்தது. மன அழுத்தம், வயிற்றுப் பசியை மழுங்கடித்துவிடும் போலும்! ஆனால், அந்தச் சின்னக் குழந்தைக்கு என்ன மன அழுத்தம்?

என்னவோ, அதற்காகவும், சாருமதிக்கு ஆத்திரம் வந்தது.

பசியில்லையா? மதியம் மண்டபத்தில், கொஞ்சம் கொறித்ததுதானே, சாப்பிடவா என்று, அவளை யாரும் அழைக்கவில்லை. மாறாக, ஒப்புக்காக, ஒரு முறை கூப்பிட்டாயிற்று. உண்பதோ, விடுவதோ அவள் விருப்பம் என்பது போல, செண்பகம் திரும்பிப் போய்விட்டாள்.

திரும்பிச் சென்றவளின் முதுகை வெறித்தவளுக்கு மேலும் ஆத்திரம் அதிகரித்தது.

இதற்கெல்லாம் கூட, நித்யானந்தன் பதில் கூறத் தான் வேண்டும்.

மேலும் ஒரு மணி நேரம், பல்லைக் கடித்துப் பொறுமை காத்தவளுக்கு, அதற்கு மேல், ஒட்டு மொத்த மான இந்தப் புறக்கணிப்பைப் பொறுக்க முடியாது போயிற்று.

அவள் நித்யானந்தனுடைய மனைவி, எனவே, இது அவள் வீடும் கூட. இங்கே, எங்கு செல்லவும், அவளுக்கு உரிமை உண்டு. அதிலும், அவள் கணவன் இருக்குமிடம் செல்ல, அவளுக்கு மற்றவர்களின் அனுமதியோ, உதவியோ தேவையில்லை!

அடுத்த அறைதான் அவளுடைய கணவனது என்று தான் ஏற்கனவே, செண்பகம் சொல்லிவிட்டாளே.

அவள் அப்போது சொன்னதன் அர்த்தமேகூட, இங்கே யாரும் முறைமைகள் பார்ப்பது இல்லை, உன் புருஷன் அறைக்கு நீ தாராளமாகப் போய், வந்து கொள்ளலாம் என்பதுதானோ, என்னவோ?

எப்படியும், செண்பகத்தின் அர்த்தம் அதுவாக இல்லாமலே இருந்தாலும் கூட சாருமதி இப்போது அவளுடைய கணவன் அறைக்குச் சென்றே ஆகவேண்டும். அவனிடம் பேசியே ஆக வேண்டும்!

ஆனால், நினைப்பது வேறு, அதையே செயல் படுத்துவது வேறு அல்லவா?

வந்த கோபத்தில் நேரே நித்யானந்தனிடம் போய் நன்றாக நாலு கேள்வி கேட்க வேண்டும் என்று எண்ணிக் கிளம்பியவளுக்கு எழுந்து, அவளது அறை வாயிலைத் தாண்டுமுன் கால்கள் பின்னலடித்தன.

என்னதான் கனவன் என்றாலும் முன்பின் அறியாத ஒருவனிடம் சென்று அவள் நினைத்ததையெல்லாம் எப்படிக் கேட்பது என்று தயங்கிய போதுதான், இந்தத் திருமணத்தின் முழுப் பரிமாணத்தையும், அவளால் உணர முடிந்தது.

அப்படி முன்பின் தெரியாதவனிடம், அவளது எதிர்காலத்தையே ஒப்படைத்து விட்டாளே!

அப்போதைக்கு, அன்று காலைவரையும் கூடப் பிரம்மாண்டமாகத் தோன்றிய மதியழகன் பிரச்சினை ஒன்றுமில்லாமல் பின்னுக்குப் போய்விட, இப்போதைய நிலையே மிகப் பெரிதாகத் தோன்றி அவளை மலைக்க வைத்தது.

பெரிய பெரிய மூச்சுகள் எடுத்து சாருமதி, ஓரளவுக்குத் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

திருமணம் என்னவோ, நடந்துவிட்டது. நித்யானந்தனும் அவளும் கணவன் மனைவி என்பது மாற்ற முடியாதது. இந்த வாழ்வை நல்லபடியாக்கிக் கொண்டு

வாழ வேண்டும். அவனுக்கும், அந்த எண்ணம் இல்லாமலா இருக்கும்?

இந்த எண்ணத்தோடுதான், சாருமதி, கணவன் அறைக்குள் சென்றது.

ஆனால், நித்யானந்தனின் நடத்தை அவனுக்கு அப்படிப்பட்ட எண்ணம் ஏதும் இல்லை என்று அவளுக்குத் தெளிவுபடுத்தியதோடு, இனி அவனது அறைக்குள் காலடி வைக்கக் கூடாது என்ற உறுதியையும் அவளுக்கு ஏற்படுத்தியது.

9

"உள்ளே வரலாம்" என்ற நித்யானந்தனது அனுமதியின் பின், சாருமதி அவன் அறையினுள் சென்றதும், கையிலிருந்த ஃபைலிலிருந்து பார்வையை உயர்த்தியவனின் கண்கள் சட்டென இடுங்கின. "என்ன?" என்றான் அதட்டலாக.

இப்படி அதட்டினால் எப்படி, என்ன பேசுவது?

தயக்கத்துடன், "வந்து..." என்று தொடங்க முயன்றாள், அவள்.

"அதுதான், வந்து விட்டாயே! யாரும் அழைக்காமலே!" என்றான் அவன் ஏளனமாக. "எதற்காக வந்தாய் என்று விஷயத்தைச் சொல்லு" என்றான் நித்யானந்தன். சிரத்தையற்ற குரலில் கேட்டவாறே, மீண்டும் ஃபைலில் பார்வையைப் பதித்தான்.

அவன் அலட்சியமாகப் பேசிய விதம் வருத்தமூட்டியபோதும், சமாளித்துக் கொண்டு, "என்ன இப்படிக்

கேட்கிறீர்கள்? நாம் இருவரும் கணவன் மனைவி அதனால்..." என்று அவள் பேசி முடிக்கு முன்பாகவே, குறுக்கிட்டு "அதனால் என்ன? உடனே கட்டிலில் உருண்டு விடவேண்டுமா?" என்று அவன் கேட்கவும், சாருமதி விக்கித்துப் போனாள்.

இப்படிக்கூட, மனிதர்கள் பேசுவார்களா? மதியழகனின் பேச்சையே, அருவருப்பாக எண்ணியவள் அவள். இப்போது, இவன் கூறியது, அவளுக்கு அதைவிட அசிங்கமாக இருந்தது.

இப்படிப் பேசுகிற, இவன் அவளுடைய கணவன் வேறு!

கணவன், அத்தோடும் விட்டுவிடவில்லை. "ஆசை வெட்கமறியாது என்பது உண்மைதான் போலும். இல்லாவிட்டால், முதலிரவு கொண்டாட இப்படி வந்து நிற்பாயா?"

அவன் பேச்சு தாங்க முடியாமல், முகம் கன்றி, "நான் ஒன்றும், அதற்காக வரவில்லை!" என்றவளுக்குத் தொண்டை அடைத்தது.

"அல்லாமல், என்னோடு பரமபதம் ஆடலாம் என்று இங்கே வந்தாயா? அல்லது, வேதாந்த ரகசியங்கள் பற்றி விவாதிக்க வந்தாயா?" என்றான் அவன் எகத்தாளமாக."

"இ... இல்லை ந...நம் வாழ்க்கை பற்றி."

"அதைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது? எப்படியோ, மாற்று வழியில்லாதபடி, என் மனைவி என்று ஆகிவிட்டாய். அந்தப் பதவிக்குரிய வசதிகளை நீ நன்றாகவே அனுபவிக்கலாம். நல்ல சாப்பாடு

சாப்பிடலாம். ஏசி அறையில், பஞ்சு மெத்தையில் படுத்து உறங்கலாம். காரிலும் சுற்றலாம். உன் தகுதிக்கு, இதுவே மிக மிக அதிகம். ஆனால், இதற்கு நீ விலையும் கொடுத்தாக வேண்டும். தீபாவை நன்றாக வளர்க்க வேண்டும். இந்த வேலைக்காகத்தான், நீ இங்கே வந்திருக்கிறாய். அடுத்து, என் குடும்ப கவுரவத்துக்கு, ஒரு சிறு இழுக்குகூட உன்னால் நேரக் கூடாது. சிறு விலை தான். ஆனால், இந்த இரண்டிலும், ஒரு சின்னக் குறை நேர்ந்தால்கூட, அப்புறம் உன்னை நான் சும்மா விடமாட்டேன், ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தான் நித்யானந்தன்.

'தகுதி' என்ற ஒரு வார்த்தையில், சாருமதி திகைத்து நின்றாள்.

ஆசிரமத்தில் வளர்ந்த அனாதைப் பெண். அவளுக்கு, இதுவே போக பாக்கியம் என்று எண்ணுவதோடு, சொல்லியும் காட்டுகிறான்.

இப்போதுதான், அவளுக்கு விஷயம் நன்றாக விளங்கத் தொடங்கியது.

நித்யானந்தனுக்கு மனைவி தேவையில்லை. மகளைப் பராமரிக்க, ஒரு பெண் மட்டுமே வேண்டும். இந்த வீட்டினர் என்ன சொன்னாலும் கேட்டுக் கொண்டு, ஏசினாலும் பொறுத்துக் கொண்டு, போக்கிடமற்று, இங்கேயே விழுந்து கிடக்க வேண்டும்.

இதற்கு, இவர்கள் வேலைக்கென்றே, ஆள் நியமித்திருக்கலாமே என்று ஒருகணம் சாருமதிக்குத் தோன்றியது.

ஆனால், வேலை பார்க்கிறவள் எப்போது வேண்டுமானாலும் வேலையை விட்டுப் போய்விடலாம். இப்படி

'லைசன்ஸ்' தகடு மாட்டி இழுத்து வந்து விட்டால், அந்தப் பிரச்சினை இராதல்லவா?

எவ்வளவு கொடிய மனிதர்கள்!

இவர்களது குரூரமான திட்டத்துக்கு, பலியாடாக அவள்தானா கிடைக்க வேண்டும்?

அவளது ஊகம் சரியே என்பது போல, நித்யானந்தன் இன்னொன்றும் சொன்னான்.

''மனைவியாகி விட்டோம் என்கிற மமதையில், அந்த சுகமும் வேண்டும் என்று இனியொரு தரம், இந்த அறைக்குள் காலெடுத்து வைக்காதே. ஏனெனில், உன்னைப் போன்ற பெண்களுக்கு என் படுக்கையில் இடம் கிடையாது'' என்று கடுமையான குரலில் கூறினான், அவன்.

'உன்னைப் போன்ற பெண்!''

அதிலென்ன, அவ்வளவு இளக்காரம்? ஆசிரமத்தில் வளர்ந்த அனாதைப் பெண் என்றால், அவளும் பெண் இல்லையா? மான, ஈனங்கள் அவளுக்கும் உண்டுதானே? அவளை, இவ்வளவு கேவலமாக எப்படிப் பேசலாம்?

இதையெல்லாம் கேட்பதற்கு அவள் வாய் திறக்கையிலேயே அவன், ''இன்னும் ஏன் இங்கேயே நிற்கிறாய்?'' என்றபடி, வேகமாக எழுந்து வந்தான்.

''எவ்வளவு மோசமானவனாக இருந்தாலும், அழகாக இருந்தால், ஆண்களை மயக்கி விடலாம் என்று நினைத்தாயா? அதற்கு, நீ வேறு ஆளைப் பார்த்திருக்க வேண்டும். இங்கே, நீ எவ்வளவு நேரம், எப்படியெல்லாம் நின்றாலும், ஏன், என் மேலே விழுந்தாலும் கூட,

நான் உன் வலையில் விழப் போவது இல்லை. வேண்டு மானால், பார்க்கிறாயா?'' என்று இகழ்ச்சியாகப் பேசிக் கொண்டே வந்தவன், அவன் அடுத்து என்ன செய்யப் போகிறான் என்று, அவள் ஊகிக்கு முன்பாகவே அவளை இழுத்து அணைத்தான்.

முதல் தடவையாக, ஓர் ஆணின் அணைப்பை சற்றும் எதிர்பாராமல், உணர்ந்த அதிர்ச்சியில் இருந்து அவள் மீள்வதற்குள்ளாகவே, தீச்சுட்டவன் போல அவன், அவளை விலக்கி நிறுத்தினான்.

அவள் கையைப் பிடித்து, அவளைக் கரகரவென்று இழுத்துப் போய், அறைக்கு வெளியே நிறுத்தி, ''நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும்'' என்று அடிக்குர லில் உறுமிவிட்டு, உள்ளே சென்று, கதவைச் சாத்திக் கொண்டான்.

ஒரு கணம் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றவ ளுக்கு மறு கணமே, முகம் ரத்தமெனச் சிவந்து போயிற்று.

எப்படி அவமானப்படுத்திவிட்டான்?!

அவள் அனாதை இல்லத்தில் வளர்ந்தவள்தான். பஞ்சு மெத்தை, கார், ஏசி என்று அவன் சொன்ன மாதிரி வசதிகள் அங்கே கிடையாதுதான். ஆனால் அந்த வசதிக ளுக்காக, அவள் எதையும் பொறுத்துப் போவாள் என்று எப்படி நினைத்தான்?

கடைசியாக, அந்த அணைப்பு!

அதைத் தான் அவளால் கொஞ்சமும் தாங்க முடிய வில்லை.

அதற்காகவா, அவள் அவனை நாடிச் சென்றது?

அவன் என்னவோ, பெரிய விக்கிரமாதித்த மகா ராஜா மாதிரியும், அவனுக்காக அவள் ஏங்கிக் கொண்டு இருக்கிற மாதிரியும்!

சும்மாவே, அவளுக்கு விக்கிரமாதித்தன் கதைகள் அவ்வளவாகப் பிடிக்காது. 'இவன் என்ன, ஊர் ஊருக்கு ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து விட்டுவிட்டுப் போவது, அப்புறம் அந்தப் பெண்கள் கதி என்ன ஆவது?' என்பாள்.

அவள் கணவனும், அப்படித்தானே, தன்னைப் பெரிதாக எண்ணிக் கொண்டிருக்கிறான் போலத் தெரிகி றது. அந்த நினைப்பே, அப்போது அவளுக்குக் கிடை யாது.

தன் வீட்டுக்கு வாழ வரும் மனைவியிடம், ஒரு கணவன் தன் வீட்டுப் பழக்க வழக்கங்கள், தன் உறவின ரின் தன்மைகள், எதிர்பார்ப்புகள் எல்லாம் சொல்ல வேண்டாமா? சொன்னால்தானே, அவளும், தன் எண் ணங்கள், கோட்பாடுகளோடு, அவைகளையும் கலந்து ஆலோசித்து, ஒரு நல்ல நெறியைக் கண்டுபிடித்து, அதன்படி நடந்து கொள்ள முடியும்?

அதை, அவனாகச் சொல்லாதபோது, அவளாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியதுதானே? அத் தோடு, அவர்களது திருமண விசித்திரம் பற்றியும் அறிந்து கொள்வதற்காகத் தானே, அவள் நித்யானந்த னின் அறைக்குச் சென்றாள்?

அதைப்போய்க் கொச்சைப் படுத்தி, என்னவெல் லாம் பேசிவிட்டான்?

அதற்குமேல்...

இல்லை. இதற்கு மேல் இந்த வீட்டில் தங்கியிருப்பது. அவளுக்குக் கேவலம். அப்படி ஒன்றும் நல்ல சாப்பாட்டுக்கும், துணிமணிக்கும், அவள் வீங்கிக் கிடக்கவில்லை!

உள்ளம் கொதிக்க, உடல் பதற, அவள் இருப்பதற்காகவென்று கொடுக்கப்பட்ட அறையினுள் சென்று, உள்ளே 'கபோர்டி'ல் வைக்கப்பட்டிருந்த, அவளது பெட்டியை எடுத்தாள்.

மாற்றப் பயந்து, இன்னமும் கட்டிக் கொண்டிருந்த பட்டுச் சேலையை, முதலில் அவிழ்த்து எறிந்தாள்.

அவளது சொந்தப் பணத்தில் வாங்கிய சுரிதார் செட் ஒன்றை எடுத்து அணிந்தாள்.

கொட்டுக் கொட்டென்று, தனியாக உட்கார்ந்து போரடித்த நேரத்தில், இனி இதுதானே அவளது வீடு என்று எண்ணி, துணிகளையெல்லாம் அலமாரியில் அடுக்கி வைத்தாள்.

இதழ்களை இறுக மூடியவண்ணம், இப்போது அவற்றை எடுத்து மீண்டும் பெட்டியில் எடுத்து வைத்தாள்.

பெட்டியை அடுக்கிக் கொண்டு இருந்த போதே, யாரோ, கதவை மிக லேசாகத் தட்டினார்கள்.

யாரானாலும், கதவைத் திறக்க முடியாது என்று சொல்ல முடியாதே?

எரிச்சலுடனேயே, போய்க் கதவைத் திறந்தால், அங்கே, ஆவலோடு அண்ணாந்து பார்த்துக் கொண்டு குழந்தை தீபா நின்றாள்.

ஐயோ, இந்தக் குழந்தை என்றிருந்தது, சாருமதிக்கு.

அடுத்த வீட்டைப் பார்த்து ஏங்கிக் கொண்டு, செண்பகத்தின் அழுக்குக் கையில் வாங்கிச் சாப்பிட மனமின்றி மெலிந்து கொண்டே போகுமே பாவம்!

"தூங்கவில்லையா?" என்று கேட்டவளின் கையைப் பிடித்துக் கொண்டே உள்ளே வந்தபடி, "டீவி பார்க்கச் சொல்லி உட்கார்த்திட்டு, செம்பா சாப்பிடப் போயிட்டா. நல்லா பேசிட்டு இருந்திட்டு, ரொம்ப நேரம் ஆனப்புறம்தான் வருவா. அதான் இங்கே, ஓடி வந்திட்டேன்" என்று உற்சாகமாகப் பேசிக் கொண்டு வந்த குழந்தை, படுக்கை மீதிருந்த பெட்டியைக் கண்டதும், "அய்யோ!" வென்று திகைத்தது.

"என்னம்மா?"

"பெட்டி...!" என்று, கையை நீட்டிக் காட்டிய பிள்ளை, "ஊருக்குப் போறப்போ தான், பாட்டி பெட்டில எல்லாம் வைப்பாங்க. நீ... நீயும் ஊருக்குப் போறியாம்மா? வேண்டாம்மா... அம்மா..." எனும்போதே, அழுகையில் அவள் உதடு பிதுங்கியது.

சொல்வதறியாமல், சாருமதி திகைத்துப் போனாள்.

இந்தச் சிறு பிள்ளையிடம் என்னவென்று, விவரம் சொல்வது?

எப்படியும் இந்த இரவில், எங்கும் செல்ல முடியாது.

அந்த வீட்டில், அவளை விரும்பும் ஒரு ஜீவனும் இருக்கிறது என்பதே, மனதிற்கு இதத்தைத் தர, நேரடிப் பதிலைத் தள்ளிப் போட்டாள்.

"இரவாகி விட்டதே! இப்போது யாராவது, ஊருக்குப் போவார்களா? மாட்டார்களே, கண்ணு. அதிருக்கட்டும், நீ சாப்பிட்டாயா?" என்று, பேச்சை மாற்றினாள்.

அந்தக் கேள்வியின் பதில், இன்னொரு விதமாய் வலித்தது.

"இல்லம்மா" என்ற தீபா, தொடர்ந்து, "சாப்பிட நேரமாக்குவே, நீயே சாப்பிட்டுக்கன்னு, செம்பா இட்டிலிய வச்சிட்டுப் போயிட்டா, எனக்குப் பிடிக்கவே இல்லையா, நான் சாப்பிடவே இல்லை" என்று கூறியது, உள்ளூர வேதனையைத் தர, "வா நான் அள்ளித் தருகிறேன்" என்று, குழந்தையோடு கீழே சென்று, உணவுத் தட்டை எடுத்து வந்து ஊட்டலானாள்.

பொதுவாக, தீபா, உணவில் பிரியம் இல்லாத குழந்தை என்பது, 'இல்ல'த்தில் பலதரப்பட்ட பிள்ளைகளோடு பழகி வளர்ந்த சாருமதிக்கு உடனே தெரிந்து போயிற்று. வேடிக்கையும், விளையாட்டும் காட்டி ஊட்டி விட்டுத்தான், அவளை உண்ண பழக்க வேண்டும். இந்த வயதில் இவளைப் போய், நீயே சாப்பிடு என்றால் எப்படிச் சாப்பிடுவாள்?

சிங்கமும், சுண்டெலியும் கதையைச் சொல்லி, ஊட்டி விடும் போதே, இந்த ஒரு வேளைதான், நாளையிலிருந்து மீண்டும், இவள் அரைப் பட்டினியாகக் கிடக்கப் போகிறாள் என்று, சாருமதியின் மனம் வருந்தியது.

இந்த நித்யானந்தன், அவளுக்குத் தாலி கட்டி கூட்டி வந்ததற்குப் பதிலாக, இப்படி ஒரு பொறுப்பு, இன்ன சம்பளம் என்று நல்லபடியாக, வேலைக்கே அழைத்து வந்திருக்கலாமே.

மாறாக, மனைவி என்று மதிப்பாக அழைத்து வந்து, மண்ணாங்கட்டியை விடக் கேவலமாக நடத்தி... எப்படியும் நாளைக்குக் கிளம்பிவிட வேண்டியதுதான்.

தீபாவின் மனமும், அதில்தான் இருந்தது போலும்.

எங்கே போவதற்காகப் பெட்டி என்று தொண தொணத்தாள்.

எங்கே போவதற்காக என்று சொல்லுவது? முதலில், எங்கே போவது?

"எங்கேயும் போகவில்லை, பெட்டியில் கொண்டு வந்த துணிகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தேன்" என்று சொல்லிச் சமாளித்து வைத்தாள், சாருமதி.

தீபா தூங்கச் சென்றபின் இரவின் தனிமையில், மீண்டும் அதே கேள்வி, பூதாகரமாக எழுந்தது.

எங்கே போவது?

போக்கிடம் கிடையாது என்பது தெளிவாகத் தெரிந்த விஷயம்.

தாமரை வீடு, சர்வ நிச்சயமாகப் போகக் கூடாத இடம். அதில் ஐயத்துக்கு இடமே கிடையாது.

அடுத்து, தெரிந்த ஒரே குடும்பம் வைத்தியலிங்கத்தினுடையதுதான். ஆனால், தாமரையின் வீடு எதிரே இருக்கும்போது, சாருமதி அவர் வீட்டில் தங்க முடியாது.

அத்தோடு, அப்படித் தங்கும்படி அவர் அழைக்கவும் மாட்டார். நித்யானந்தனுடைய வளமான குடும்பத்தை அவளுக்காக அவர் பகைத்துக் கொள்ளவே மாட்டார்.

விசுவாசமான நாயாக உழைப்பதற்காக, அவர்களுக்கு அவளைத் தேடிக் கொடுத்தவர். அதை மாற்ற அவளுக்கு உதவுவார் என்று எதிர்பார்ப்பது மதியீனம். தீபாவைப் பற்றி அவளிடம் சொல்லாமல் மறைத்ததிலிருந்தே, இந்தத் திருமணத்தை அவர் அவளுக்கு உதவுவதற்காகச் செய்துவைக்கவில்லை என்பது தெளிவாகி விடவில்லையா?

நடுத்தெருவில் நின்று பிச்சை எடுப்பது தவிர, மீந்திருக்கும் ஒரே வழி பல்லைக் கடித்துக் கொண்டு இங்கேயே இருந்து விடுவதுதான்.

குறைந்த பட்சம் ஒரு வேலை கிடைக்குமட்டும்.

அதுவரை, உண்ட சேற்றுக்கு வஞ்சகமின்றி, தீபாவைப் பார்த்துக் கொள்ளும் வேலையைச் செய்ய வேண்டியதுதான்.

இந்த முடிவுக்கு வர, நித்யானந்தன் இருக்கும் அதே வீட்டில் வசிக்கவும், அவன் வீட்டுச் சோற்றைச் சாப்பிடவும் சாருமதிக்கு மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது.

ஆனால், பிச்சைக்காரர்களுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது என்பதற்கிணங்க, தன்காலில் நிற்கும் சுயபலம் இல்லாததால், அவளது தன்மானத்தை அவள் விழுங்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

நித்யானந்தன் என்ன சொன்னான்?

தீபாவைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவனது கவுரவத்துக்கு இழுக்கு நேரக் கூடாது. இரண்டும்தானே?

நித்யானந்தனின் கவுரவத்தைப் பாதிக்கும்படி, அவள் என்ன செய்துவிடக் கூடும் என்று, அவளுக்குப் புரியவில்லைதான். ஆனால், தீபாவைப் பார்த்துக் கொள்ளும் வேலையை, அவளால் நன்றாகவே, குறைந்த பட்சம் இந்தச் சென்பகத்தை விட மிக நன்றாகவே பார்த்துக் கொள்ள முடியும். பார்த்துக் கொள்வாள்!

இப்படியாக, தான் உண்ணும் சோற்றுக்குக் கொடுக்கும் விலையான ஒரு வேலையாகக் கருதித்தான் சாருமதி, தீபாவைப் பார்த்துக் கொள்ளத் தொடங்கியது.

ஆனால், இயற்கை அனாதையான அவளைப் போலவே, அந்தப் பணக்கார அனாதையும் அன்புக்கு ஏங்கியிருந்ததால், இருவருக்குமிடையே ஆழ்ந்த பாசப் பிணைப்பும் ஏற்பட்டுப் போயிற்று.

பிள்ளை வளர்ப்பில், சாருமதிக்குச் சிறு சிறு இடைஞ்சல்கள் ஏற்படத்தான் செய்தன.

முதலாவதாக, கிட்டத் தட்ட மூன்று ஆண்டுகளாக சாருமதி சந்தேகப்பட்டது போல, தீபாவின் தோற்றம் இரண்டைக் காட்டினாலும், அவளது வயது மூன்றாகியிருந்தது. சரியாக உண்ணாமல், ஓடியாடி விளையாடாமல், குழந்தை வளர்ச்சி குன்றிப் போயிருந்தாள். யாருக்கும் அவளோடு மல்லுக் கட்டும் பொறுமை இல்லாததால், செண்பகம் தருவதை அவள் விரும்பினால் உண்பது, இல்லாவிட்டால் பட்டினி கிடப்பது என்று அவளது சாப்பாட்டின் அளவே சுருங்கிப் போயிருந்தது.

அத்தோடு, ஊட்டச் சத்துள்ள உணவு என்றும், யாரும் பார்த்துக் கொடுத்த மாதிரி சாருமதிக்குத் தோன்றவில்லை.

அவ்வளவு சிறு பெண்ணுக்குப் பால் குடிக்கும் பழக்கமே இல்லை.

அந்தப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காகச் சாருமதி, தீபாவுடனும் போராட வேண்டியிருந்தது. வழக்கம் போலச் சிறுமிக்குக் காஃபியை எடுத்துவந்த செண்பகத் தையும் விரட்ட வேண்டியிருந்தது.

"அம்மா, காஃபிதான் வேணும்" என்ற தீபாவை, "சொன்னால் கேட்க வேண்டும்!" என்ற ஓர் அன்பு மிரட்டலிலேயே, சமாளிக்க முடிந்தது.

ஆனால், கொண்டுவந்த காஃபியைத் திரும்ப எடுத் துச் சென்றுவிட்டு, மீண்டும் ஒருதரம் பாலை எடுத்துவர, செண்பகத்துக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. எனவே, "என்னா, பெரீய கித்தாப்பு பண்ணுறே?" என்று சொல்லிவிட்டுக் காஃபியை அப்படியே வைத்து விட்டுப் போய்விட்டாள்.

வேலைக்காரியின் திமிர், சாருமதியை ஒரு கணம் திகைக்க வைத்தது. விட்டு விடலாமா என்று கூட எண்ணச் செய்தது.

ஆனால், வீட்டுச் சின்ன எஜமானன் உத்திரவுப்படி, அவளது வேலை அவன் மகளை நன்றாக வளர்ப்பது. அதில் இடையூறு நேர, அவள் ஏன் அனுமதிக்க வேண் டும்?

பிள்ளையை நன்றாக வளர்க்க வேண்டும் என்று பெரிதாக உத்தரவிட்டு விட்டு, அதற்குப் பாலுக்குக்கூட வகை செய்யாவிட்டால் எப்படி என்று நித்யானந்தனிடம் சென்று, கத்தலாமா என்றுகூட அவளுக்கு ஓர் ஆசை வந்தது. ஆனால், எப்படிப்பட்ட காரணத்திற்காகவும், அவனிடம் போய்ப் பேச அவளுக்கு அருவருப்பாக இருக்கவே, அந்த ஆவலை அடக்கிக் கொண்டாள்.

ஆனால், செய்ய நினைத்தை விடாமல், தீபாவுக் காக வந்த காஃபியுடன் சமையல் அறைக்கு சென்றாள்.

அங்கே பார்த்தால் காம்ப்ளான், பூஸ்ட், ஹார்லிக்ஸ் என்று ஒரு வரிசையே இருந்தது.

செண்பகம் சென்று என்ன சொன்னாளோ, சமையல் காரம்மாளும் சும்மா நின்று வேடிக்கை பார்க்கிற மாதிரி தான் இருந்தது.

இவளிடம் சொல்வானேன்? இவளும் மறுத்து ரசா பாசம் ஆவானேன்?

பாலைச் சூடு பண்ணி, காம்ப்ளான் கலப்பதென்ன அவள் அறியாத பிரம்ம வித்தையா?

யாரிடமும் எதுவும் கேளாமல், வேண்டியதைச் செய்து எடுத்துக் கொண்டு, அவள் வெளியேறும்வரை, அங்கே யாரும் எதுவும் பேசவில்லை.

"வேண்ணாப் பாரு. இது புள்ளைக்கு இல்லை. அந்தச் சாக்கு வச்சு, இந்தம்மா தான் குடிக்கப் போவுது" என்றாள் செண்பகம்.

ஏதோ வேலை போலச் சென்று பார்த்துவிட்டுத் திரும்பிவந்து, "அதெல்லாம் ஒண்ணுமில்ல. ஆயா, அந்தம்மா தீபாப் பொண்ணுக்குத்தான் ஊட்டுது" என்று சமையல்காரியிடம் பாலன் விவரம் சொல்ல, அதன் பிறகு, தீபாவுக்கு அந்தந்த வேளைக்குச் சாருமதி கேட் கும் பானம் வரத் தொடங்கியது.

உண்ண வைத்தது போலவே, சாருமதி தீபாவைத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்று விளையாட வைத் தாள்.

"அறைக்குள்ளேயே, அடைந்து கிடக்கக் கூடாதும்மா. தோட்டத்தில் விளையாடலாம். வா" என்று அழைத்தபோது, அதற்கும் சிறுமி லேசில் சம்மதிக்கவில்லை.

"அய்யோ, நான் விழுந்திருவேம்மா. அப்புறம் செம்பா திட்டுவா. எல்லாரும் திட்டுவாங்க" என்று குழந்தை பயத்தில் அழவே செய்தாள்.

"விழமாட்டாய். விழாமல், நான் பிடித்துக் கொள்வேன். அன்றைக்குப் பிடிக்கவில்லை?" என்று, தைரியமூட்டி தோட்டத்துக்குக் கூட்டிச் சென்று, விளையாடச் செய்தாள்.

முதலில் நடை, பிறகு வேக நடை, அப்புறம் ஓடிப் பிடிப்பது என்று கவனத்துடன் பழக்கினாள்.

போக, வரப் பார்த்த பையன் பாலனும், மெல்ல மெல்ல விளையாட்டில் கலந்து கொள்ளத் தொடங்கினான்.

சென்பகத்தின் பேச்சுக் கூடப் பெரிதும் அடங்கிப் போயிற்று.

ஒருவாறு, வேலையாட்கள் சாருமதியை ஒத்துக் கொள்ளத் தொடங்கிய போதும், வீட்டு மனிதர்கள் மட்டும் இரும்புத் திரையின் பின்னேயேதான் இருந்தார்கள். அவர்களிலும், நித்யானந்தனைப் பார்ப்பதுகூட அரிதாக இருந்தது. ஆனால், முதுகில் ஊசியால் குத்துவது போல, அது பிரமையாகக் கூட இருக்கலாம். ஆனால் ஒரு கண்காணிப்பு இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.

சாருமதியும், அதையும் ஒரு பொருட்டாகக் கருதாமல் இருக்கப் பழகிக் கொண்டாள்.

வீட்டு மருமகளாகத் தன்னை நினைத்தபோது, இந்தப் புறக்கணிப்பு அவளைப் பெரிதும் நோகடித்தது உண்மையே. ஆனால், தன்னைத் தானே அங்கே பணிபுரிபவளாகக் கருதத் தொடங்கிய பிறகு, அந்த அளவுக்கு அது அவளைப் பாதிக்கவில்லை.

அடியோடு பாதிக்கவே இல்லை என்று சொல்ல முடியாது. கழுத்துத் தாலியைப் பார்க்கும்போது, இதற்கு என்ன அர்த்தம் என்று மனம் குமுறுவது உண்டுதான். அப்போதெல்லாம், திருமண இரவன்று, நித்யானந்தன் பேசியதும் நினைவு வந்து, நெஞ்சு கொதிக்கும். ஆனால், இப்போதெல்லாம், அவள் அதையே நினைத்துக் கொண்டே இருப்பது இல்லை. உடனேயே வேறு ஏதாவது ஒன்றில் ஈடுபட்டு, மனதை மாற்றிக் கொள்ள முடிந்தது.

செய்யும் பணியின் ஒரு பகுதியாக, தீபாவுக்கு வேண்டிய பொருட்களை வாங்கித் தருமாறு மதுரத்திடம் கேட்பது, மருத்துவ ஆலோசனை பெறச் சொல்வது போன்ற விஷயங்களை அவளால் இப்போது தயக்கமின்றிக் கூற முடிந்தது. சின்னவளுக்கேற்ற உடைகளைக் கூட இன்ன விதம், இன்ன துணி என்று சொல்லி அனுப்பினாள்.

ஆனால், எல்லாம் தீபா பற்றித்தான். அவளது சொந்த விஷயம் பற்றி, சாருமதி சொன்னதுமில்லை, யாரிடமும் கேட்டதும் இல்லை.

இந்த நிலையில், ஒரு நாள் தோட்டத்தில், தீபாவுடன் ஒளிந்து பிடித்து விளையாடும்போது, சாருமதியின் சுரிதாரின் கமீஸ் நீளமாகக் கிழிந்து போயிற்று.

அன்று தீபாவுக்குக் 'க்ளே', வண்ணம் தீட்டும் புத்தகங்கள் என்று சில சாமான்களை வாங்கிவரச் சொன்னவள், கூடவே ஊசி நூலையும் சேர்த்துச் சொன்னாள்.

சொல்லியனுப்பிய பொருட்களோடு, ஆறு சுரிதார் செட்டுகளும் இருப்பதைக் கண்டு சாருமதி திகைத்துப் போனாள். நல்ல ரகங்களே.

அனுபமாவுக்கு வாங்கியது, தவறுதலாக தீபாவின் பொருட்களோடு வந்திருக்கக் கூடும் என்று எண்ணி, அவைகளைக் கசங்கிவிடாமல், பத்திரமாக எடுத்துப் போய், மதுரத்திடம் சேர்ப்பித்தாள்.

ஆனால், அந்தச் சுரிதார்கள் அவளுக்காக வாங்கப் பட்டவைதான் என்று பெரியவள் கூறவும், சாருமதிக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று.

'அடுத்தது காட்டும் பளிங்கு' போல, முகம் அவள் மனதை அப்படியே காட்டி விடவும் பார்வையை எங்கோ பதித்தபடி மதுரம் சொன்னாள். ''இதெல்லாம் முன்பே வாங்கிக் கொடுத்திருக்க வேண்டும். சாதாரணமாக வேலைக்காரர்களுக்குக் கூட ஆண்டுக்கு, மூன்று செட் உடைகள் வாங்கிக் கொடுக்கிறோம். தீபாவைத் தூக்கி வைத்து, உணவூட்டி, அவளோடு ஓடி விளையாடுவதில் துணிமணி அதிகமாய் அழுக்காகிக் கிழிந்து விடக்கூடும். ஆறு செட் வாங்கிக் கொடுத்து விடுங்கள் என்று நித்யா சொன்னான்...''

ஆக, வேலைக்குரிய சம்பளம்தான்!

இந்த எண்ணம் தோன்றிய பிறகு, அந்த ஆடைகளை எடுத்து அணிவது சாருமதிக்கு, இலகுவாகப்பட்டது. கூடவே, ஓர் ஏமாற்றம் உள்ளத்தில் நமநமப்பதையும் அவளால் உணர முடிந்தது.

ஆனால், ஏமாறுவதற்குப் புதிதாக என்ன இருக்கிறது? அதெல்லாம் தான் திருமணத்தன்றே முடிந்து போயினவே! தோளைக் குலுக்கிவிட்டு, சாருமதி அன்றாட வாழ்வில் ஈடுபட்டாள்.

கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் இப்படியே கழிந்தன.

தீபாவுக்கு மூன்று வயது நிரம்பப் போவதால், அவளை விரைவிலேயே நல்ல 'ப்ளே ஸ்கூலி'ல் சேர்க்க வேண்டும் என்று மதுரத்திடம் சொன்னாள், சாருமதி.

நித்யானந்தனிடம் ஒரு சேதி விரைவாக எட்ட வேண்டும் என்றால், அதை அவனுடைய தாயிடம் சொல்வது உடனடிப் பலனைத் தரும் என்று சாருமதி அனுபவத்தில் அறிந்திருந்தாள். எனவே, மதுரத்திடம் சொன்ன கையோடு, பள்ளிக்குத் தீபாவைத் தயார்படுத்தவும் தொடங்கினாள்.

இந்நிலையில், ஒருநாள், மதுரத்துடைய உறவுக் குடும்பம் ஒன்று, அவர்கள் வீட்டுத் திருமணத்துக்காக அழைக்க வந்தது.

தோட்டத்திலிருந்து, திரும்பி, முன்னே ஓடி வந்த தீபாவை நிறுத்தி ஆராய்ந்தது.

''அண்ணி, நித்யா மகள் அப்படியே, அவள் அத்தையைக் கொண்டு பிறந்திருக்கிறாள் போல? அச்சு அசல், அப்படியே உரித்து வைத்த மாதிரி

இருக்கிறானே!'' என்று வியந்தாள் வந்திருந்த உறவுக்கா ரப் பெண்மணி. ''அவளும் இப்படித்தானே, குண்டு குண்டென்று, வெண்ணெய்ப் பந்து மாதிரி அழகாய், அதற்குள்ளும் மூக்கு முழி பளிச்சென்று இருப்பாள்! இவளும் அவளுக்கு நகல் மாதிரி அப்படியே இருக்கி றாளே!'' என்று மிகவும் ஆச்சரியப்பட்டாள். ''உங்களுக் கென்ன, அண்ணி? பெண்ணும் அழகு, அதேபோலப் பேத்தியும், அழகு!''

பூண்டு வகைத் தாவரம் ஒன்று உண்டாம். அதை மிதித்தவர்கள் சற்று நேரம் அப்படியே, செயலற்றுப் போய்விடுவார்களாம். அதைத்தான், திகைப்பூண்டை மிதித்தாற்போல என்று சொல்லுவதாம். அந்த மாதிரி ஒரு செயலற்ற தன்மை மதுரத்திடம் தோன்றியிருப்ப தைப் பின்னே வந்த சாருமதி கண்டு வியந்து நோக்குகை யிலேயே, தீபா, ''அம்மா''! என்று, அவளிடம் ஓடி வந்தாள்.

உறவுக்காரர்களின் கவனம், இப்போது சாருமதியு டன் பாய்ந்தது.

''ஐயோ, எவ்வளவு அழகு!'' என்றாள் இளம் பெண் ஒருத்தி.

''இந்தப் பொண்ணுதான், நித்யாவுடைய, இரண்டா வது மனைவியா? ஓசைப் படாமல், ஒருத்தருக்கும் சொல்லாமலே முடித்து விட்டீர்களே, அண்ணி! எல்லா ரையும் கூப்பிட்டு, ஒரு விருந்தாவது வைக்கக் கூடாது? உங்கள் அழகான மருமகளைப் பார்த்துக் கண்ணு போட் டுவிடுவோம் என்று பயந்து விட்டீர்களா?'' என்ற அந்தப் பெண்மணி, ''இங்கே வாம்மா'' என்று, சாரும தியை அருகே அழைத்தாள்.

உள்ளூரச் சங்கடப்பட்டபடி சாருமதி, மதுரத்தைப் பார்த்தாள்.

அவள், 'போ' என்பது போலத் தலையசைக்கையி லேயே, ''சும்மா, வாம்மா. உங்க அத்தை ஒன்றும் உன்னைக் கோபிக்க மாட்டார்கள். அவர்களுக்கு, நான் ஒன்றுவிட்ட நாத்திதான். எங்களுக்குள்ளே, நல்ல ஒட்டு தல் உண்டு. என்ன, அவங்கவங்க குடும்பம், குட்டி என்று வந்த பிறகு, முன்னே மாதிரி, அடிக்கடி போய் வந்து, இருக்க முடிகிறது இல்லை. இப்படி உட்காரு'' என்று, அருகே அமர்த்தி அவளை ஆராய்ந்தாள்.

பிறகு, ''என்னமோ அண்ணி, என் மனதில் பட்ட தைச் சொல்லகிறேன். போய்ச் சேர்ந்தாளே, மகராசி. அவளைவிட, இவள் ஆயிரம் மடங்கு மேல். அவளும் அழகுதான். ஆனால், அவள் கண்ணு அலை பாய்ந்து கொண்டே இருக்கும். கவனமும் நம்ம பேச்சிலே இராது. என்னேரம் ஏதோ, கணக்குப் போட்ட மாதிரியே. இவள், நல்ல குளுமையான அழகு, அண்ணி. குத்து விளக்கு மாதிரி. இவளாலே, உங்களுக்கு இனிமேல் ரொம்ப நல்லகாலம்தான், அண்ணி. வீட்டிலே, நிம்மதியாக இருப்பீர்கள்'' என்று ஆரூடம் சொன்னாள்.

முகம் மாறாமல் காப்பது, சாருமதிக்குப் பெரும் பாடாகப் பட்டது. ஆனால், வந்திருந்த பெண்மணிக்குக் கூரிய கண்கள் என்பதை உணர்ந்து, பார்வையைத் தாழ்த்திக் கொண்டு, வெகு கவனத்துடன், முகத்தில் புன்னகை வாடாமல் காத்தாள்.

அதற்குள், தீபா வந்து சாருமதியின் மேல், உரிமை யோடு, சாய்ந்து கொண்டு நிற்கவும், 'என்ன சொன் னேன்?' என்பது போல, மதுரத்தை நோக்கிவிட்டு,

''லதா'', என்று கூட வந்த தன் மகளை அழைத்தாள் உறவுக்கார அம்மாள். ''வா, வந்து அக்காவுக்குக் குங்குமம் கொடு. நீயும் கல்யாணத்துக்குக் கட்டாயம் வர வேண்டும். என்ன அண்ணி, மருமகளை, பேத்தியை, தம்பியை எல்லாரையும் கூட்டிக் கொண்டு, அண்ணனும் நீங்களுமாக வந்து, பிள்ளைகளை ஆசீர்வதிக்க வேண்டும். என்ன?'' என்று, பலமுறை வற்புறுத்தி அழைத்து விட்டுப் போனாள்.

பெரிய அலை ஒன்றில் சிக்கி, உருண்டு புரண்டு மீண்டு எழுந்தது போன்ற உணர்வு சாருமதிக்கு.

மதுரமும் அதே போலத்தான் உணர்ந்தாளோ, என்னவோ ஒரு பிரமித்த பார்வையுடன், சோ:பாவிலேயே தளர்வாய்ச் சாய்ந்து கிடந்தாள்.

அவளை அந்த நிலையில் விட்டுச் செல்ல மனமின்றி, ''நான் வேண்டுமானால், செண்பகத்தை வரச் சொல்லட்டுமா?'' என்று சாருமதி வினவினாள்.

கனவிலிருந்து விழித்தவள் போல, மதுரம் நிமிர்ந்து அமர்ந்தாள் ''எ... என்ன? நீ எங்கேனும் போக வேண்டுமா?'' என்று கேட்டவளின் பார்வை, பேத்தியின் மீது இருந்தது.

''இல்லையே, வழக்கம் போலத்தான். தீபாவுக்குச் சிற்றுண்டி சாப்பிடுகிற நேரம். கைகால் கழுவிவிட்டு...''

''இன்று, ஓர் ஐந்து நிமிடம் பொறுத்துச் சாப்பிடட்டுமே? நீயும் உட்காரம்மா, தீபா, இங்கே பாட்டியிடம் வாம்மா'' என்று பேத்தியை அழைத்தாள் மதுரம்.

பொதுவாக, அந்த வீட்டில் ஒரு விசித்திரத்தை அவள் கண்டிருந்தாள். வீட்டின் முதல் பேத்தி, தீபா.

தாயற்றவளும் கூட, ஆளாளுக்குக் குழந்தையைக் கொஞ்சி குலாவுவதுதானே இயற்கை? ஆனால், வீட்டினர் எல்லோருமே, அவளைத் தவிர்ப்பதுபோலவே சாருமதிக்குத் தோன்றும்.

அவளைப் பார்ப்பதைத் தவிர்ப்பது, அவளோடு பேசுவதைத் தவிர்ப்பது... தீபாவாக, அருகில் சென்றால் யாரும் தள்ளிவிட்டுவிட மாட்டார்கள்தான். அவளுக்கு வேண்டியது என்று எதைக் கேட்டாலும், அந்தச் சாமான் உடனே வந்து சேர்ந்துவிடும்.

ஆனால், பொதுவாக அவளை யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள்.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் அல்லவா? அதனால், தீபாவும் வீட்டு மனிதர்களிடம் போய் ஒட்டிக் கொண்டு நிற்பதில்லை. அதுவே, வசதியாகப் போனது போல அவர்களும் ஒதுங்கிக் கொண்டார்கள்.

அதனால்தான், மதுரம் தீபாவைக் கூப்பிட்டது, சாருமதிக்கு வியப்பைத் தந்தது.

தீபா, முசுடோ, முரண்டுபிடிப்பவளோ அல்ல. எனவே, சாருமதியை ஒருதரம் நோக்கிவிட்டு, அவளை அழைத்த பாட்டியிடம் சென்று நின்றாள்.

பேத்தியை மெல்லத் தடவிக் கொடுத்தபடி, ''இன்றைக்குத் தோட்டத்தில் என்னம்மா விளையாடினாய்? பாட்டிக்குச் சொல்லு, பார்ப்போம்'' என்று கேட்டாள்.

சிறு தயக்கத்துடன் தொடங்கிய போதும், அம்மா, பாலனோடு, 'ஐஸ்பாய்' விளையாடியது, அவளை மட்டும் யாராலும் கண்டுபிடிக்க முடியாமல் போனது.

தோட்டக்காரன், அவளுக்கு 'யெல்லோ ரோஸ்' கொடுத்தது என்று ஒரொரு கதையாகத் தீபா சொல்ல, மதுரமும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

பாட்டியும் பேத்தியும் சோஃபாவில் சேர்ந்து அமர்ந்து பேசிக் கொண்டிருந்தது பார்க்கவும், கேட்கவும் நன்றாக இருந்ததால், சாருமதியும் சத்தமின்றி அதைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

'கம்ப்யூட்டர்' வகுப்பு முடிந்து காத்திருந்த அனுபமாவை அழைத்துக் கொண்டு, நித்யானந்தனும் அவன் தந்தையும் வீட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்து, வியப்புடன் நோக்கும்வரை இது நீடித்தது.

பொதுவாக, இவர்கள் வீடு வரும் நேரத்துக்குச் சற்று முன்பாகவே, தீபாவுக்குச் சிற்றுண்டி கொடுத்து முடித்து அறைக்கு அழைத்துப் போய்விடுவாள், சாருமதி.

அந்த வகையில், நித்யானந்தனின் முகத்தைப் பார்க்க வேண்டியிராது. ஆனால், இன்று விருந்தினர் வரவும், தொடர்ந்த பாட்டி பேத்தி உரையாடலும், வழக்கத்தை மறக்க வைத்து விட்டன.

விசுவநாதனும் அவருடைய மக்களும், உள்ளே வரவும், சாருமதி அவசரமாக எழுந்தாள். 'தீபாவுக்குச் சிற்றுண்டி கொடுக்க நேரமாகிவிட்டது. தீபா, வாம்மா...'' என்று அழைத்தாள்.

''சற்றுப் பொறு'' என்று தடுத்து விட்டு, மதுரம் கணவரையும் மகனையும் நேராகப் பார்த்தாள்.

''இன்றைக்கு, மகனுக்குத் திருமணம் என்று அழைப்புக் கொடுப்பதற்காக, நம் ஆனந்தி வந்திருந்தாள். தீபாவைப் பார்த்துவிட்டு, அசல் அனு சின்ன

வயதில் இருந்த மாதிரியே இருப்பதாகச் சொல்லிவிட்டுப் போனாள்!'' என்றாள்.

''அப்படியா?!'' என்று கேட்டபடி, மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதோடு, மீண்டும், மதுரத்தையும் பார்த்தனர்.

அவர்கள் நாலு பேருமாக, அவளுக்குத் தெரியாத படி, ஏதோ ரகசியம் பேசுவது போலச் சாருமதி உணர்ந்தாள்.

10

அத்தை சாயலில், பெண் இருப்பது அதிசயமா? இயற்கைதானே? அதில் என்னவோ, உலக மகா ரகசியம் ஒளிந்து கிடப்பது போலப் பார்வையாலேயே, பேசிக் கொள்கிறார்களே!

ஏதோ எண்ணியவனாக நித்யானந்தன், ''இதோ வருகிறேன்'' என்று அவசரமாக மாடியேறிச் சென்றான். சில வினாடிகளிலேயே, வேகமாகத் திரும்பி வந்தவனின் கைகளில், ஒரு புகைப்பட ஆல்பம் இருந்தது.

வரும் போதே, பக்கங்களைத் திருப்பிக் கொண்டே வந்தவனைப் போல, ஒரு பக்கத்தைக் காட்டி, ''பாருங்கள், அம்மா. மூன்று வயதில் அவள் பிறந்த நாளன்று, அனுவை எடுத்தது. அப்படியே, தீபா படத்தை வைத்து விட்டு மாற்றி விடலாம். இவ்வளவு சாயல் ஒற்றுமை இருக்கிறது. நாம் யாருமே, கவனிக்காமலே இருந்து விட்டோமே!'' என்று ஆச்சரியப்பட்டான்.

''ஆச்சரியம்தான்'' என்றார். விசுவநாதன்.

"என்னால் நம்பவே முடியவில்லையம்மா. என்னை மாதிரியே இருக்கிறாள், கண்ணாடியில் ஆயிரம் முறை பார்க்கிறேன். இந்த ஒற்றுமையை நானே கண்டு கொள்ளவில்லையே!" என்று அனுபமா வியந்தாள்.

"ஆக, ஒரு வழியாகக் கண்ணாடி முன்பாகவே வாசம் செய்வதை, ஒத்துக் கொண்டு விட்டாய். அதுவே பெரிய்ய விஷயம்!" என்று, நித்யானந்தன், கேலி பேச எல்லோரும், வாய்ப்புக் கிடைத்தாற்போலக் கண்ணில் நீர்வரச் சிரித்தார்கள்.

சிரித்து முடித்துவிட்டு, "நாம் அத்தனை பேரும், தினம் தினம் பார்க்கிறோம், நம் கண்ணில் படாத இந்த உருவ ஒற்றுமை, ஆனந்தி அத்தைக்கு, முதல் பார்வையி லேயே, தென்பட்டு விட்டதே!" என்றபடி மகளின் கன்னத்தை, லேசாக நிமிண்டி விட்டான் நித்யானந்தன்.

தன் உயரமான தந்தையை, ஆச்சரியமும் மகிழ்ச்சி யுமாகத் தீபா அண்ணாந்து பார்க்க, "தினம் பார்ப்பத னால்தான், நமக்குத் தெரியவில்லை, நித்யா. தீபாக் குட்டி எலும்பும் தோலுமாக இருந்தபோது, அவள் யாரோடும் ஒத்து நோக்குகிற மாதிரி இருக்கவில்லை. இப்போது, சாருமதியின் கவனிப்பில், குழந்தை சீராகச் சதை போட்டு வந்தது, பக்கத்திலேயே இருக்கும் நமக்கு வித்தியாசமாகத் தெரியாதுதானே? ஆனால், உன் அத்தை முதலில் பார்த்ததே தீபா அனு மாதிரியே இருக்கும் போதுதான். அதுதான், அவளுக்கு இந்தச் சாயல் ஒற்றுமை, உடனே புலப்பட்டுவிட்டது" என்று விளக்கி விட்டு, தீபாவின் கையைப் பற்றி முத்தமிட்டாள், மதுரம்.

என்னவோ, இவர்களின் பேச்சும், சிரிப்பும், ஆராய்ச்சியும் ஒன்றும் சாருமதிக்குப் பிடிக்கவில்லை.

நம் வீட்டுக் குழந்தை, இது யார் சாயலில் இருந்தால் என்ன வந்தது? அது, அனுபமா மாதிரி இருப்பதால் என்ன உயர்வு? அல்லாமல் போனதால் என்ன தாழ்வு? குலம் விளங்க ஒரு குழந்தை, அது போதாதா?

இந்த அர்த்தமற்ற, குடும்பப் பேச்சில் கலந்து கொள் ளவும் முடியாமல், தன் விருப்பமாய் விலகிப் போகவும் வழியின்றி, அவளுக்கு அது வேறு வெறுப்பாக இருந்தது.

இந்த மதுரம், 'சற்றுப் பொறு' என்று சொல்லி, நிறுத்தி வைத்து விட்டாளே! எஜமானியின் கட்டளை ஆயிற்றே? எப்படி மீறுவது?

இந்த வீட்டில் வேலை பார்ப்பவளாகத் தன்னை எண்ணிக் கொள்ளத் தொடங்கிய பிறகே, மனம் ஓரளவு அமைதி அடைந்ததால், சாருமதி எப்போதும், அப்படி யேதான் நினைப்பதே; மதுரத்தைக்கூட, 'அம்மா' என்று தான் அழைப்பாள்.

அவள் எப்படி அழைத்தாலும், தனக்கு ஒன்றுதான் என்பதுபோல மதுரமும், அதைத் திருத்தியதில்லை.

மற்றவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இருக்கும் பக்கம்கூட, அவள் செல்வதில்லையே!

தீபாவை வேறு, கொஞ்சியாகிறது! இந்த நேரத்தில், அவளைக் கூப்பிட்டால், அதுவும் நன்றாயிராது!

சாருமதி, கால் மாற்றி நிற்கையில், வீட்டுத் தலைவ ரின் கவனம், அவளிடம் திரும்பியது.

''அப்படியானால், தீபா விஷயம் தெளிவானதற்கு, நாம் சாருமதிக்குத்தான் நன்றி செலுத்த வேண்டும் என்கிறாயா? செலுத்தி விடுவோம். சொல்லம்மா, உனக்கு என்ன வேண்டும்? நகையா? பட்டா? என்ன வேண்டும், சொல்லு. வாங்கித் தருகிறோம்'' என்றார் அவர்.

எல்லோர் பார்வையும் அவள் மீது விழ, சங்கடமாக உணர்ந்து, ''ஒன்றும் வேண்டாம்'' என்று சாருமதி முணு முணுத்தாள்.

''அப்படிச் சொல்லாதே, அம்மா ஏதாவது வாங்கிக் கொள்'' என்று விசுவநாதன் வற்புறுத்தினார்.

அப்போதும், அவள் மறுக்கவும், ''தீபாவை நன்றாக வளர்த்திருப்பதற்காக, ஏதாவது பரிசு கொடுக்க வேண்டும் என்று அப்பா விரும்புகிறார் வாங்கிக் கொள்வது தானே?'' என்றான் நித்யானந்தன்.

''செய்ய வந்ததைச் செய்ததற்குப் பரிசு எதற்கு?'' என்று அவன் முகத்தைப் பாராமலே, சட்டெனப் பதில் சொன்னவள், விசுவநாதனிடம் திரும்பி, பணிவான குரலில், ''நல்ல சாப்பாடு, துணிமணி, ஏசி அறை! என்ன குறை எனக்கு? மெய்யாகவே, எனக்கு எதுவும் தேவையில்லை. தேவைப்படும்போது, நானே கேட்டு வாங்கிக் கொள்கிறேன். தயவு பண்ணி, இப்போது, என்னை வற்புறுத்தாதீர்கள், சார்'' என்று முடித்தாள். ''இன்னும் லேட்டாகச் சிற்றுண்டி சாப்பிட்டால், இரவுச் சாப்பாட்டுக்கு இவளுக்குப் பசியே எடுக்காது. அதனால் கூட்டிப் போகிறேன், தீபா, வாம்மா'' என்று, குழந்தையை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டாள்.

''திமிர்'' என்றாள், அனுபமா.

''அப்படிச் சொல்லாதே. அவள் பேசியதில், எது தப்பு?'' என்றாள் மதுரம்.

சிறு அமைதியின் பின், ''சார்! இதில் வேறு ஒரு சிக்கல் இருக்கிறது'' என்று யோசனையோடு உரைத்த வாறே, சோஃபாவில் அமர்ந்தார் விசுவநாதன்.

அவர் அருகில் உட்கார்ந்துகொண்டு, ''இதில் சிக்கல் என்னப்பா? நாங்கள் பார்த்த பெண், இவள் அல்ல. இவள், சரியான ஏமாற்றுக்காரி. அதனால், எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். அவ்வளவுதானே விஷயம்?'' என்றாள், அனுபமா.

''பெண் மாறிவிட்டது உண்மைதான். ஆனால், இந்த மாற்றத்தில், இவளது பங்கு என்ன? வைத்தி செய்தது எவ்வளவு? அது, நமக்குத் தெரியாதில்லையா? அந்தத் தரகருக்குச் சொல்லி அனுப்பினால், எப்போது பார்த்தாலும், ஊரில் இல்லை, வீட்டில் இல்லை என்கிறார்கள். ஆள், ஓடி ஒளிகிறாரோ என்கிற சந்தேகம் எனக்கு'' என்றார், வீட்டுத் தலைவர்.

''பேசாமல், சாருமதியையே கூப்பிட்டுக் கேட்டு விட்டால் என்ன?''

''என்னம்மா, நீங்கள்? அவள் உண்மை சொல்லுகிறாள் என்று நமக்கு என்ன நிச்சயம்? எப்படியும், அவள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளதானே முயற்சிப்பாள்?'' என்று மீண்டும், சாருமதியை நம்ப மறுத்தாள், அனுபமா.

''கவனிக்க வேண்டும். தொடர்ந்து கவனித்து வர வேண்டும். அப்படியா, ஒருவரது தன்மை அறியத் தெரியாமல் இருக்கிறோம்? கவனிப்பதிலேயே, கண்டு

கொள்ளலாம். இப்போதே, எனக்கு ஓரளவு நம்பிக்கை வரத்தொடங்கி இருக்கிறது'' என்றார் விசுவநாதன்.

அன்றுவரை, வீட்டின் ஒரே சின்னக் குழந்தையிடம் ஒட்டுதல் இல்லாமல் நடந்து கொள்ளுகிறார்களே, என்று சாருமதி, வருத்தப்பட்டிருக்கிறாள். இப்போது, அந்தக் குறை மாறி, எல்லோருமே, தீபாவிடம் அன்பு காட்டத் தொடங்கினர். பக்கத்தில் இருத்திப் பாசம் காட்டி, விரும்பியதை வாங்கிக் கொடுத்தார்கள்.

இப்படிக் கொஞ்சி மகிழ்ந்தது, சில சங்கடங்களையும் ஏற்படுத்தின.

அறையில் தனியாகப் படுத்து உறங்கப் பழக்கிவிட்டவள், தீபா. அந்த அச்சமற்ற தன்மை நல்லதுதான் என்று எண்ணி, சாருமதியும், அந்தப் பழக்கத்தை மாற்றவில்லை.

இரவில் ஒரு கதை சொல்லிவிட்டு, சிறுமியை வசதியாகப் படுக்க வைத்து, ஒரு 'குட் நைட்'டுடன், அவள் தன்னறைக்குத் திரும்பி விடுவாள்.

இடையில், ஓரிரு முறை எழுந்துபோய்ப் பார்ப்பதுண்டு. ஆனால், அது அனாவசியம் என்பது போல, தீபா புரண்டுகூடப் படுத்திருக்க மாட்டாள்.

அன்றும் அதுபோலத்தான், சுமார் பதினோரு மணிக்குச் சாருமதி, பக்கத்து அறைக்குச் சென்று பார்த்தபோது வழக்கத்துக்கு விரோதமாக, தீபா படுக்கையில் உருண்டு புரண்டு கொண்டிருந்தாள். பயந்த அழுகை வேறு.

தட்டிக் கொடுத்ததும், சற்று அமைதியானவள், சாருமதியின் கை விலகியதுமே, மீண்டும் புலம்பவும், ஒரு

போர்வை, தலையணையை எடுத்துப் போட்டுக் கொண்டு, தீபாவின் படுக்கை அருகிலேயே படுத்துக் கொண்டாள்.

ஒரு கையை நீட்டி, சின்னவளைத் தொட்டபடியே, அவள் படுத்திருக்க, தொட்ட கையைப் பிடித்துக் கொண்டு, தீபாவும் கீழே இறங்கி, சாருமதியை ஒட்டிப் படுத்துக் கொள்ள இருவருமே, அப்படியே உறங்கலாயினர்.

நள்ளிரவில், எதனாலோ சாருமதியின் தூக்கம் கலைந்துவிட, அவள் கண்விழித்துப் பார்த்தபோது, அறைக் கதவை, வெளிப்புறமிருந்து, யாரோ சாத்திக் கொண்டிருந்தார்கள்.

யாரோ என்ன? நித்யானந்தனாகத்தான் இருக்க வேண்டும்.

இந்த இடத்துக்கு, வேறு யார் இப்படி உரிமையோடு வருவார்கள்?

அவன் வந்த நேரம், அவள் நைட்டியில் எப்படியெப்படி...

அவசரமாகத் தன்னை ஆராய்ந்தவளுக்கு, மனம் குன்றிப் போயிற்று. ஏனெனில் கட்டிலில் படுத்திருந்த தீபாவைத் தொட்டுக் கொண்டிருப்பதற்கு வசதியாக அவளே, கொஞ்சம் நெளித்துக் கொண்டுதான் படுத்திருந்தாள்.

குழந்தை, கூட வந்து படுத்தபோது, ஆடை இன்னும் கொஞ்சம் விலகிப் போயிருந்தது.

மொத்தத்தில், ஒருமாதிரிப் படம் வரைவதற்கான 'போஸ்'!

அந்த நிலையில் அவளைப் பார்த்ததும் என் னென்ன நினைத்தானோ?

சும்மா, இரண்டு வார்த்தை பேசி வரச் சென்ற போதே, என்னவெல்லாம் சொன்னான்? இப்போது இன்னும் என்னென்ன சொல்லப் போகிறானோ?

கலக்கத்துடனே வளைய வந்தவள், இனி நித்யானந் தன் பார்க்கக்கூடிய இடத்தில் இந்த மாதிரி இந்த மாதிரி என்ன, எந்த மாதிரியும், அவன் கண்களில் படவே கூடாது என்று, தனக்குள் முடிவு செய்து கொண்டாள்.

கூடவே, ஒரு நாளுமில்லாமல் குழந்தை ஏன் இப்படித் தூக்கமின்றித் தவித்தாள் என்று அறிய, விசா ரித்த போது அன்றிரவு, அவள் அத்தையுடன் டீவியில் பேய்ப்படம் பார்த்தாள் என்பது தெரிய வந்தது.

இந்த விஷயத்தை, இப்படியே விட்டுவிடக் கூடாது என்று எண்ணியவளாய், அனுபமாவிடம் சென்று, அந்த மாதிரிப் படங்களை தீபாவைப் பார்க்கவிட வேண்டாம் என்று, கேட்டுக் கொண்டாள்.

ஆனால், ''எங்கள் வீட்டுப் பிள்ளையைப் பார்த்துக் கொள்ள, எங்களுக்குத் தெரியும். தகுதிக்கு மீறி, அலட்ட வேண்டாம்'' என்று, முகத்தில் அடித்தாற்போலப் பதில் சொல்லிவிட்டுப் போய்விட்டாள் அவள்.

கொஞ்சகாலமாக ஓரளவு தட்டிக் கொடுப்பது போலவே, பெரியவர்கள் நடந்து கொண்டதாலோ, என் னவோ இந்த எடுத்தெறிந்த பேச்சு, சாருமதிக்கு மனதிற் குக் கஷ்டமாகவே இருந்தது. மீண்டும், அடிமட்டத்திற் குத் தள்ளி விட்டது போல, ஒரு வருத்தம் உண்டாயிற்று.

ஆயினும், புண்ணுக்குப் புனுகு தடவினாற் போல, இன்னொன்றும் நடந்தது.

''ஏனம்மா, அன்று அழுதாய்?'' என்று மகளிடம், நித்யானந்தன் கேட்டுக் கொண்டிருந்ததைக் கவனித்த வாறே, அப்பால் சென்றுவிட்ட சாருமதியிடம், ''உன் அறையில், ஒரு டீவி வைக்கலாம் என்று பார்க்கிறோம். என்ன டீவி வாங்கலாம்?'' என்று மதுரம் கேட்டது ஓர் இனிய அதிர்ச்சியாக இருந்தது.

ஏற்கனவே, ஏசி, இலவம் பஞ்சு மெத்தை! இப் போது டீவியா? இந்த வசதிகள் இல்லாத நாளை மனதில் கொண்டு, இருக்கும் வசதிகளைக் கூடச் சாருமதி, முடிந்த வரை பயன்படுத்திக் கொள்வது கிடையாது.

எனவே, டீவியை இதமாகவே மறுத்து விட்டாள். தேவைப்பட்டால்தான் ஹாலில் பார்த்துக் கொள்ள லாமே!

காஃபி, குளிர்பானம் அளவில் உபசரிக்கப்பட வேண்டியவர்கள், அடிக்கடி வந்து போகிற இடம் என்ப தால், வீட்டினர் யாரும், ஹாலில் உட்கார்ந்து, டீவி பார்ப்பது இல்லை என்பது, அவளுக்கும் தெரியும்தான். ஆயினும், அவளோ, தீபாவோ அதிகம் பயன்படுத்தப் போவது இல்லை என்பதால் அதுவே போதும் என்று, சாருமதி பிடிவாதமாகவே மறுத்து விட்டாள்.

மறுநாள், தீபாவை 'ப்ளே ஸ்கூலி'ல் சேர்ப்பது பற்றி அவளிடம் சொல்ல வந்த நித்யானந்தன், அதை முடித்து விட்டுத் தொடர்ந்து, ''அம்மா அறையிலும், என் அறை யிலும் கூட, டீவி இருக்கிறது எப்போது வேண்டுமானா லும், தீபாவும், அவள் அம்மாவும், அவர்கள் விருப்பம்

போல வந்து பார்க்கலாம்' என்று ஒரு முறுவலோடு கூறிவிட்டுப் போனாள்.

மொட்டு விரிந்து மணம் பரப்புவது போல, மனதி னுள், ஓர் இனிய பரவசம், பொங்கிப் பெருகுவதை உணர்ந்த சாருமதி சற்றுத் திகைத்தாள்.

இவனிடமா?

முதல் நாளிரவில், அநியாயமாக அவன் பேசி யதை, வெகு சிரமப்பட்டு நினைவுக்குக் கொணர்ந்து அந்தப் பரவசத்தை அடியோடு துடைத்தெறிந்தாள். இனி, இது போன்ற உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று முடிவும் செய்து கொண்டாள்.

அதனாலேயே, அடுத்த நாள் பள்ளிக்குத் தாயும் தகப்பனும் சேர்ந்துதான் குழந்தையைக் கூட்டிவந்து விட வேண்டும் எனும் பள்ளி விதிக்கிணங்க, நித்யானந்த னோடு ஒரே காரில் செல்ல நேர்ந்த போதுகூட, அவள் தீபாவுடன் மட்டுமே பேசிக் கொண்டிருந்தாளே தவிர, அவனோடு, தானாக ஒரு வார்த்தைகூடப் பேசினா ளில்லை.

ஆனால், தீபா கேட்ட கேள்விகள் அத்தனைக்கும், அவள் அலுக்காமல் சளைக்காமல் பதில் சொன்ன விதமே, நித்யானந்தனுக்கு அவளைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை உயர்த்தியது என்று அப்போது அவ ளுக்குத் தெரியாது.

அந்த சிறு பயணம் பற்றித் தாயிடம் குறிப்பிட்ட நித்யானந்தன், "இவள்தான் தீபாவைப் பெற்ற தாயோ என்ற பிரமைகூட வந்து விட்டது. அம்மா, ஆனால்

அப்பா சொன்னமாதிரிப் பொறுத்திருந்து பார்ப்போம்" என்றான் மைந்தன்.

"எனக்குக்கூட, அப்படித்தான் இருக்கிறது, கண்ணா. நேற்று கூட, டீவியில் ஒரு படம், 'அனிமே ஷன்' படம், நமக்கெல்லாம், கொஞ்சம் போர்தான். ஆனால், சின்னப் பிள்ளைகள் படம் என்பதால் தீபா வோடு உட்கார்ந்து பார்த்ததோடு, புரியாத இடங்களில் சின்னக் குட்டிக்குக் கதையும் சொன்னாள். பார், நானே, அந்தப் படத்தை உட்கார்ந்து பார்க்கத் தொடங்கிவிட் டேன். அப்புறமாய், அவளிடம் பேசிக் கொண்டிருந்தது கூட, மிகவும் நன்றாகத்தான் இருந்தது" என்றாள், மதுரமும்.

"எல்லாம் சரிதான். ஆனால், அவள் நம்மை ஏமாற்றி இந்த வீட்டுக்குள் வந்தவள் என்பதை மட்டும் அடியோடு மறந்து விடாதீர்கள்" என்றாள் அம்மாவும் அண்ணனும் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த, அனு பமா.

தாயும், மகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ஒரு தரம் கண்மூடித் திறந்தான், மைந்தன். "அனு சொல்வதும் சரிதான், அம்மா. ஆண்டுக் கணக்கில்கூட மனதை மறைப்பவர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்? நாமும், அவர்களைப் பார்த்திருக்கிறோம்தானே? தெளி வாகத் தெரிந்து கொள்ளுமுன், எந்த முடிவும் செய்ய வேண்டாம்" என்று முடித்தான்.

தீபா பள்ளிக்குப் போகத் தொடங்கினாள்.

முதலில் சில நாட்கள், தாய் அல்லது தந்தை, குழந்தையோடு கூடவே இருந்து, பள்ளி முடிந்ததும் கூட்டிப் போக அனுமதித்தார்கள்.

தினமும், ஒன்றரை மணி நேரம் காத்திருந்து, மகளை அழைத்து வந்த சாருமதிக்கு ஓர் ஐடியா தோன்றியது. நன்றாக யோசித்துவிட்டு, மதுரத்திடம் அது பற்றிப் பேசினாள்.

தனக்கு, எந்தவித ஆட்சேபமும் இல்லை என்றுரைத்த அந்தப் பெண்மணி, கணவனிடமும், பிள்ளையிடமும் அது குறித்துப் பேசுவதாகக் கூறி, அவளை அனுப்பி வைத்தாள்.

அன்றிரவு, தீபாவைத் தூங்கவைத்த பிறகு, 'லைப்ரரி' புத்தகம் ஒன்றைச் சாருமதி படித்துக் கொண்டிருந்தபோது, அவளது அறைக் கதவு தட்டப்பட்டது.

மதுரமோ என்று யோசித்தபடியே, புத்தகத்தில் 'புக்' மார்க்'கை அடையாளம் வைத்து, புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, வந்து கதவைத் திறந்தவள், வெளியே நின்ற நித்யானந்தனைக் கண்டு திடுக்கிட்டாள்.

11

திருமணம் என்ற பெயரில் நடந்த கேலிக் கூத்தின் பின்னர், அந்த முதல் நாளிரவுக்குப் பிறகு, சாருமதி, நித்யானந்தனைத் தனிமையில் சந்தித்ததே இல்லை.

இந்தப் பிறவி முழுமைக்குமே, அந்த ஒருநாள் இரவே போதும் என்பது, அவளது கருத்து. அதனால், தற்செயலாகக்கூட அந்தமாதிரிச் சந்திப்புகள் நேர்ந்து

விடாமல், சாருமதி வெகு கவனத்துடன் இருந்து வந்தாள்.

ஆனால், இவன் கதவைத் தட்டியல்லவா கூப்பிடுகிறான்?

அன்றைய இரவின் நினைவே இல்லாதவன் போல, சர்வ சாதாரணமாக நின்று கொண்டிருந்தவனைப் பார்க்கவும், அவளுக்கு நெஞ்சு குமுறியது.

அந்த முதல் நாளின் அவனது குரலைக் கொண்டு வர முயன்றபடி, ''என்ன?'' என்று கேட்டாள்.

''சற்றுப் பேச வேண்டும்'' என்றான் அவன்.

''என்னிடம் பேச, உங்களுக்கு என்ன இருக்கிறது?'' என்று சற்று எடுப்பாகவே அவள் கேட்டாள்.

முகத்திலோ, குரலிலோ எந்தவித மாறுதலும் இல்லாமல், ''பண விஷயம்'' என்றான் அவன். ''உள்ளே போய்ப் பேசலாமா?''

மறுப்பது அசட்டுத்தனமாகத் தோன்றும் என்று உணர்ந்து, வழி விட்டு ஒதுங்கி நின்றாள் அவள்.

உள்ளே சென்று ஒரு மோடாவைக் கைகாட்டிவிட்டு இன்னொன்றில் அமர்ந்தவன், ''கம்ப்யூட்டர் வகுப்பில் சேர வேண்டும் என்றாயாமே?'' என்று நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

எதற்கு வருகிறான் என்பது புரியாமல் ''ஆமாம்'' என்றாள் அவள் சுருக்கமாக.

''எதற்காக?'' என்று அவனும் சுருக்கமாகவே கேட்டான்.

உதட்டைக் கடித்து ஒரு கணம் தயங்கியவள், ஒரு சிறு தலைச் சிலுப்பலுடன் ''தீபாவை வளர்க்கிற வேலை, எக்காலத்துக்கும் நிலைத்திருக்க முடியாதல்லவா? அவள் வளர்ந்தபின் வெளியேறச் சொல்லுவீர்களே, அப்போது வயிற்றுப் பாட்டுக்கு ஏதாவது வேண்டாமா? கையில் இருக்கும் பிகாம் டிகிரியால் பெரிய பிரயோசனம் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தாயிற்று! இன்னோர் இடத்தில் போய் இந்த மருமகள் வேலை, ஆயா வேலை எல்லாம் செய்ய முடியுமா, என்ன? அதனால்தான்'' என்று சிறு ஏளனம் கலந்த குரலில் சொல்லி முடித்தாள்.

அவள் பேசப் பேச, அவளையே பார்த்துக் கொண்டு இருந்தவன், லேசாக முறுவலித்தான். பிறகு, ''அந்த மாதிரி நேரத்தில் உனக்கு, நானே ஏதாவது செய்து தரமாட்டேனா?'' என்று, அவன் கேட்ட விதத்தில் ஒரு கணம் சாருமதிக்குத் தொண்டைக்குள் அடைத்தது.

லேசாகச் செருமி, அதைச் சீர் செய்யும்போதே, அன்றைய நினைவில், மீண்டும் தலையைச் சிலுப்பினாள். 'தான் திருடி, பிறரை நம்பாள்' என்பார்கள். நான் எப்படிப்பட்ட பெண் என்பதுதான் உங்களுக்கு மிக நன்றாகத் தெரியுமே! அப்பேர்ப்பட்ட நான், உங்களை எப்படி நம்புவேன்?'' என்று கேட்டாள்.

தலையசைத்து, ''சாருமதி, அன்றைய பேச்சு...'' என்று நித்யானந்தன் தொடங்கியதைச் சாருமதி இடைமறித்தாள்.

''மன்னிக்க வேண்டும். அன்றைய பேச்சு முடிந்து விட்ட ஒன்று. கடந்த காலம் வெறும் குப்பைக்குச் சமானம். அதைப் பற்றிப் பேச, எனக்கு விருப்பமில்லை. இன்றைய விஷயம் பேசுவதானால் பேசுங்கள், அல்லது..'' என்று குறிப்பாகக் கதவைப் பார்த்தாள்.

மீண்டும் லேசாக முறுவலித்துவிட்டு, ''சரி, இன்றைய விஷயமே பேசலாம். நீ கேட்கிற 'கோர்ஸு'க்கு எவ்வளவு பணம் ஆகும், தெரியுமா?'' என்று கேட்டான் அவன்.

பெரிய பணம்! அவள் இழந்திருப்பதற்கு விலை போட யாரால் முடியும்? உள்ளூர ஆத்திரமுற்று, ''தெரியும். அதை என் சம்பளத்தில் கழித்துக் கொள்ளுங்கள்.'' என்றாள் அவள் எடுப்பாக.

''சம்பளத்திலா?!'' என்று வியந்தான் அவன்.

''ஆமாம், சம்பளத்தில்தான்'' என்றாள் அவள் தயக்கமற்று. ''இன்றைய விலைவாசி பற்றி உங்களுக்கும் தெரியும்தானே? மருமகள் வேலை, ஆயா வேலை என்று இரண்டு முழு நேர வேலைக்கு, வெறும் சாப்பாடு போட்டுத் துணிமணி கொடுத்தால் சரியாகிப் போகுமா? சம்பளமாக எவ்வளவு பணம் கொடுக்க வேண்டியிருக்கும்? அதில் கழித்துக் கொள்ளுங்கள்! இல்லை முழுவதையுமே வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள், அவ்வளவுதானே?''

அன்று எப்படியெல்லாம் பேசினான்? அவளைக் கூனிக் குறுக வைத்தான்! ஏதோ ஒரு வகையில் திருப்பிக் கொஞ்சமாவது கொடுக்க வேண்டாமா? அப்படியும், அவள் ஒன்றும் அவளாக, அவனைத் தேடிப் போய்ப் பேசவில்லையே! அதற்கு மரியாதை கொடுத்து, ஒதுங்கிப் போகாமல் வந்து நின்றால் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான்.

உள்ளர்த்தம் பார்த்தால் நித்யானந்தனும், குன்றிப் போய் நிற்க வேண்டியதுதான். சம்பளம் கொடுக்காமல் இருப்பதற்காக பேருக்குத் தாலியைக் கட்டிவிட்டு, இரு மடங்கு வேலை வாங்குகிறான் என்ற குற்றச்சாட்டு, அவனை நிச்சயம் குறுக வைக்கும் என்று எண்ணியவள், அவன் சட்டெனச் சிரிக்கவும், திகைத்து நோக்கினாள்.

சாருமதியின் கேள்வியை உணர்ந்தவனாக வெறுமனே தலையசைத்துவிட்டு, ''இப்போது, நீ 'கம்ப்யூட்டர்' வகுப்புக்குப் போக வேண்டும், அவ்வளவுதானே? போய் வா, ஆனால்...'' என்று இழுத்தான்.

ஏதோ தடை வரப் போகிறது என்று எண்ணியவளாக ''என்ன ஆனால்?'' என்று தலை நிமிர்த்திக் கேட்டாள், அவள்.

''இந்தக் கல்வி, நீ நினைக்கிற மாதிரி பயன்படுமா, என்பதில் எனக்குச் சந்தேகம். அதனால் என்ன, பரவாயில்லை, எப்படியும், கல்வி, கல்விதானே? ஏதாவது ஒரு வகையில் உதவும். கற்றுக் கொள். சரியாக எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்று சொல்லு. தந்துவிடுகிறேன்'' என்று கூறிவிட்டுக் கிளம்பினான்.

சாருமதி எதிர்பார்த்ததிற்கு நேர்மாறாக, எளிதாகக் கிடைத்த இந்த அனுமதி அவளைச் சற்றுக் குழப்பியது. அத்தோடு, கதவருகில் நின்று திரும்பி, முறுவலோடு அவன் ''குட்நைட்'' சொல்லிவிட்டுச் சென்ற போது, அவளுக்குத் தலை சுற்றிவிட்டது.

மெல்ல எழுந்து சென்று விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் சரிந்தவளுக்கு ஒரு விஷயம் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து போயிற்று.

இந்த நித்யானந்தன் ரொம்பவும் அபாயகரமானவன். இவனிடமிருந்து எவ்வளவு தூரம் விலகி இருக்கிறாளோ, அவ்வளவுக்கு, அவளுக்கு நிம்மதி நிலைக்கும்! அவனது கோபத்தை விடவும், அவனது சிரிப்பில் ஆபத்து அதிகம்!

தன் கண்டுபிடிப்பின் விளைவாக, முடிந்த அளவு, நித்யானந்தன் இருக்குமிடத்திலிருந்து பத்து மீட்டர் தள்ளியே, சாருமதி இருக்கத் தொடங்கினாள்.

அது, அவ்வளவு கடினமாகவும் இல்லை.

காலையில், தீபாவைப் பள்ளியில் விட்டுவிட்டுக் கம்ப்யூட்டர் வகுப்புக்குப் போனால், ஒன்றரை மணி நேரம் அங்கே கழியும். அதற்குள், விசுவநாதன் மகன், மகளோடு கிளம்பிப் போய்விடுவார், அனுபமாவைக் கல்லூரியில் விட்டுவிட்டு, ஆண்கள் இருவரும் அலுவலகத்துக்குப் போவார்கள்.

மூவருமே, மதியச் சாப்பாட்டுக்கு வருவதில்லை.

மாலையில், அவர்கள் மூவரும் திரும்பி வரும் நேரத்தில், தீபா சிற்றுண்டி முடித்துவிட்டுக் காத்திருப்பாள்.

தந்தை, தாத்தா, அத்தையோடு சுமார் ஒரு மணி நேரம் பேசி, விளையாடிக் கொண்டிருப்பாள்.

முன்பு அந்த நேரத்தில் உள்ளூரச் சிறு சங்கடத்துடன் சாருமதியும், அங்கேயே சற்று ஒதுங்கினாற்போல உட்கார்ந்திருப்பாள். இப்போது, தன் பாடத்தைப் படிக்கப் போவதாகச் சொல்லிச் சென்றுவிடுவாள்.

அதன் பின், தீபாவின் படிப்பு, சாப்பாடு, உடம்பு கழுவல், தூக்கம் என்று பொழுது கழிந்துவிடும்.

இப்படிக் காலம் போய்க் கொண்டிருந்த போது, தீபாவின் சாயலை இனம் கண்ட ஆனந்தி வீட்டுத் திருமணம் நெருங்கி வந்தது.

"உன்னையும் அழைத்திருக்கிறாள். அதனால் நீயும் வரவேண்டும்" என்றாள் மதுரம்.

சாருமதியின் மறுப்பை, அவள் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

"நீ இல்லாமல் போனேன் என்றால், ஆனந்தி என்னை, உள்ளேயே விடமாட்டாள். அவள் மகள் லதாகூட இன்று ∴போன் செய்து, "அக்காவைக் கட்டாயம் கூட்டி வாருங்கள்" என்றாள். உன்னை, அங்கே எல்லோருக்குமே பிடித்துவிட்டது என்று நினைக்கிறேன். திருமணத்துக்குக் கட்ட, நல்ல பட்டுச் சேலை ஒன்று முதலில் வாங்க வேண்டும். தீபாவுக்கு அவளுக்குக் கூட, நல்லதாக ஒரு ∴ப்ராக் வாங்கிவர வேண்டும். நாளை மதியம் போய் வாங்கி வருகிறாயா?"

மதுரம் மடமடவென்று திட்டம் தீட்டினாள்.

இன்ன மாதிரிச் சேலை வாங்க வேண்டும் என்று, அவளை அழைத்துப் போய், தன் சேலைகள் சிலவற்றைக் காட்டிவிட்டு, நூறு ரூபாய் நோட்டுக் கட்டு ஒன்றையும், மதுரம் அவளிடம் நீட்டவும், சாருமதி திகைத்துப் போனாள்.

"இது மாதிரியெல்லாம் வாங்குவதற்கு, எனக்கு என்னம்மாதெரியும்? நான் ஆசிரமத்தில் வளர்ந்தவள்" என்று சாருமதி சொல்லி முடிக்குமுன், மதுரம் இடை யிட்டு, "இதைப் பற்றித்தான், உன்னிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருந்தேன். இனிமேல்

என்னை 'அம்மா' என்று கூப்பிடாதே. கேட்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்? ஒழுங்காக 'அத்தை' என்று சொல்லு." என்றாள்.

மதுரம் சாதாரணமாகப் பேசுகிற விதத்துக்கு, கிட்டத்தட்டக் கட்டளையிடுகிற மாதிரிச் சொன்னாள், எனலாம்.

ஆனால் சாருமதிக்குத்தான், அதை ஏற்க முடிய வில்லை. இந்தப் பெரியவள் 'அத்தை'யாக வேண்டுமானால், இவளுடைய மகன், சாருமதிக்குக் கணவனாக வேண்டும் அல்லவா? அது ஒருநாளும் நடக்க முடியாதது எனும்போது, அப்படி எப்படி அழைப்பது? மற்ற பணியாளர்களைப் போல, 'அம்மா' என்பதே மேல் அல்லவா?

மதுரம் எதற்காக, இப்படிக் கேட்கிறாள் என்பதும் அவளுக்குப் புரிந்தது. உறவினர் வீட்டுத் திருமணத்தில் இப்படி 'அம்மா' என்றுவிட்டால் நன்றாயிராது.

"கல்யாண வீட்டில் அப்படிக் கூப்பிடுகிறேன். இங்கே, இப்படியே இருக்கட்டும்." என்ற அவள் மெல்லிய குரலில் கூறவும், மதுரத்துக்குக் கண் கலங்கிவிட்டது.

இவ்வளவு தூரம், மற்றவர்களுக்காக யோசிக்கிறவள், எப்படிக் கெட்டவளாக இருக்க முடியும்? ஆனால், வைத்தியலிங்கத்திடமும் கேட்டுச் சரி பார்த்துக் கொள்ள முடியாத போது, இவளிடம் மட்டும் விவரம் கேட்டு என்ன லாபம்? மதுரத்தைப் பொறுத்தவரையில் சாருமதியை அப்படியே நம்ப, அவள் தயார். ஆனால், மற்றவர்கள் அதை ஒப்ப மாட்டார்களே!

ஆனானப்பட்ட அந்த சீதா பிராட்டிக்கே, அக்கினிப் பரீட்சை வைத்த நாடல்லவா, இது!

அந்த மனிதர் கிடைக்கும் வரை, பொறுத்தே ஆக வேண்டும்.

சாருமதியின் நெஞ்சுக்குள் இருக்கக் கூடிய நோவையும் தாங்க முடியாமல், "எல்லாம் விரைவில் நேராகி விட, முருகன் அருள்வான், அம்மா. ஆனால், என்றைக்கும் நீதான் என் மருமகள், அதில் மட்டும் எனக்குச் சந்தேகம் கிடையாது, தெரிந்து கொள்" என்று உறுதியான குரலில் உரைத்தாள்.

பட்டுச் சேலை வாங்க ஒத்துக் கொண்டாலும், மதுரமும் கூட வந்தாலொழிய அது முடியாது என்று சாருமதி சாதித்து விட்டாள்.

பச்சையில் சிலப்புக் கறையிட்ட சேலையைத் தனக்காகத் தேர்ந்தெடுத்த சாருமதி, சிவப்பில் பச்சைக் கரை அமைத்த பாவாடையை தீபாவுக்காகத் தெரிவு செய்த போது, மதுரம் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். மாமியார் சொல்லாமலே, சாருமதி குழந்தைக்காக வாங்கினாள் என்றால், மனதளவில் அவள் தீபாவின் தாயாகி விட்டாள் என்றுதானே, அர்த்தம்?

தீபாவுக்கு ஒரு தாய் கிடைப்பதுதானே, இப்போது முக்கியம்? மற்றதெல்லாம் போட்டு, மனதைக் குழப்பிக் கொள்வானேன்?

சேலை, பாவாடையைப் பணத்தைக் கொடுத்து வாங்கி வருமாறு சாருமதியிடம் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு, அங்கிருந்த நீண்ட இருக்கைகளுள் ஒன்றில், தளர்வாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

'பில்', மிச்சப் பணம், துணிப் பெட்டிகளோடு திரும்பி வந்த சாருமதி, பெரியவள் கண்மூடி அமர்ந்திருப்பதைப் பார்த்ததும், பணத்தையும், பில்லையும் தன் கைப்பைக்குள் வைத்துக்கொண்டு, துணிப் பெட்டிகள் அடங்கிய பைகளோடு, சற்று விலகி உட்கார்ந்து கொண்டு, தீபாவையும் அந்தப் பக்கமாகவே, விளையாட விட்டாள்.

சில நிமிடங்களில் கண் விழித்த மதுரம், மருமகளைப் பார்த்து, சிறு வெட்கத்துடன் முறுவலித்தாள்.

உடனே எழுந்து அருகில் வந்த சாருமதி, "ரொம்ப அசதியாய் இருக்கிறதா, அத்தை? அதனால்தான் என்னையே வாங்கி வரச் சொன்னீர்களா? தெரியாமல் இழுத்து வந்து, கஷ்டப்படுத்தி விட்டேனே! சாரி, ரொம்ப சாரிம்மா" என்று வருத்தப்பட்டாள்.

மதுரத்தின் புன்னகை விரிந்தது.

சாருமதி புரியாமல் பார்க்கும் போது, "அத்தை, அம்மா எல்லாம் கலந்து குழப்பியடிக்கிறாயே!" என்று சிரித்தாள், மதுரம்.

உதட்டைக் கடித்துக்கொண்டு, அவள் நிற்க, "சரி, சரி, வா, போகலாம்" என்று மதுரம் துணிப்பைகளை எடுக்கச் செல்ல, "நான் தூக்கி வருகிறேன்" என்று எடுத்துக்கொண்டு தீபாவையும் வீடு செல்ல அழைத்தாள்.

இவர்கள் வீட்டை அடைந்த போது, மற்றவர்களும் வந்து சேர்ந்திருந்தனர்.

மனைவியின் முகத்தைப் பார்த்த விசுவநாதன், "பணம் வைத்திருக்கிறாயா, மதுரம்? ஆள் வருவான். ஓர் இரண்டாயிரம் கொடுக்க வேண்டும்" என்றார்.

''என் அறையில்...'' என்று நித்யானந்தன் தொடங்கும்போதே, ''என்னிடம் இருக்கிறதே'' என்று சாருமதி அவள் கைப்பையைத் திறந்தாள்.

உள்ளிருந்து பணத்தை எடுத்துக் கொண்டே, ''துணிக் கடையில் மிச்சமானது, அம்மா. பில்லையும் மிச்சத்தையும் வாங்கி என் பையில் வைத்தேன்...'' என்றபடி, ரூபாய் நோட்டுகளை எண்ணி, ''இரண்டாயிரத்து முந்நூறு இருக்கிறது'' என்று பணத்தை மதுரத்திடம் நீட்டினாள்.

மதுரத்தின் பார்வை, பணத்தில் இல்லை, யாருடைய பார்வையும்தான்.

வாயால் பேசாத அந்த அமைதியில் மற்ற நால்வரும், அவளுக்குத் தெரியாமல் ஏதோ ரகசியம் பேசுவது போலச் சாருமதி உணர்ந்தாள்.

12

என்னவாக இருக்கும்? அவள், அதிகம் செலவு செய்துவிட்டாளா? மதுரம் விரும்பியதை விட மிகவும் குறைவாகத்தானே வாங்கினாள்?

சாருமதி, திகைத்து நோக்கும்போதே, அவள் எண்ணியதே தவறோ எனும்படியாக எல்லோருமே பேசத் தொடங்கினர்.

''துணிக்கடைக்குப் போய், இரண்டு பெண்கள் சென்று மிச்சம், அதலும் இரண்டு ஆயிரத்துக்கும் அதிகமாகக் கொண்டு வந்திருக்கிறீர்களா? கின்னஸில் எழுதி

வைக்க வேண்டிய அதிசயமாக இருக்கிறதே!'' என்றார், விசுவநாதன்.

''அதற்கு மேல் வாங்கவிடாமல், இவர்களைத் தீபா இழுத்து வந்திருப்பாள், அப்படித்தானே, கண்ணு?'' என்று மகளை உயரத் தூக்கிக் கொஞ்சலாகக் கேட்டான், நித்யானந்தன்.

இவன் தான் பெற்ற பெண்ணிடம், உரிய பிரியத்தோடு இல்லை என்று எண்ணினோமே என்று ஆச்சரியத்தோடு நினைத்தாள், சாருமதி.

''இல்லை...'' என்று, தீபா கிளுக்கிச் சிரிக்க, ''பெண்ணில்லையா? அம்மா, பாட்டி பக்கம் சேர்ந்துவிட்டாள்!'' என்று நித்யானந்தன் நகைக்க, அனுபமா, புதுத் துணிகளைப் பார்க்கச் சென்றாள்.

திருமண நாள் அழகாக விடிந்தது.

பின்காலையில் பதினோரு மணிக்கு மேல் கல்யாணம்.

நிதானமாக 'ஷாம்பு' போட்டு, தீபாவைக் குளிப்பாட்டி, சாருமதி தானும் குளித்து முடித்து, இருவரின் அலங்காரத்தையும் கூடத் தன்னால் ஆன மட்டும், பத்து மணிக்கே முடித்து வைத்திருந்தாள்.

பெண்ணுக்குப் பட்டுப் பாவாடை சட்டை அணிவித்து, தலைமுடியைப் பின்னோக்கி வாரி பூவேலை செய்த 'பான்ட்' கொண்டு கட்டி, கெட்டிப் பூச்சரத்தையும் ஒரு சுற்று சுற்றித் தொங்க விட்டிருந்தாள்.

கன் பட்டு விடும்போலக் குழந்தை மிக அழகாக இருந்தாள்.

சேலையைக் கட்டிக்கொண்டு கண்ணாடியில் பார்த்தபோது, அவளும் அழகாக இருப்பது போலத் தான் சாருமதிக்குத் தோன்றியது.

ஆனால், இந்த மாதிரிப் பட்டுச் சேலைகளுக்குக் கனமான நகைகளும் அணிய வேண்டும். அப்படிப்பட்ட நகைகளுக்கு அவள் எங்கே போவாள்?

அவளது திருமணத்தின்போது, அலங்காரம் செய்ய வந்த பெண்மணி பூட்டிவிட்ட நகைகளை, முன்பே சாருமதி மாமியாரிடம் கொடுத்து விட்டிருந்தாள்.

சாதாரணமாக அணிந்து கொள்வதற்காக என்று மதுரம் கொடுத்திருந்த சில மெல்லிசான நகைகள், இந்தச் சேலைக்குப் பொருத்தமானவை அல்ல. அவற்றை அணி வதைவிட அணியாமல் இருப்பதே மேல்.

யோசித்தபடி சாருமதி நிற்கும்போதே, செண்பகம் கதவைத் தட்டி, ''அம்மா, ஒங்களை, அவங்க ரூம்புக்கு வரச் சொன்னாங்கம்மா...'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

சாருமதி, மாமியாரின் அறைக்குச் சென்றபோது, அங்கே மதுரம் ஒரு நகைப் பெட்டியுடன் காத்திருந்தாள்.

''இந்தச் சேலைக்குப் பொருத்தமாக இருக்கும் என்று, எமரால்ட் செட்டை எடுத்து வரச் சொன்னேன். அணிந்து கொள்.'' என்று சாருமதியிடம் கொடுத்தாள்.

சாருமதிக்கு, உள்ளூரத் தயக்கம்தான். ஆயினும் மறுக்காமல் வாங்கி, அணிந்து கொண்டாள்.

திருமணத்துக்குப் போகவென்று கிளம்பியாயிற்று. விழாவுக்குச் சரியாகச் சேலையும் கட்டியாயிற்று. பொருத்தமாக நகைகளையும் அணிந்தால்தான் நன்றாயி

ருக்கும். எப்படியும் அணிந்துதான் ஆக வேண்டும் என்கையில், தயங்குவதே, வெறும் நடிப்பு போலத் தானே?

தீபாவுக்கு என்று மதுரம் எடுத்து வைத்திருந்த காசுமாலையைப் பார்த்ததும், மாமியார் மேல் சாருமதிக்கு மதிப்பு கூடியது.

பொடிப் பொடிக் காசுகளை ஒன்றோடொன்று ஒட்டி னாற்போல, அமைப்புடன் கூடிய அந்தப் பொன்மாலை தீபாவுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. மெல்லிதாக, ஓர் ஒட்டியாணம், மேலே வங்கியோடு, மணிக்கட்டில் பிரேஸ்லெட் எல்லாவற்றிலுமே, காசு அமைப்புகள்.

எல்லாம், அனுபமா சிறுவயதில் அணிந்தவையாம். மதுரமே டிசைன் வரைந்து கொடுத்து செய்தவை.

பேத்திக்குத் தன் கையாலேயே அணிவித்து விட்டு விட்டு, உச்சி முகர்ந்தாள், அவள் தந்தையைப் பெற்ற வள்.

சமையல்காரம்மாளிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டு வருவதாக, மதுரம், பின்புறம் சென்றிருந்த போது, நித்யானந்தனும் தயாராகி, ஹாலுக்கு வந்து சேர்ந்தான். சாருமதியையும், தீபாவையும் பார்த்ததும், ஒரு கணம் அசைய்து நின்றான்.

தந்தையைப் பார்த்ததும், தீபா, அவனிடம் ஓடிச் சென்று, ''அப்பா, நான் நல்லா இருக்கேனா?'' என்று ஆவலோடு வினவினாள்.

முறுவலித்து, ''பிரமாதம்மா! நான் யாரோ, தேவ தைதான் நம் வீட்டுக்கு வந்து விட்டதாக்கும் என்றல் லவா, நினைத்தேன்! நிஜம்மாவே, இது நம்ம தீபா

குட்டிதானா?'' என்று அவளைத் தூக்கி, கன்னத்தில் முத்தமிட்டு, மீண்டும் கீழிறக்கிவிட்டான்.

கிளுக்கிச் சிரித்தவாறே, ''அம்மா?'' என்று கேட்டாள், குழந்தை.

''அம்மாவும் பிரமாதம்தான். அம்மாவையும், மகளையும் பார்த்து, அங்கே கல்யாண வீட்டில், எல்லோரும் அசந்துவிடப் போகிறார்கள், பார்!'' என்றுரைத்து நிமிர்ந்தவன், சாருமதியை ஓரப் பார்வை பார்த்துவிட்டு, வெளியே செல்லத் தொடங்கினான்.

பெண்கள் மூவரையும், நித்யாதான் திருமண வீட்டுக்கு அழைத்துச் செல்வதாக இருந்தது.

எனவே, காரை எடுப்பதற்காக இருக்கும் என்று, சாருமதி எண்ணுகையில், ''அப்பா!'' என்று அதட்டி, அவனை நிறுத்தினாள், தீபா.

''என்னம்மா?''

''என்னை மாதிரி அம்மாவுக்கும் நல்லாருக்கிறதுக்குக் 'கிஸ்' கொடுக்காமப் போறீங்களே? கொடுங்க''

தூக்கிவாரிப் போட்டது பெரியவர்கள் இருவருக்கும்.

முகம் கன்றிவிட, ''சும்மா இரு, தீபா'' என்றாள், சாருமதி.

''ஏன்? என்று கேட்டாள் குழந்தை. ''எனக்குக் கொடுத்தாங்களே? அம்மா, அப்பா இப்படித் தூக்கிக் 'கிஸ்' கொடுத்தா. ரொம்ம..ப நல்லாருக்கும்'' என்று தலையை ஆட்டி ரசித்துச் சொன்னாள், சிறுமி.

சிரிப்பை அடக்கிக் கொண்டு, சற்று யோசித்து ''சின்னப் பிள்ளைகளுக்குத் தான் 'கிஸ்' கொடுப்பார்கள், கண்ணு. பெரியவர்களுக்குக் கொடுக்க மாட்டார்கள். தாத்தா, பாட்டி எல்லோரும் உன்னைத் தூக்கிக் கொஞ்சுகிறார்களே, அம்மாவை, அப்படியா செய்கிறார்கள்? அப்பாவை, அம்மாவை, அத்தையை... இல்லையே! பெரியவர்களைக் 'கிஸ்' பண்ண மாட்டார்கள், தீபாக் குட்டி'' என்று அவன் விளக்க, ''ஓகோ!'' என்று ஒரு வாறு அவளும் ஒத்துக் கொண்டாள்.

ஒரு பெரிய மூச்சை வெளியேற்றியபடி, கைக்குட்டையை எடுத்து, நெற்றியைத் துடைக்கவும், சாருமதி சிரிப்பை மறைக்க, வேறுபுறம் திரும்ப வேண்டியிருந்தது.

பரவாயில்லை, நன்றாகத்தான் சமாளித்தான் என்று உள்ளம் பாராட்டியது.

கூடவே, அவள் நெஞ்சில் மறுபடியும் ஒரு மொட்டு மலர்ந்து மணம் பரப்பத் தொடங்கியது.

திருமண வீட்டிலும், அவளுக்கும் தீபாவுக்கும் ஏகப்பட்ட பாராட்டுகள்.

விசுவநாதன் குடும்பத்துக்கு, உறவினர் மத்தியில் இருந்த அன்பு கலந்த மரியாதை, சாருமதியைத் திகைக்க வைத்தது. அதன் ஓர் அங்கமாக, அவளுக்குக் கிடைத்த மதிப்பும்தான்.

செல்வமும், செல்வாக்கும் உள்ள இடத்தில், அழகு வந்து சேர்ந்துவிடவே மகுடத்தில் பதிக்கப்பட்ட மாணிக்கமாகப் பாராட்டப்பட்டது. அக்கா, அண்ணி, மகளே, மருமகளே... என்று, தரப்பட்ட பல்வேறு உறவுமுறை

கள். உறவே அறியாமல் வளர்ந்தவளுக்கு மாயாலோகம் போல, மயக்கத்தைத் தந்தன.

நித்யானந்தனின் அருகில் நிற்பது, அமர்வது, எல்லாமே வெகு இயல்பாகப் பட்டது.

திருமணம் முடிந்து கிளம்பினால், வீட்டில் எல்லோரும் இவர்களை விடவே மாட்டேன் என்றார்கள்.

கடைசியாக, வரவேற்புக்கு மணமக்கள் நிற்கச் சென்ற பிறகுதான், நித்யானந்தன் குடும்பம் கிளம்ப முடிந்தது.

திரும்பி வீடு வந்து சேரும்போது கூட, அவள் தன்னை மறந்த ஒரு போதையில்தான் இருந்தாள் எனலாம்.

காரில் வரும்போது தூங்கிவிட்ட தீபாவைத் தூக்கிக் கொண்டு, சாருமதி மாடிப்படி ஏறும்போதுதான் அவளுக்கு அந்த போதை தெளிந்தது. தெளிய வைக்கப்பட்டது!

13

அனறு மாலையிலிருந்தே, அனுபமாவுக்கு லேசான தலைவலி.

தாயாரிடம் சொன்னதற்கு, தைலம் தடவிக் கொண்டு படுத்திருக்கச் சொன்னாளே தவிர, என்ன, ஏது என்று பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இந்த அம்மா வயிற்றில், பெண் என்று பிறந்தது, அவள் மட்டும்தான், அதுவும் அண்ணனுக்குப் பிறகு,

பத்தாண்டு இடைவெளிக்குப் பிறகு, உண்டாகிப் பிறந்த செல்ல மகள்! அவளுக்குத் தலைவலி என்றால், அம்மா துடித்திருக்க வேண்டாமா?

ஆனந்தி அத்தை வீட்டுத் திருமணத்துக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிற ஜோரில், மகளைப் பற்றிய அக்கறை, கொஞ்சம்கூட இல்லாமல் போய்விட்டது. அதுவும், மருமகளை உடன் அழைத்துச் செல்லுகிற ஜோரில்.

அதுதான், அனுவுக்குத் தாங்க முடியாத ஆத்திரத்தைத் தந்தது.

சும்மாவே, சாருமதியிடம் மதுரம், அதிகப்படியாக உருகுகிறாள் என்பது அனுபமாவின் அபிப்பிராயம்.

அவள் நல்லவளாக இருந்துவிட்டால், எவ்வளவு வேண்டுமானாலும், கொண்டாடலாம்தான். ஆனால், அப்படி என்று, தெளிவாகும் முன்னாலேயே, தலைக்கு மேல் தூக்கி வைக்கலாமா? தப்பல்லவா? நாளைக்கு, இன்னொரு வேதனையாகிவிடக் கூடாதில்லையா? அதிலும், அவள் ஆள்மாற்றம் செய்து வந்தவள்!

இதை எண்ணியே, அனுபமா அவ்வப்போது குடும்பத்தினரை எச்சரித்து வைப்பது. ஆனால் அந்த எச்சரிக்கைக்கு பலன் இருப்பதாகவே அவளுக்குத் தோன்றவில்லை.

இப்போது, சாருமதியைக் கூட்டிக் கொண்டு, ஆனந்தி அத்தை வீட்டுத் திருமணத்துக்குச் சென்றே ஆக வேண்டுமா? அங்கே, இவள்தான் மருமகள் என்று உறவினர் அத்தனை பேருக்கும் விளம்பரம் ஆகும்.

அவள் நல்லவள்தான் என்று நிச்சயமாகத் தெரியாத போது, எதற்கு இதெல்லாம்?

சாருமதி அணிவதற்காக, லாக்கரில் இருந்து எடுத்து வரப்பட்டிருந்த எமரால்ட் செட், அவளது ஆத்திரத் தோடு, தலைவலியையும் அதிகமாக்கியது.

பாதி வகுப்பிலேயே தலைவலி என்று, வீட்டுக்குத் திரும்பி வந்தால் வீட்டில் யாரும் இல்லை.

வருவார்கள், வருவார்கள் என்று அனுபமா சாப்பி டப் பிடிக்காமல் வெறும் வயிற்றோடு காத்திருக்க, அவர் கள் எல்லாரும் நன்றாகத் திருமண விருந்தை இரண்டு வேளையும் ஒரு கை பார்த்துவிட்டு இரவு ஏழு மணிக்கு மேல் சாவதானமாகத் திரும்பி வந்தார்கள்.

மகளைப் பார்த்ததுமே, ''என்னம்மா, முகம் சரியில் லையே! தலைவலி அதிகமாகி விட்டதா? ஏதாவது சாப்பிட்டாயா?'' என்றெல்லாம் மதுரம் கேட்டதும், ''மாத்திரை போட்டாயா, இல்லையா?'' என்று அண் ணன் விசாரித்ததும் நன்றாகத்தான் இருந்தது.

கண்ணில் அக்கறை காட்டியபடி, தோளில் பிள் ளைச் சுமையுடன்கூட, சாருமதியும் சற்று நின்றுவிட்டுத் தான் அனுபமா ஒன்றுமில்லை என்று சொன்ன பிறகு தான் படியேறத் தொடங்கினாள்.

ஆனால், சாருமதி படியில் கால் வைத்ததும், ''பிள் ளையைத் தூக்கிக் கொண்டு, நீ எப்படியம்மா, ஏறிப் போவாய்? அதுவும் தூங்குகிற பிள்ளை! நித்தி, தீபாவை, நீ தூக்கிக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வாப்பா'' என்று, மதுரம் மருமகளிடம் உருகவும், சற்று முன் நினைத்ததெல்லாம், அனுபமாவுக்கு மீண்டும் நினைவு வந்துவிட்டது.

ஆத்திரத்துடன், ''ஒரு நிமிடம்! என்றாள், அழுத்த மான குரலில்.

திகைப்புடன் திரும்பி, 'என்னையா' என்பது போலச் சாருமதி நோக்க, ''அணிந்திருப்பது இரவல் நகை என்பது நினைவிருக்கட்டும். ஒரு முறை போட்டுக் கொள்ளக் கொடுத்ததினாலேயே, சொந்தம் என்று எண் ணிப் பதுக்கிவிட வேண்டாம்'' என்று அனுபமா கடுமை யான குரலில் கூறினாள்.

சாருமதியின் முகம் முதலில் வெறுத்துப் பின் கன்றிச் சிவந்து உதடுகளை இறுக மூடிக் கொண்டு சில வினாடி நேரம் அசையாது நின்றவள், திரும்பி, மடமடவென்று படியேறிச் சென்றுவிட்டாள்.

''என்னம்மா, பேச்சு இது?'' என்று மதுரம் கண்டித்த தையோ, நித்யானந்தன், தங்கையை முறைத்ததையோ, அந்த முறைப்பு தாங்காமல் அனுபமா கண்ணீர் விடத் தொடங்கியதையோ, அவள் சற்றும் அறியவில்லை!

சாருமதி மிகவும் கோபமுற்றிருந்தாள்.

இந்த மாதிரி, அவளை யாரும் இதுவரை கூறியது கிடையாது.

நேரடியாகச் சொல்லாவிட்டாலும், அனுபமா அவ ளுக்குக் கட்டியது திருட்டுப் பட்டமே!

அப்படி, இந்த வீட்டில் சாருமதி, என்னென்ன பொருட்களைத் திருடி விட்டாளாம்?

அப்படி, அநியாயப் பழி சொன்னவளை, 'ஏண்டீ' என்று கேட்க, அந்த வீட்டில் சாருமதிக்கு நாதியில்லை! அந்தத் தைரியம்தானே? அவளே கேட்டாலும், வீட்டுப்

பெண்ணைக்கேட்பதா, என்று எல்லாரும் அனுபமாவுக் குத்தான், பரிந்துகொண்டு வருவார்கள்!

இருக்கட்டும், இந்தப் படிப்பு முடியும் வரை எல்லா வற்றையும் சகித்துதான் ஆக வேண்டும்.

அதன் பிறகு, இங்கிருந்து போய்விட வேண்டும். இவர்கள் யாரையும் கண்ணால் காண முடியாத தூரத்துக் குச் சென்றுவிட வேண்டும்.

தீபா... தீபாவை இனி இவர்கள் எல்லோருமே நன்றாகப் பார்த்துக் கொள்ளுவார்கள். அதுதான் அவள் அத்தை சாயல் என்று கண்டுபிடித்தாயிற்றே... என்று ஏளனமாக நினைத்தாள். என்னதான் சாயலோ?

ஆனால், அப்படிப் போய்விட்டால் அப்புறம் தீபா வையும் பார்க்க முடியாது என்று எண்ணும்போது வேத னையாக இருந்தது.

தீபாவோடு, அவள் அப்பாவையும்!

சட்டென, சாருமதியின் முகம் கறுத்தது. இந்த நித்யானந்தனால் அல்லவா அவளுக்கு இவ்வளவு துன் பங்கள்?

மகளுக்கு, ஆயா வேலை பார்ப்பதற்காக, தாலி கட்டி, வேலையாள் கொணர்ந்த மாமனிதன்!

எதற்கோ, அலைகிறவள் என்று, அவன் சொன் னான், காசு பணத்துக்கும் நகை நட்டுக்கும் அலைகிறவள் என்று, அவன் தங்கை சொல்லகிறாள். அண்ணனை விடத் தங்கை எவ்வளவோ மேல். அவன் பேச்சு, வாய் விட்டுச் சொல்லக் கூட முடியாத அளவு கேவலமானது.

நகைகளைக் கழற்றக் கைவைத்தவள் தயங்கினாள்.

இவள் நகைகளைக் கழற்றி வைத்துவிட்டுப் போக, யாராவது திருடி விட்டால், அவளைத்தானே சொல்லு வார்கள்? ஒன்றும் நடவாத போதே சொல்லுகிறார்கள்!

சேலையை மட்டும் மாற்றிக்கொண்டு, கீழே சென்று பால் எடுத்து வந்தாள்.

யார் முகத்தையும் பார்க்கக் கூடாது என்று, நேராகப் பார்த்தபடிதான் சாருமதி சமையலறைக்குச் சென்று வந் தது.

ஆனால், ஜன்னல் கிரில் மீது முகம் பதித்து அனு பமா நிற்க, நித்யானந்தன் தங்கையின் தோளைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது, அவள் கண்ணில் படாமல் போகவில்லை.

கண்ணில் பட்ட காட்சியால் சாருமதியின் கோபம், மேலும் அதிகரித்தது.

ஆமாம், சொந்த அண்ணன் மனைவியைத் திருடி என்று சொன்னதில், தங்கை மிகவும் மனம் உளைந்து துடித்துப் போயிருப்பாள். தட்டிக் கொடுத்து சமாதானப் படுத்த வேண்டியதுதான்!

விசித்திரமான குடும்பம்! தப்பு செய்கிறவர்களைத் தட்டிக் கேட்காமல், தட்டிக் கொடுக்கிற குடும்பம்!

நல்லவளாகத் தோன்றிய மாமியாரும், அனுபமா வைக் கண்டிக்காதது, சாருமதியை மிகவும் பாதித்தது. நியாய, அநியாயம் என்று இல்லாமல், மகள் என்பது தானே, அவர்களுக்கும் பெரிதாகப் போய்விட்டது?

உள்ளூரக் குமுறியபடியே, சாருமதி, தீபாவுக்குப் பாலைக் கொடுத்துத் தூங்க வைத்தாள்.

அறைக் கதவை உள்ளே தாளிட்டுக் கொண்டு, நகைகளைக் கழற்றினாள். அலமாரியில் வைத்துவிட்டு, உடம்பு கழுவிக் கொண்டு வந்து அமர்ந்தாள்.

அமர்ந்து நித்யானந்தன் அவனது அறைக்குத் திரும்பி வருவதற்காகக் காத்திருந்தாள்.

ஜன்னல் வழியே பார்க்கும்போது, தோட்டத்தில் விழுந்த வெளிச்சம், கீழ்த் தளத்தில் விசுவநாதனின், அலுவல் அறையில் விளக்கெரிவதை உணர்த்தியது. தெளிவற்ற பேச்சுக் குரலும் கேட்டது.

பகல் முழுவதும் அலுவலகம் செல்லாத மகனுக்கு, அன்றைய அலுவல் நடப்புகளை விவரிக்கிறார் போலும். அதே போல, மகனும் தந்தையிடம், அன்றைய நடப்புகளைப் பற்றிச் சொல்லுவானா? தங்கையின் துடுக்குப் பேச்சு பற்றி?

'ரொம்பத்தான் ஆசை!' என்று தன்னையே ஏளனம் செய்து கொண்டாள், சாருமதி.

அந்தத் தேவதைக் குடும்பத்தில் யாரேனும் தப்பு செய்வார்களா, என்ன?

அதிலும், அந்தக் குடும்பத்தின் செல்லப் பெண்?! வாய்ப்பே கிடையாதே!

கசப்பும், கைப்புமாக உள்ளுரக் குமுறியபடி, சாருமதி வெகு நேரம் காத்திருந்த பிறகு, சுமார் பதினோரு மணியளவில், நித்யானந்தன் அவனது அறைக்குத் திரும்பி வரும் அரவம் கேட்டது.

இந்த நேரத்தில் அவனது அறைக்குச் சென்றால், தன் பங்குக்கு அவனும் ஏதாவது சொல்லிவிடக் கூடாதே என்று ஒரு தயக்கம் சாருமதிக்கு உண்டாயிற்று.

ஏற்கனவே, அதுபோல, ஒரு கசப்பான அனுபவம் வேறு இருக்கிறதே! என்னென்ன சொன்னான்! அவளை, வாயைத் திறக்கவே விடவில்லையே!

பேசாமல், நகைகளை மதுரத்திடமே கொடுத்திருக்கலாம், தந்தது அவள் தானே?

ஆனால் மகாலட்சுமி மாதிரியான, அந்த முகத்தைப் பார்த்துக் கொண்டு, அவள் சொல்ல விரும்புவதையெல்லாம், முகத்தில் அடித்தாற்போலச் சொல்ல முடியாது.

அத்தோடு, கடன்காரனிடம் தானே, கடனைத் திருப்ப வேண்டும்?

சற்று யோசித்துவிட்டு, மதுரம் கொடுத்த நகைகளை எல்லாமாக, ஒரு கனமான டவலை மடித்து அதன் மேல் பரத்தி வைத்தாள். இதை, முன்னே நீட்டியபடிச் சென்றால், வேறு எண்ணத்தோடு வந்திருப்பதாகத் தோன்றாதல்லவா?

எண்ணியவாறே, நகை பரத்திய டவலைக் குழிவான ஒரு தட்டு மாதிரி ஒரு கையில் ஏந்தியவாறு சென்று நித்யானந்தனின் அறைக் கதவைத் தட்டினாள்.

அவன் வருமாறு அனுமதி கொடுத்ததும், கதவைத் திறந்து கொண்டு, உள்ளே சென்று முதலில் எதிர்ப்பட்ட இருக்கையில் கையிலிருந்த நகைகள் அடங்கிய டவல் தட்டை வைத்தாள்.

பிறகு நிமிர்ந்து, அவனை வெட்டுவது போலப் பார்த்து, "உயிர் போகிற நிலை வந்தால்கூட, இந்த அறைக்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாது என்று உறுதி கொண்டிருந்தேன். ஆனால், உயிரைவிட, மானம் பெரிதல்லவா? அதைக் காப்பாற்றுவதற்காக இங்கே வர

நேர்ந்தது. அதற்காக, என்னை மன்னித்துவிடுங்கள்'' என்று கூறினாள்.

நித்யானந்தன் பேசாமல் பார்த்துக் கொண்டு நிற்க, சாருமதி தொடர்ந்தாள். ''இவைகள், அனைத்தையும் உங்கள் அம்மா என்னிடம் தந்தவை. இன்றையத் திருமணத்தில் அணிந்து கொள்வதற்காகத் தந்தார்கள். நடித்து முடித்து வேஷத்தையும் கலைத்தாயிற்று. இனியும் இந்த நகைகளை என்னிடம் வைத்திருப்பது நியாயமில்லை. திருப்பித் தர மாட்டேனோ என்று உங்களுக்கெல்லாம் பயம் கூட ஏற்பட்டிருக்கும். உங்கள் தங்கைக்கு ஏற்கனவே பயம்தான். அப்போதே உங்கள் அம்மாவிடமே கொடுத்திருக்கலாம். ஆனால், உங்கள் அம்மாவும், வேறு குடும்பத்திலிருந்து இங்கே வந்தவர்கள், பாருங்கள். இந்தக் குடும்பத்து இரத்தமல்ல. வேற்று இரத்தம். உங்களைப் போல, பணம் நகைக்கு, ஒரேயடியாக மதிப்புக் கொடுக்கத் தெரியாதவர்கள், பாவம்...''

''கொஞ்சம் மூச்சு விட்டுக் கொண்டு பேசு'' என்றான் நித்யானந்தன். ''பணம் நகைக்கு மதிப்பு கொடுக்கத் தெரியாததால் என்ன ஆயிற்று?'' என்று கதை கேட்டான்.

''ஒன்றும் ஆகவில்லை.'' என்றாள் அவள். ''ஆனால் உங்களைப் போலப் பணம், காசைப் பத்திரப் படுத்தி வைக்க, அவர்களுக்குத் தெரியாதோ என்னவோ, எனக்குத்தான் ஒரே பயம். வெறும் நகைகள் தானே என்று அவர்கள். இந்த நகைகளை எங்காவது கொஞ்சம் கவனக் குறைவாக வைத்துத் தொலைத்துவிட்டால், அப்புறம், இதை நான் திருடியதாக அல்லவா, சொல்லுவீர்கள்? நான் வேறு, நீங்களெல்லாம் பழிபோடுவதற்காகவே, பிறந்த பாவி. எதற்கு வீண்வம்பு? அதனால் தான் இவைகளை உங்களிடமே கொடுத்து விடலாம் என்று இங்கே வந்தேன். எல்லாம் இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொள்ளுங்கள்'' என்று முடித்தாள்.

இதற்காகவெல்லாம் நித்யானந்தன் பெரிதாகக் குன்றிப் போய்விடுவான் என்று சாருமதியே எதிர்பார்க்கவில்லைதான்.

ஆனால், சிறு சஞ்சலத்தைக் கூடக் காட்டாமல், ''அவ்வளவுதானா, விஷயம்?'' என்று அவன் கேட்கவும், அவளுக்கு எரிச்சல் வந்தது.

ஆத்திரத்தை உள்ளடக்கி, ''அவ்வளவுதான். நகைகளைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.'' என்றாள், அவள்.

''ஆனால், அம்மா எதையெல்லாம் உன்னிடம் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாதே!'' என்றான், அவன் சாவதானமாக.

வேண்டுமென்றே சொல்லுகிறான்!

''இன்று முழுவதும் அணிந்திருந்தேனே, பார்க்க...'' என்று கோபத்தோடு தொடங்கியவள், சட்டென உதட்டைக் கடித்துப் பேச்சை நிறுத்தினாள்.

'உன்னை நான் எங்கே பார்த்தேன்?'' என்று அவளை மட்டம் தட்ட, அவளே ஒரு வாய்ப்பை, அவனுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதா?

அதைவிடவும், 'உன்னை நான் என்ன பார்ப்பது?' என்று கேட்டுவிட்டால், இன்னும் அசிங்கம்.

எனவே, ''இந்த செட்டில் உள்ளது என்னென்ன வென்று உங்களுக்குத் தெரியாதா? நம்ப முடியவில்லையே!'' என்றாள், சற்று ஏளனமான குரலில்.

இரு விரல்களால் ஒன்றிரண்டைத் தூக்கிப் பார்த்து விட்டு, ''தெரியும். ஆனால் ஏதோ நாலைந்து கூடுதலாக இருப்பது போலத் தோன்றுகிறதே!'' என்றான் நித்யானந்தன்.

இதற்குத்தானே சாருமதி காத்திருந்ததும்?

நேராக நிமிர்ந்து நின்று கொண்டு ''அதெல்லாம், எப்போதும் போட்டுக் கொள்ளவென்று அத்தை என்னிடம் கொடுத்தவை. பதுக்கிக் கொண்டதாக அதற்கு வேறு திருட்டுப் பட்டம் கிடைத்து விடுமோ என்ற பயத்தில் தான், அவைகளையும் திருப்பிக் கொடுக்கிறேன்.'' என்றவள், தாலி கோத்துக் கழுத்தில் கிடந்த சங்கிலியைத் தொட்டுக் காட்டினாள். ''இதையும் கூட இவைகளோடு வைத்திருந்திருப்பேன். ஆனால், உங்கள் அம்மாவின் மனம் நோகுமே என்றுதான் அப்படியே இருக்கட்டும் என்று விட்டுவிட்டேன்.''

''பரவாயில்லை, அம்மா மனதிற்காக, இவ்வளவு பார்க்கிறாயே!'' என்று பாராட்டினான் அவன்.

''அவர்கள் நல்லவர்கள்'' என்றாள் அவள் சுருக்கமாக.

''நல்லவர்கள் மனம் நோகக் கூடாது. உயர்ந்த கோட்பாடுதான். ஆனால், கொள்கையைச் செயலிலும் காட்ட வேண்டும் அல்லவா?''

''அதனால்தானே...''

''அதற்கு அந்தச் சங்கிலியை அணிந்திருப்பது மட்டும் போதாது. காதில், கையில் ஒன்றுமில்லாமல் இப்படி மூளியாக வைத்திருந்தால், அம்மா மனம் நோகாதா? இப்படி இருக்கக் கூடாது என்றுதானே தந்தார்கள்?''

''இருக்கலாம். ஆனால், இப்படி இருப்பது எனக்குப் பழக்கம்தான். தேவையானால் பிளாஸ்டிக்கில் வாங்கி அணிந்து கொள்வேன்.''

''இந்த வீட்டு மருமகளுக்கு அது பழக்கமில்லை.''

''வேலைக்காரிக்கு?'' என்று திருப்பினாள் சாருமதி.

தாலி கட்டி மணந்தவளை, வேலைக்காக வந்தவள் என்றானே, அதற்காகக் கொஞ்சமாவது அனுபவிக்க வேண்டாமா?

சிறு அமைதியின் பின், ''தீபாவுடைய தாயாக வேலை பார்க்கும்போது, அப்படித்தான் என்று நான் சொல்லிவிட முடியும். ஆனால் தீபாவுடைய தாயாகவே இருப்பவளை அப்படிச் சொல்லி அலட்சியப்படுத்த எனக்கு விருப்பம் இல்லை. மேலும் மறுக்காமல், இந்த நகைகளை எடுத்து அணிந்து கொள்.'' என்று நித்யானந்தன் சற்று இதமாகவே, வற்புறுத்தினான்.

இவன் குரலை இறக்கிப் பேசினால், காலில் விழுந்து விட வேண்டுமா? ''இல்லை, எனக்கு வேண்டாம்'' என்றாள் அவள், பிடிவாதமாக.

லேசாகத் தலையசைத்துவிட்டு, ''இப்போது, நீயாக இவைகளை எடுத்து அணிந்து கொள்ளுகிறாயா, அல்லது நானே அணிவித்து விடவா?'' என்று நித்யானந்தன் ஒருமாதிரி அதிகாரமாகக் கேட்கவும், சாருமதி பிரமித்துப் போனாள்.

''எ...என்...என்னது?!''

''மாட்டேன் என்றோ, முடியாது என்றோ நினைக்காதே. உன்னை விட நான் பலசாலி. என்னால் முடியும். அத்தோடு எனக்கு அம்மாவின் மனநிம்மதி மிகவும்

முக்கியம். அதற்காக, நான் எதைச் செய்யவும் தயங்க மாட்டேன். அதனால், எடுத்துப் போய் அணிந்து கொள்." என்றான், நித்யானந்தன், அவளையே பார்த்த படி.

ஒரேயடியாக மறுத்தால், இவன் என்ன செய்வான்?

அவளைக் கட்டாயப்படுத்தி, அவனே அணிவித்து விடுவானா?

அதற்கு அவளை, அவன் தொட வேண்டுமே? காதை, கையைத் தொட்டு...

எண்ணிப் பார்க்கும்போதே, சாருமதிக்குக் காதோ ரம் குறுகுறுத்தது.

கூடவே, கண்ணையும் கரித்துக் கொண்டு வந்தது.

எண்ணும்போதே, அவளுக்குக் காதோரம் குறு குறுக்க, அவன் எந்தவித உணர்ச்சியும் இல்லாமல், அவளைத் தொட்டு, நகைகளை அணிவிக்க முடியும். அதைத்தான் அவன் அந்தப் பொல்லாத முதல் நாள் இரவிலேயே நிரூபித்து விட்டானே.

அவளுக்குத்தான் அவன் கணவன், அவனுக்கு அவள் அந்த வீட்டில் ஒரு வேலைக்காரி மட்டுமே.

அன்பு காட்டும் அம்மா, அப்பா, உடன்பிறந்தோர் என்று குடும்ப பாக்கியம் இல்லாத இளம் பருவம் முடிந்தது. இனியேனும் மனமொத்த கணவனோடு ஓர் இனிய குடும்ப வாழ்வு கிடைக்கும் என்று பார்த்தால், முன்னை விட மோசமான நிலைமையாகி விட்டதே. இனிய இல்லறம், இனிமையான குடும்ப வாழ்வு என்ப தெல்லாம் அவளுக்குப் பிறவி முழுமைக்கும், அடி யோடு மறுக்கப் பட்டனவாகிவிட்டனவே!

எவ்வளவு பெரிய இழப்பு!

தன்னிரக்கம் கொள்வது உள்ளத்தின் உறுதியை அடியோடு அழித்துவிடும் என்று இல்லத்தில் கற்றுக் கொடுத்திருந்தார்கள்தான்.

ஆனால், இழப்பின் வேகம் வெகுவாகத் தாக்கிய அந்த நேரத்தில், பயிற்றுவிக்கப்பட்டிருந்த, நல்ல அறிவு ரைகள் எல்லாம், பாலையில் ஊற்றிய நீராய், இருந்த அடையாளமே இல்லாமல், ஆவியாய்ப் போயின.

மதுரம், முதலில் தந்திருந்த சிறு நகைகளை, நித்யா னந்தன் பிரித்துக் கையில் எடுப்பது, விழிகளில் படரத் தொடங்கிய நீர்த் திரையினூடே தெளிவற்றுத் தெரிந்தது.

இனி, அதிக நேரம் கண்ணீரை அடக்க முடியாது. இவன் தொட்டால் அடியோடு தாங்காது.

இவன் முன்னே அழுது, அது வேறு கேவலப்பட வேண்டுமா? இதயத்திலிருந்து ரத்தமாய்க் கசியும் கண்ணீ ரைக் கூட இவன் நம்பமாட்டானே!

நகைகளை எடுத்துக் கொண்டு, நித்யா அவளை நோக்கி வருவது கலங்கிய பார்வையில் படவும், சட் டென முடிவெடுத்து, ஓர் உத்தேசமாய் அவன் கையை நிதானித்து, ஓர் எட்டு முன்னேறி அவன் கையிலிருந்த நகைகளைப் பிடுங்குவது போல, அள்ளிக் கொண்டு அவளது அறைக்கு ஓடிச் சென்றாள்.

"மெள்ள, மெள்ள..." என்ற அவனது குரல் காதில் விழுந்ததாகவே, அவள் காட்டிக் கொள்ளவில்லை.

ஏனெனில் நின்று பதில் சொன்னால், அவன் கண்டு கொள்ளும் அளவுக்கு அவளது கண்ணீர் அருவியாய்க் கொட்டத் தொடங்கியிருந்தது.

அறைக்கதவை உள்ளே தாளிட்டுக் கொண்டு நகை களை அலமாரியில் வைத்துவிட்டுப் படுக்கையில் விழுந் தவள்தான். அதற்கு மேல் சாருமதி, தன் கண்ணீரைக் கட்டுப்படுத்த எந்த முயற்சியும் செய்யவில்லை. விம்ம லும், விசும்பலுமாக அழுது தீர்த்துவிட்டாள்.

என்ன அழுதாலும், அழுகையை ஆற்றவோ, அவ ளைத் தேற்றவோ, யாரிருக்கிறார்கள்?

வெகு நேரம் அழுதுவிட்டு, அப்படியே அயர்ந்து உறங்கிவிட்டாள்.

மறுநாள் காலையில், சாருமதி கண்விழித்து எழுந்த போது, விடிந்து, வெகு நேரம் ஆகிவிட்டிருந்தது.

அதுவும்கூட, அவள் தானாக விழிக்கவில்லை. கதவை யாரோ தட்டும் ஒசை கேட்டுத்தான் அவளது தூக்கம் கலைந்தது.

தூக்கக் கலக்கத்துடனேயே, யாராயிருக்கும் என்று யோசித்தபடி, சற்று வீங்கியிருந்த இமைகளைத் தூக்கி, வழக்கம் போல எதிரில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தவ ளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

தீபா, பள்ளிக்குக் கிளம்பியிருக்க வேண்டிய நேரம்! இவ்வளவு நேரம் எப்படித் தூங்கினாள்?

விழுந்தடித்துக் கொண்டு எழுந்தபோது, கதவை, இன்னும் யாரோ தட்டுவது காதுவழி கருத்தில் பட, அவசரமாக ஓடிச் சென்று கதவைத் திறந்தால், அங்கே அனுபமா நின்று கொண்டிருந்தாள்.

சாருமதி, திகைத்து விழித்தாள்!

14

சும்மாவே, சாருமதி தினறித் திண்டாடிக் கொண்டி ருந்தாள். தலை எது, கால் எது என்று புரியாத நிலை.

தீபா பள்ளிக்குச் செல்ல வேண்டிய நேரம் ஆகிவிட் டிருந்தது.

அவள் விழித்தாளா, எழுந்தாளா என்று ஒன்றுமே தெரியவில்லை. இன்னும் அவளுக்குப் பல் துலக்கிக் குளிக்கச் செய்து, ஏதாவது சாப்பிட வைத்து, தலைதெறிக் கும் வேகத்தில் செய்தால் கூடப் பள்ளிக்குத் தாமதமாகி விடும்.

இந்த நேரத்தில், இங்கே அனுபமா ஏன் வந்தாள்?

முந்திய நாள், அபாண்டப் பழி கூறியவள், இப் போது மெய்யாகவே செய்துவிட்ட தப்புக்காகத் திட்ட வந்தாளா?

பொய்யான குற்றச்சாட்டுக்கே, பதில் சொல்ல முடியவில்லை. இப்போது, என்ன செய்வது?

ஆனால், இப்போது முதலில் செய்ய வேண்டியது தீபாவைக் கிளப்பிப் பள்ளிக்கு அனுப்புவது.

எனவே, "என்ன?" என்று கேட்டவள் தொடர்ந்து, "எதுவானாலும் பிறகு சொல்லுங்கள். நான் தீபாவைப் பார்க்கப் போக வேண்டும்." என்றுவிட்டு மகளின் அறைப் பக்கம் செல்ல முயன்றாள்.

"ஈஸி, அண்ணி," என்றாள் அனுபமா, மென்மை யான குரலில். "தீபாவை, நானே எல்லாம் பண்ணிப் பள்ளிக்கு அனுப்பிவிட்டேன்." என்றவள், சாருமதி

திகைத்து நோக்கவும், ''நேற்று நான் உங்களுக்குப் பெரிய தப்பு செய்தேன். அதற்காக மன்னிப்புக் கேட்கவே இப்போது வந்தேன். சற்று உள்ளே போய்ப் பேசலாமா?'' என்று தொடர்ந்து தனிந்தே பேசினாள்.

மற்றவள், ஒரேயடியாகப் பிரமித்துப் போனாள். கண்முன் நடப்பது கனவா, நனவா என்று கூடச் சந்தேகம் வந்துவிட்டது. ஒரு வேளை, அதிகப்படித் தூக்கத்தில் காணும் கனவுதான் தொடர்கிறதா, என்றெண்ணிய படியே நகர்ந்து, அனுபமாவுக்கு வழிவிட்டாள்.

பின்புறம் திரும்பித் தலையசைத்துவிட்டு அனுபமா உள்ளே வர, மாடிப்படி முனையில் நின்ற செண்பகமும், சின்ன எஜமானியைப் பின்தொடர்ந்து வந்து, காஃபியை வைத்துவிட்டுப் போனாள்.

''உடம்பு சரியில்லாததால் நீங்கள், இரவில் சரியாகத் தூங்கவில்லை என்பதால் உங்களை எழுப்பாமல், தீபாவை நாங்களே 'ரெடி' பண்ணி அனுப்பினோம். ஒரே ஆச்சரியம், அண்ணி, தீபுக் குட்டி ஒரு தொந்தரவு பண்ணவில்லை. தெரியுமா? எப்போதுமே அவள் 'காச்சு பூச்'சென்று கத்த மாட்டாள்தான். ஆனால், வேண்டாம், வேண்டாம் என்று மந்தம் பிடித்த மாதிரி போரடித்துவிடுவாள். இப்போது அதெல்லாம் கொஞ்சம் கூட இல்லையே! அம்மாவைத் தொந்தரவு பண்ணக் கூடாதும்மா என்றதும், புரிந்துகொண்டு கெட்டிக்காரியாகக் கிளப்பி விட்டாள்!'' என்று என்னவோ வருடக் கணக்காகப் பேசிப் பழகிய மாதிரி அனுபமா அண்ணி, அண்ணி என்றது, சாருமதிக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

கனவு இன்னமும் தொடர்கிறதா, என்றுகூட எண்ண வைத்தது.

காஃபியை வைத்துவிட்டு, செண்பகம் செல்லுமட்டும், இப்படிப்பேசிக் கொண்டிருந்தவள், அவள் படியிறங்கிப் போனதும், ''உங்களிடம் மன்னிப்புக் கேட்கிற விஷயமெல்லாம், பிறகு தெளிவாகச் சொல்லுகிறேன், அண்ணி முதலில் போய் முகம் கழுவிக் கொண்டு வந்து, காஃபியைக் குடியுங்கள், அப்புறமாகப் பேசலாம்'' என்று அனுப்பினாள்.

பல்லைத் துலக்கி, முகத்தைக் கழுவினால், கொஞ்சம் உற்காகமாக இருக்கக் கூடுமோ என்று தோன்றிவிட, சாருமதியும், குளியல் அறைக்குள் சென்றாள்.

அவள் முகம் துடைத்துக் கொண்டு வரவும், காஃபியைக் கப்பில் ஊற்றிக் கொடுத்து, ''இரவு தூங்காததற்கு, காஃபி குடித்தால் நன்றாயிருக்கும், அண்ணி'' என்றாள், பரிவுடன்.

இன்னமும் கனவு போலத்தான் இருக்கிறது என்று எண்ணியபடி, காஃபியை வாங்கிக் குடித்தாள், சாருமதி. சூடான பானம் தொண்டைக்குள் இறங்க, இறங்க, மூளை, உடம்பு எல்லாமே, இயல்பு நிலைக்குத் திரும்புவது போல உணர்ந்தாள்.

ஏதோ தோன்ற, ''நான் இரவு தூங்கவில்லை என்று, எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

''அ... அது, என்ன அண்ணி, யோசியாமல் குற்றம் சுமத்திய எனக்கே, சரியாகத் தூக்கம் வரவில்லையே, அபாண்டமாகக் குற்றம் சுமத்தப்பட்ட உங்களுக்கு எப்படி இருந்திருக்கும்? உங்கள் கண்ணையும் முகத்தையும்

பார்த்தால் தெரியவில்லையா? அழுதழுது ஒய்கிற வரைக்கும், ஒரு பொட்டுக் கண் மூடியிருக்க மாட்டீர் கள்'' என்று நேரில் பார்த்த மாதிரி, சின்னவள் கூறவும், சாருமதிக்கு, மேலும் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

சின்னப் பெண்ணாக இருந்தாலும், எவ்வளவு சரி யாக ஊகிக்கிறாள், என்று எண்ணி ஆச்சரியப்பட்டாள். கூடவே, அவள் கூறியது மனதில்பட, ''நீங்களும் தூங்க வில்லையா?'' என்று கேட்டாள்.

''அண்ணி, ப்ளீஸ்!'' என்றாள் அனுபமா. ''நான் உங்களைவிடச் சின்னவள். அத்தோடு, நீங்கள் எனக்கு, அண்ணன் மனைவி. அதனால், என்னை 'நீ' என்றே, அழையுங்கள். 'நீ' என்றுதான் கூப்பிட வேண்டும் என்ன?'' என்றாள் உரிமையோடு.

யோசனையோடு பார்த்தாள், சாருமதி.

அவள் இந்த வீட்டுக்கு வந்து, இத்தனை மாதங்க ளில், அனுபமா, அவளாக வந்து, சாருமதியுடன் பேசி யதே இல்லை என்று சொல்லிவிடலாம். தீபா நிமித்தமா கப் பேச நேர்ந்த சமயங்களில் கூட, யாருடனோ பேசுவது போலப் பொதுப்படையாகத்தான் பேசுவாள். அவ்வப்போது, எடுத்தெறிந்தாற் போலவும் இருக்கும். உறவாக, அவளை ஒத்துக் கொண்ட மாதிரியே, இராது இன்று மட்டும் ஏன் இப்படி?

சாருமதியின் பார்வை புரிய, அனுபமா, ஒருகணம் தலை குனிந்தாள். பின்னர் நிமிர்ந்து, ''ரொம்ப நாளா கவே, நான் தப்பு செய்து கொண்டே இருந்து விட்டேன், அண்ணி. நேற்றிரவு செய்தது, மிகப் பெரிய தப்பு. அந்தச் சேலையும், நகையும், உங்களுக்கு மிகவும் பொருந்தியி ருந்தன. சும்மாவே, நீங்கள் அழகு. இதில், வேறு

ஜொலித்தீர்களா? எனக்குப் பொறாமை வந்து விட்டது என்று தோன்றுகிறது. அத்தோடு... இந்த வீட்டில் எத்த னையோ பிரச்சினைகள்! அதையெல்லாம், உங்களுக்கு அண்ணன்தான் சொல்ல வேண்டும். அதுவும் சேர்ந்து கொள்ள, கண்டபடி, வாயை விட்டுவிட்டேன். தயவு பண்ணி, என்னை மன்னித்துவிடுங்கள், அண்ணி'' என்று மிகவும் நயந்து வேண்டிக் கொண்டாள். ''இனிமேல், நான் அப்படியெல்லாம் பேசவே மாட்டேன் என்ன?''

இப்படிக் கேட்பவளிடம், முடியாது என்று, எப்படிச் சொல்ல முடியும்?

''தப்பை உணர்ந்து கொண்டாலே, போதும் அதற்கு மேல், மன்னிப்பெல்லாம் எதற்கு?'' என்று, ஏதோ சொல்லிச் சமாளித்தாள், சாருமதி.

இந்த வீட்டில், வேறு என்ன பிரச்சினை இருக்கக் கூடும், என்ற கேள்வி சாருமதியின் மூளையைக் குடை யத்தான் செய்தது. ஆனால், 'அண்ணன்தான் சொல்ல வேண்டும்' என்று அனுபமா முடித்துவிட்ட பிறகு, அதை, அவளிடம் கிளறுவது, அநாகரீகமாகப் படவே, அவளும் அந்தப் பேச்சை விட்டுவிட, அண்ணியும் நாத்தனாருமாகப் பொதுவான, பலவிஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

பெரும்பான்மை விஷயங்களில், இரு பெண்களுக் கும் ஒத்த கருத்து இருக்கவே விரைவிலேயே இருவரும், நல்ல தோழிகளாகப் பழகத் தொடங்கினார்கள்.

இதன் காரணமாகவே, அன்று, அனுபமா நியாயமற் றுப் பேசியதுகூட நல்லதற்குத்தான் போலும் என்று சாருமதி எண்ணிக் கொண்டாள். ஏனெனில், அப்படிப் பேசியதால்தானே, அனுபமா, அது தப்பு என்று

உணர்ந்து, அவளிடம் மன்னிப்பை வேண்டியதும், அவளோடு பிரியமாகப் பழகத் தொடங்கியதும்!

இந்த விஷயத்தில், சாருமதி அறியாதது ஒன்று உண்டு. அதுதான், நித்யானந்தனின் பங்கு.

அவள் எண்ணியது போல, அன்று, நித்யானந்தன், தங்கையைத் தட்டிக் கொடுத்தது, அவள் சாருமதியிடம் பேசிய விதத்தை மெச்சி அல்ல. அண்ணனின் கண்டனப் பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாமல், கண்ணீர் விட்ட அனுபமாவைச் சமாதானப்படுத்தவே.

நித்யானந்தன் முறைத்துப் பார்த்ததோடு, மதுரமும் மகளைத் திட்டவே, அனுபமா, ரொம்பவுமே, அழுது விட்டாள்.

''நாக்கை அடக்கத் தெரியாமல் வாய்க்கு வந்தபடி பேசிவிட்டு, அழுகை, என்ன அழுகை?'' என்று, அதற்கும் திட்டு விழுந்தது.

இது போன்ற, திட்டு, அதட்டல்கள் அறியாமல் வளர்ந்த தங்கை, கலங்கித் திகைப்பதைக் காணவும், அவள் அண்ணனுக்கு மனம் உருகிவிட்டது.

தாயின் அசைவுகளில், பதற்றத்தைக் கண்டு, தங்கையைத் தான் பார்த்துக் கொள்வதாகச் சொல்லி, அவளை அனுப்பிவிட்ட, நித்யா, அனுபமாவிடம் திரும்பினான்.

தட்டிக் கொடுத்துச் சமாதானப் படுத்தியதோடு நில்லாமல், பொதுவாகவும், சாருமதியைப் பற்றியும் அறிந்ததும், ஊகித்ததுமாகச் சில விஷயங்களையும், எடுத்துச் சொன்னான்.

அனுபமாவைப் பொறுத்த வரை, அவளுக்கு, அவளுடைய அண்ணன்தான் ஹீரோ, அவன் சொல்தான்

வேதம். அந்த அளவுக்கு அவள் ஓர் அண்ணன் பைத்தியம். எனவே, அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும், பசுமரத்தில் அடித்த ஆணி போல, அவள் மனதில் பதிந்தது.

அண்ணன் விஷயத்தில் ஏமாற்றினாள் என்பதுதான், சாருமதியிடம், அவளது முதல் மனத்தாங்கல்.

ஆனால், அவள் நல்லவள்தான் என்று நித்யானந்தன் காரணகாரியத்தோடு கூறவும், அப்படியே மாறி விட்டாள்.

அத்தோடு அவன் உண்மையான மோசக்காரர்கள் பற்றியும், அவளுக்கு விவரித்துச் சொன்னான்.

அலுவல் அறைக்கு அழைத்துச் சென்று, வக்கீல் நோட்டீஸ் ஒன்றை எடுத்து, அவளிடம் கொடுத்தான்.

தீபிகாவுடைய தாய் வழிப் பாட்டி அனுப்பியது, அது.

அதில், திருமதி. தங்கம்மாளுடைய பெண் வயிற்றுப் பேத்தியான தீபிகாவை, அவனுடைய தந்தை வீட்டில் வளர்க்கும் விதம் சரியில்லாததால், அவளைத் தங்கம்மாள் வசம் ஒப்புவிக்கும்படியும், தங்கம்மாள் ஆதரவற்ற பெண்மணி என்பதால், தீபிகாவை வளர்ப்பதற்காகப் பணமும், தீபிகாவுடைய தந்தையின் சொத்தில் பங்கும் தரும்படியாகவும், இதை ஒரு மாதத்துக்குள்ளாகச் செய்யாவிட்டால், கோர்ட் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், எழுதப்பட்டிருந்தது.

முகம் சிவக்கப் படித்து முடித்தவள், ஆத்திரத்துடன் நிமிர்ந்து, அண்ணனைப் பார்த்தாள்.

அவன், சற்று அசட்டையான புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருக்கவும், அமைதியடைந்து, ''என்ன அண்ணா, பதில் எழுதினீர்கள்? கிட்டத்தட்ட இதே போல, முன்பும் ஒன்று வந்ததாக, அம்மா சொன்னார்களே!'' என்று கேட்டாள். ''திரும்பவும், ஏன் இப்படி?''

''எறும்பூரக் கல் தேயும் என்று எண்ணியிருப்பார்கள்!'' என்றான் அவன் அலட்சியமாக.''இதை, அம்மாவிடம் சொல்லிவிடாதே. முன்பு வந்த போதே, ரொம்பவும் மனது சங்கடப்பட்டார்கள். இப்போது, தீபாவிடம் வேறு, உயிராகி விட்டார்களா? தாங்கவே மாட்டார்கள். அதனால்தான், அப்பாவும் நானும், வீட்டில் சொல்லாமலே விட்டுவிட்டோம்.''

''ஐயோ, ஆமாம் அண்ணா! தீபாவை நினைத்தால், எனக்குக் கூடக் கவலையாக இருக்கிறதே!'' என்று கலங்கினாள், தங்கை.

''ஒன்றும் கவலைப்பட வேண்டாம். உனக்குக் காட்டியதே, அடுத்தவர் சொத்துக்கு மனிதர்கள், எப்படிப் பறக்கிறார்கள் என்று, காட்டத்தான் அதை நினைத்து, அனாவசியமாகக் கவலைப்படுவதற்காக அல்ல'' என்றான், அண்ணன்.

''எப்படி, அனாவசியம் என்கிறீர்கள்?'' என்றாள் அனுபமா, கவலை தீராமலே.

''ஏனென்றால், கோர்ட்டில், அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று, எனக்குத் தெரியும். அது, அவர்களுக்கும் தெரியும். அதனால்தான், இந்த நோட்டீசை அனுப்பிய கையோடு ஒருபத்து லட்சம் ரூபாய் கொடுத்தால், கோர்ட் நடவடிக்கை எடுக்காமல் விட்டு விடுவதாக ஃபோனில் பேரம் பேசுகிறார்கள். அதைவிடு,

நாம் இப்போது, திருடுவதைப் பற்றியல்லவா பேசிக் கொண்டிருந்தோம் பார். நம்முடைய இந்தச் சொத்தை வளர்ப்பதற்காகவோ, காப்பதற்காகவோ, அவர்கள் ஒரு விரலைக்கூட அசைத்ததில்லை. ஆனாலும், அதைப் பிடுங்கிவிட, எப்படித் துடிக்கிறார்கள், பார் இதுதானம்மா, திருடுவது.

நன்றாக யோசித்துப் பார் நாமாகக் கொடுத்தது தவிர, சாருமதி, தானாகத் தனக்கென்று, எதையாவது கேட்டதுண்டா? சுரிதார் கமிஸ் கிழிந்தபோதுகூட, அதைத் தைக்க ஊசி நூல்தான் கேட்டாளே தவிர, புதிது கேட்கவில்லையே. இந்தக் கல்வி ஒன்றுதானே, அவள் கேட்டதெல்லாம்!''

''அதென்னண்ணா, பெரிய விஷயம்? நம் நிறுவனத்திலிருந்து, எத்தனையோ பேருக்கு, படிப்புக்கென்று, உபகாரச் சம்பளம் கட்டவில்லையா? வீட்டுப் பெண் படிப்பதற்கு, என்ன?'' என்று ஒத்துப் பாடினாள், அனுபமா.

''நம் தீபாவை நினைத்துப் பார் நம் வீடு, இப்போது நல்லபடியாக வீடாக இருக்க அவள்தானே, காரணம்? ம்?''

அனுபமா அதையும் ஒத்துக் கொண்டாள்.

''இன்னொன்று கூட தீபா பற்றி, அவளுக்கு முன்பே தெரியாதோ, என்று எனக்குச் சந்தேகம்மா, அப்படியிருந்தும், நான் சொன்னேன் என்று, தீபுக் குட்டியை எப்படிக் கவனித்துக் கொள்கிறாள் பார். நாம் பார்க்கிற நேரம், பார்க்காத நேரம் என்றில்லாமல், எப்போதுமே, எப்படிப் பார்க்கிறாள்? ஆனந்தி அத்தை வீட்டுக் கல்யாணத்தில் நானே பார்த்தேனே, பாதாம் அல்வா, கட்லட் எல்லாம்

தீபா விரும்பிச் சாப்பிடுகிறாள் என்று, சாருமதி தன்னதை யும், அவளுக்கே கொடுத்து விட்டாள். எத்தனை பேர் பிள்ளைகளைச் சாக்கு வைத்து, வாங்கி அவர்களே முழுங்கப் பார்த்திருக்கிறோம்? இவள், தன்னதையும் பிள்ளைக்குக் கொடுத்துவிட்டுத் திரும்பக் கேட்கக்கூட இல்லையம்மா. நானும், ஒரு கண்ணால், கவனித்துக் கொண்டே, இருக்கிறேன், முகத்தில் புன்னகை வாடவே இல்லை. அனு இத்தனைக்கும், இவள் கொஞ்சம், இல்லா மல் வளர்ந்தவளாகவும் தெரிகிறது. இப்படிப்பட்டவள், அந்த நகைக்கு, ஆசைப்படுவாளாடா?''

தன் நீண்ட பேச்சை, நித்யானந்தன் முடித்த போது, அனுபமாவின் தலை குனிந்திருந்தது.

''நான், நாளைக்கு, அவர்க... அண்ணியிடம் மன் னிப்புக் கேட்கட்டுமா, அண்ணா?'' என்று, சின்னக் குரலில் கேட்டாள்.

தங்கையின் குனிந்த தலையை மெல்ல வருடி, ''உனக்கு என்ன தோன்றுகிறது?'' என்று, வினவி, அவளையே முடிவெடுக்கச் சொன்னான் அவன்.

''செய்தது, தப்பு, அதனால், மன்னிப்பும் கேட்கத் தான் வேண்டும். இப்போது எழுப்புவதைவிட, நாளைக் காலையில் அண்ணியிடம் பேசுகிறேன்...அண்ணா, சாரி, அண்ணா'' என்றாள், அனுபமா.

''அண்ணனிடம் கூட, சாரி சொல்ல வேண்டுமா?'' என்று, தங்கையின் கன்னத்தில் தட்டி விட்டு, எழுந்தான் நித்யானந்தன்.

கூடவே எழுந்தபடி, ''இந்தக் கல்யாணப் பெண் மாறிய விஷயம்தான், இன்னமும் மனதைக் குழப்புகிறது.

அண்ணா அது மட்டும் தெளிவாகிவிட்டால், எவ்வளவு நன்றாயிருக்கும்?'' என்றாள், அனுபமா.

''எனக்கும் அதே எண்ணம்தான் என்னவோ தப்பு நேர்ந்திருக்கிறது. அதையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றால், இந்த வைத்தியலிங்கம், விலாங்கு மீன் மாதிரி, வழுக்கிக் கொண்டே போகிறார்'' என்று, நித்யானந்தன் சலித்துக் கொண்டபோது, அனுவுக் கும், வைத்தியலிங்கத்திடம் எரிச்சல் வந்தது.

என்ன மனிதர், இவர்? திருமணம் என்றால், பெண், மாப்பிள்ளையிடம், எல்லா விஷயங்களையும், தெளிவா கத் தெரிவித்து விடவேண்டாமா?

மனதில் நினைத்ததை, அனுபமா வெளிப்படையா கச் சொல்ல, நித்யானந்தனுக்குச் சிரிப்பு வந்தது.

முதல் நாள் இரவில், இதெல்லாம் நடந்து முடிந்து விட, இனி, அண்ணியிடம் நன்றாகப் பழகுவதாகவும் ஒத்துக் கொண்டுவிட்டுப் படுக்கச் சென்றாள், தங்கை.

மறுநாள் காலையில், நித்யானந்தனே, தங்கையைத் தேடி வந்தான்.

இரவு முழுவதும் தூங்காமல் அழுது கொண்டிருந்த சாருமதி அப்போதுதான் தூங்குவதாகவும், தீபாவைப் பள்ளிக்கு, அனுப்பும் வேலையைப் பார்த்துக் கொள்ளு மாறும், கூறவே, உடன் ஓடிச் சென்றாள்.

அவளால் அல்லவா, சாருமதி, இரவு முழுவதும் அழுதிருக்கிறாள்! குற்ற உள்ளம் கூட, அண்ணன் சொன் னதைச் செய்ததோடு, அண்ணியிடமும் மன்னிப்பை வேண்டினாள்.

அனுபமாவுக்கு எதிலும் அரைகுறை என்பதே, கிடையாது.

நிரூபணம் இல்லாமல், சாருமதி சொல்வதை நம்புவது கடினமாயிருக்கும் என்று மற்றவர்கள் கேளாமலே விட்டதை, அவள் கேட்டாள்.

"எப்படி மணமகனைப் பாராமல், மாப்பிள்ளை வீட்டாருடன் எந்தத் தொடர்புமே இல்லாதபோதும், மணமேடையில் வந்து உட்கார்ந்தீர்கள்?" என்று அவள் கேட்டபோது, சாருமதி, தன் விவரம் சொல்லவும், அவளுக்கு அப்படியே உருகிவிட்டது.

"இதையெல்லாம், நீங்கள் சொல்லவே இல்லையே, அண்ணி சொல்லியிருந்தால், எவ்வளவோ நன்றாயிருந்திருக்குமே!" என்று வருந்தினாள்.

ஒரு பெருமூச்சுடன், "யாரிடம் சொல்வது?" என்று கேட்டாள் சாருமதி! "எல்லோருமே, என்னை, வெறுப்புடன் ஒதுக்குகிற மாதிரி இருக்கும்போது, நான் யாரிடம் போய், என் கதையைச் சொல்ல முடியும்?"

வெறுத்து ஒதுக்கியதற்குக் காரணம் இருந்தது. ஆனால், அதை அரைகுறையாகச் சொல்ல முடியாது. சொல்லக் கூடியவனும், சொல்லும் உரிமை உள்ளவனும் கூட, அண்ணன் மட்டுமேதான்; அதில், அனுபமா தலையிட முடியாது.

எனவே, அந்தப் பேச்சை விடுத்து, "இதையெல்லாம், இப்போது, அண்ணனிடம் சொல்லுங்கள், அண்ணி சொல்லி, நல்லபடியாக வாழலாமே, அண்ணி" என்று யோசனை சொன்னாள்.

அவளது அர்த்தம் புரியாதவளைப் போல, "ஏன்? நான் நன்றாகத்தானே இருக்கிறேன்?" என்றாள், மற்றவள்.

"சும்மா கதை விடாதீர்கள் நான் ஒன்றும், எதுவும் தெரியாத சின்னப் பாப்பா அல்ல. அண்ணனும் நீங்களும் வாழ்கிற விதம் எனக்குத் தெரியாது என்று, எண்ண வேண்டாம். பேசாமல், எல்லாவற்றையும், அண்ணனிடம் ஒப்பித்துவிட்டு, ஊரைப் போல வாழ்ந்து, இந்த வீட்டுக்கு இன்னும் இரண்டு குட்டிப் பிள்ளைகளைப் பெற்றுக் கொடுங்கள்" என்று உரைத்தாள் சின்னவள்.

'கணவன் மனைவி என்றால், படுக்கையில் விழுந்து விட வேண்டுமா?'

இதில் தொடங்கி, என்னென்ன சொன்னான்? இவனோடா? சட்டென, சாருமதியின் முகம் கன்றியது. ஒரு பெரிய மூச்சை எடுத்து விட்டுவிட்டுச் சொன்னாள் "ஒரு விஷயம் மனதில் வைத்துக்கொள், அனுபமா. நம் உறவு நன்றாக இருக்க வேண்டுமானால், உன் அண்ணன் பேச்சை, நீ என்னிடம் எடுக்கக் கூடாது."

கொஞ்சமும் சுதி உயர்த்தாத ஆனால், அழுத்தமான குரலில், அவள்பேசிய போது, அனுபமாவுக்குச் சட்டெனத் தாயின் நினைவு வந்தது. வெகு அபூர்வமாகத்தான், மதுரம் இந்த மாதிரி பேசுவது. ஆனால் அதை மீற முடியாது!

சாருமதியிடம் மேலே பேச முடியாமல் போகவே, அவள் அண்ணனிடம் போய் நின்றாள்.

தங்கையின் மூக்கைப் பிடித்து ஆட்டிவிட்டு, "இந்தச் சின்ன மூக்கைத் தேவையில்லாத இடத்தில் எல்லாம் நுழைக்கக் கூடாது. சின்னக் குட்டி நீ சும்மா, ஜாலியாகச் சுற்றிக் கொண்டிரு எல்லாம் தானாகச் சரியாகி விடும்" என்றானே தவிர, வேறு எதுவும் கூற அவனும் மறுத்து விட்டான்.

எல்லாம், இந்தப் பெண்மாற்றக் குளறுபடியால் வந்ததுதான் என்று தோன்றவும், அனுபமா, தந்தையிடம் சென்றாள். ''என்னப்பா நீங்கள்? இந்த வைத்தியலிங்கம் வழுக்குகிறார். வழுக்குகிறார் என்று சொல்லிக் கொண்டு சும்மாவே, உட்கார்ந்திருக்கிறீர்கள்? யாரையாவது அவர் வீட்டில் உட்கார வைத்து, அவர் வந்ததும், பிடித்துக் கொண்டுவர முடியாதா?'' என்று பொருமினாள்.

கையிலிருந்த பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு, விசுவநாதன், மகளிடம் திரும்பினார். ''முடியும்மா. தாராளமாகச் செய்ய முடியும். ஆனால், அந்த அளவுக்கு, அது முக்கியமில்லை என்றே அதில் மும்முரமாக ஈடுபடவில்லை'' என்றார் அவர் அமைதியாக.

திகைத்து ''என்னப்பா, முக்கியம் இல்லையா? அவரை வைத்துத்தானே, அண்ணி விஷயம் தெளிவு படுத்த வேண்டும்? மறந்து விட்டீர்களா? என்று கேட்டாள் மகள்.

''மறக்கவில்லையம்மா ஆனால், அவர் ஒரு தரகர் ஒரு நல்லது நடப்பதற்காகக் கொஞ்சம் கூட்டிக் குறைத்துச் சொல்லக் கூடியவர். இவரது வார்த்தையை அந்த அளவுக்கு ஒரேயடியாக நம்ப முடியாதில்லையா? அதனால்...''

''என்னப்பா நீங்கள்? தரகர் சொல்வதை நம்பித் திருமணத்தையே, நடத்துகிறீர்கள், இப்படிச் சொன்னால், எப்படிப்பா?'' என்று, தந்தையின் பேச்சில் குறுக்கிட்டு, ஆட்சேபித்தாள் மகள்.

''அது சரிதானம்மா. ஆனால், பார், இந்தப் பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் கேட்கிற மாதிரிப் பெண்ணும், பையனும், என்ன தேடினாலும், இந்த உலகத்தில் கிடைக்க மாட்டார்கள்! அதனால், இவர்கள் கொஞ்சம் அப்படி இப்படிச் சேர்த்துப் பேசினால்தான், ஒரு திருமணம் நடக்கும் தாலி கழுத்தில் ஏறி விட்டால், அப்புறம் எல்லாம் சரியாகி போகும், என்று ஒரு நம்பிக்கையில் செய்வதுதான், அவர்களையும் தப்பு சொல்ல முடியாது. ஆனால் முழுக்க முழுக்க, இவர்கள் பேச்சை நம்புவது, அவ்வளவு சரியில்லை. அதிலும், வைத்தியலிங்கம், ஆள் மாறாட்டம் செய்தவர். அதனால் தான், அவரைக் கூட்டி வருவதில், நான் அவ்வளவு முனைப்பாக இருக்கவில்லை'' என்று விளக்கினார், பெற்றவர்.

''பின்னே, இதற்கு என்னதான் தீர்வு, அப்பா? அண்ணி விஷயம் தெளிவில்லாமலே, அப்படியே கிடக்க வேண்டியதுதானா? நீங்கள் சொன்னதை வைத்து, அந்த மனிதர் கிடைத்து விட்டால், எல்லாம் சரியாகிப் போகும் என்று நினைத்தேனே, இப்போது என்ன செய்வது?'' என்று, வருத்தத்துடன் கேட்டாள் மகள்.

''ஏனம்மா, அப்படி? அன்றைக்கு, அவர் ஒரு வார்த்தை சொன்னால், நன்றாயிருக்குமோ, என்று தோன்றியது. ஆனால், அதைவிட நாமாக அறிந்து கொள்வது, இன்னும் மேல் அல்லவா? சொல்லு, இவ்வளவு நாளில், சாருமதியைப் பற்றி, உன் கருத்து மாறிவிடவில்லையா? நல்ல பெண் என்றுதான், நான் நினைக்கிறேன் உன் அம்மாவுக்கும், அதே எண்ணம்தான். அப்புறம் சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போமே?'

விசுவநாதன் முடித்துவிட்டாலும், அவர் மகளுக்கு, இருப்புக் கொள்ளவில்லை.

எவ்வளவு நாள் பொறுப்பது?

ஒரு காலத்தில் உலகம் வெறும் பாறைகளாக இருந்த தாகவும், வெயிலும், மழையும், மாறிமாறிப் பட்டு, அந்தப் பாறைகள் உடைந்து, பொடியாகி, வளமான மண்ணாக ஆனதாகவும், அனுபமா படித்திருக்கிறாள்.

ஆனால், அதற்குத் தேவைப்பட்ட காலம், பலகோடி ஆண்டுகள்!

இந்த அண்ணனும், அண்ணியும் எப்போது மனம் இளகி, எந்தக் காலத்தில் ஒன்றாகச் சேர்வது?

இதற்கு, ஏதாவது வழி இருக்கும் என்று, உட் கார்ந்து, உட்கார்ந்து யோசித்தவளுக்குத் தாமரையின் நினைவு வந்தது.

திருமணத்தின் போது, பெண் சார்பில் நின்ற, இரு பெண்களில் ஒருத்தி, தரகர் மனைவியோடு நின்றவள். சாருமதியைப் பற்றி உயர்வாகப் பேசியவள். தரகர் வைத்தியலிங்கத்தின் வீட்டோடு, அவளுக்கு நல்ல பழக் கம் இருந்தது அவர்கள் பழகிய முறையிலேயே தெரிந் தது. பெயர் சொல்லாமல், சினேகிதி என்று சாருமதி, குறிப்பிட்டது இவளாகவே இருந்தால், எவ்வளவோ நன்றாயிருக்கும்!

அவ்வளவுதான் உடனே, அனுபமா கிளம்பி விட் டாள்.

சகுந்தலாவுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு, அவள் மூலம் தாமரையைச் சந்தித்து, 'இல்லத்'து வாழ்க் கையிலிருந்து 'திடீர்'த் திருமணம் வரை, சாருமதி கூறிய தெல்லாம், கலப்படமற்ற உண்மை என்று, அறிந்து கொண்டு, அவள் மகிழ்ச்சியோடு திரும்பி வந்தபோது,

அவளுடைய தாயும், தமையனும் கூட ஏதோ முக்கியமா கவே பேசிக் கொண்டிருந்தனர்.

பொறுத்திருக்க மாட்டாமல், அனுபமா, தன் சேதி யைச் சொல்ல, "பரவாயில்லையே, என் பெண்ணும் கெட்டிக்காரிதான்!" என்று மதுரம் மகிழ்ச்சியோடு கூறி னாள்.

"பெரிய வேலை செய்தீர்களாக்கும்?!" என்று, கிண்டலடித்த போதும், அண்ணனின் முறுவலிலேயே பாராட்டை உணர்ந்து, அனுபமாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியாது போயிற்று.

"இப்போது சொல்லுங்கள், நான் வரும் போது, நீங்கள் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்?" என்று சற்று, அதிகாரத் தோரணையில் விசாரித்தாள்.

லேசாகச் சிரித்துவிட்டுத் தாயிடம், நகைப் பெட்டி யைத் திறந்து காட்டினான், நித்யானந்தன்.

"அம்மா, இது..." என்று தங்கை திகைக்கவும், அண்ணனின் சிரிப்பு அதிகமாயிற்று.

"எப்படித்தான் சிரிக்கிறாயோ நம் பொருளையே, பணம் கொடுத்து, வாங்கி வந்திருக்கிறாயே!" என்று மதுரம் குறைப்பட்ட போதும், அவள் குரலில் அதிகம் இருந்தது ஆனந்தமே.

வழிவழி வந்த வீட்டு நகை, மீண்டும் வீடு வந்து விட்ட மகிழ்ச்சி.

நித்யானந்தன் விவரம் சொன்னான்.

"இந்த வைர மாலையை, முதலில் அடகு வைத்துப் பணம் வாங்கியிருக்கிறார்கள். மேலே மேலே, வாங்கி

யது தவிரத் திருப்பி ஒரு பைசா கொடுக்கவில்லை. வட்டியும் வரவில்லை. அடகு பிடித்தவருக்குக் கவலை வந்துவிட்டது. உடனே, பணம் வராவிட்டால், விற்று விடப் போவதாக மிரட்டியிருக்கிறார். அதை, விற்பதைப் பற்றி, அவர்களுக்குக் கவலை ஒன்றும் இல்லைதான். ஆனால், அவர்களே விற்றால், சில லட்சங்கள், அதிகம் கிடைக்கக் கூடுமே என்ற ஆசை! அதற்காகத்தான், பணம், பணம் என்று கேட்டது. 'பைசா தர முடியாது. உங்களால் ஆனதைப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று நான் சொல்லி விட்டதால், வேறு வழியின்றி விற்கச் சொல்லியிருக்கிறார்கள். இது, பெரிய நகையில்லை யாம்மா? யாருடையது; என்ன என்று, கடைசியாக, அப்பாவுக்கே, ஃபோன் செய்து கேட்டிருக்கிறார்கள். நானும், அப்பாவும் யோசித்தோம். இந்த நகை போனது. உங்களுக்கு உள்ளூர வருத்தம் என்று தெரியும். அத் தோடு, ஒன்றுமே இல்லாமல் போய்விட்டது என்று நினைத்தது. இப்போது பாதி விலைக்குக் கிடைக்கிறது என்றால், அதுவும், ஒரு வகையில் நஷ்டக் குறைவு என்கிற வகையில் லாபம்தானே? சரிதான் என்று, வாங்கி விட்டோம்" என்றான்.

"எவ்வளவு பணம்! அவ்வளவையும், என்னடா செய்வார்கள்?" என்று, வருத்தமும் வியப்புமாக, மது ரம், கேட்டாள்.

தோளைக் குலுக்கினான் மைந்தன். "சூதாட்டம்! அந்தம்மா, ரொம்ப மோசம், அம்மா. மகளை, நம் வீட்டில் கொடுத்ததே, இங்கிருந்து, பணம் பீராய்ந்து கொண்டு போய்க் கொடுக்கத் தானே! கடைசியாக, அவ்வளவு காலம், அவளை அங்கே வைத்திருந்தது

கூட, தீபாவுக்காகவும், அவளுக்காகவும், நாம் ஆயிரக் கணக்கில் அனுப்பிய பணத்துக்காகத்தான், அம்மா. மருந்துக்கு, டாக்டருக்கு, துணிமணி வாங்க, என்று, எவ்வளவு கொடுத்திருப்போம், நினைவிருக்கிறதா?"

ஓர் அருவருத்த குரலில், நித்யானந்தன் சொல்லச் சொல்ல, மதுரத்தின் முகம் வாடிப் போயிற்று.

"நீயாக, விரும்பிக் கேட்கவில்லை. அழகான மரும கள் வேண்டும் என்ற ஆசையில், உனக்கு, அநியாயம் செய்து விட்டேன். இல்லையாப்பா?" என்று, பெற்றவள் வருத்தத்துடன் கூறவும், நித்யானந்தன் சுதாரித்தான்.

"அதெல்லாம் முடிந்த கதை. இன்றைக்கு, அந்தக் கஷ்டங்கள் அத்தனையிலிருந்தும் மீண்டு விட்டோம். அந்தக் கசப்பிலிருந்து, ஓர் அருமையான குழந்தை, தீபா கிடைத்திருக்கிறாள். அவளுக்கு அம்மாவாக, மிக அரு மையான, இன்னொரு பெண்ணும் கிடைத்திருக்கிறாள்... முதலில், இந்த மாதிரி நிலைமை ஏற்படாவிட்டால், சாருமதி என்று ஒருத்தி இருப்பதே, நமக்குத் தெரியாமல் போயிருக்குமே! அதை, நினைத்துப் பாருங்கள். அம்மா பட்ட துன்பமெல்லாம், அடியோடு மறந்து போய்விடும்" என்று, அவன் எடுத்துரைக்க, மதுரத்தின் முகம், மறுபடி யும் மலர்ந்தது.

அதுவரை, தான் எதுவும் பேசாமல், பெரியவர்கள் பேச்சை, அனுபமா ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந் தாள். அவ்வப்போது, காதில் விழுந்தது. அவளாக ஊகித்தது. எல்லாவற்றையும், இந்த உரையாடலோடு சேர்த்துக் கோர்த்துப் பார்த்தபோது, அவளுக்கு, அவளு டைய அண்ணன், மிக உயர்ந்தவனாகத் தோன்றினான்.

அண்ணியிடம் சொல்லவேண்டும், என்று எண்ணி யவள், ''அண்ணி எங்கே? இன்னுமா, வரவில்லை? வேறே எங்கேயும் போயிருக்கிறார்களா?'' என்று கேட்ட படி எழுந்தாள்.

திடுக்கிட்டவளாக, மதுரமும் எழுந்தாள். ''இல் லையே, எங்கு போவதாகவும் சொல்லவில்லையே! தையல்காரரிடம் போக வேண்டியிருப்பதால், நேரே வந்துவிடப் போவதாகச் சொன்னாளே. இந்தப் பேச்சில், நான், கவனிக்கவே இல்லையே. வழக்கத்துக்கு, வெகு நேரம், தாமதமாகியிருக்கிறதே! இன்னமும் இரண்டு பேரையும் காணவில்லை? தீபா ஸ்கூல், கம்ப்யூட்டர் சென்டர், இரண்டுக்கும் ∴போன் போட்டுப் பார், நித்யா'' என்று பரபரத்தாள்.

அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, டெலி∴ போன் கிணுகிணுத்தது.

''அண்ணியாகத்தான் இருக்கும்'' என்று ஓடிய அனுவை, இரண்டே எட்டில் முந்திச் சென்று ரிசீவரை எடுத்தான், அவள் அண்ணன்.

எதிர்முனைப் பேச்சில், சட்டென முகம் மாறியவன், ''சரியாகக் கேட்க வில்லை'' என்று கூறியபடியே, டேப்பு டன் கூடிய ''ஆன்சரிங் மிஷி'னை, 'ஆன்' செய்தான்.

பேச்சு முடிந்ததும், ''என்ன, என்ன'' என்று, கேட்ட அன்னைக்கும், தந்தைக்கும் பதிலாக 'ஆன்சரிங் மிஷி'னை, திரும்பச் சுற்றி ஓடவிட்டான்.

அதிலிருந்து, ''நான் சொல்வதை, நன்றாகக் கேட் டுக் கொள்ளுங்கள். உங்கள் மகள் தீபா, என் பிடியில் தான் இருக்கிறாள். அவளை, உயிரோடு திரும்பப் பெற

வேண்டுமானால், எனக்கு நீங்கள் பத்து லட்ச ரூபாய் தர வேண்டும். முதலில் பணத்தைத் தயார் பண்ணுங்கள். அதை, எங்கே, எப்படித் தர வேண்டும் என்று, பிறகு சொல்லுகிறேன். கவனமாகக் கேளுங்கள். அந்தப் பத்து லட்சத்தில், நாற்பது, அறுபது, ஏன், இரண்டோ, நாலே, குறைந்தால்கூட, நான் அதை ஒத்துக் கொள்ள மாட் டேன். அதை விடுங்கள், நயாபைசாக் கணக்கில், பத்துப் பைசா, அதற்கும் குறைவாக ஐந்தே பைசா குறைந்தாலும் கூட, அப்புறம், உங்கள் மகள், உங்களுக்குக் கிடைக்க மாட்டாள். போலீசுக்குப் போனால் அடியோடு போனாள் என்று, ஆகிவிடும். ஜாக்கிரதை! திரும்பவும் கவனியுங்கள், நான் சொன்னது போலக் கொஞ்சம் குறைந்தாலும், அப்புறம் என்னைக் குற்றம் சொல்லிப் பயன் இல்லை'' என்று, கடுமையாக எச்சரித்தது, சந்தே கத்துக்குச் சற்றும் இடமின்றிச் சாருமதியின் குரலேதான்.

15

சற்று நேரம் அந்த இடத்தில், ஒரு சிறு ஊசி விழுந்தால் கூடப் பேரோசையாகக் கேட்டுவிடும் போல, அப்படி ஒரு முழு அமைதி, நிசப்தம் நிலவியது.

''என்னண்ணா, இது? தீபா...'' என்றாள், அனு பமா, அழுகைக் குரலில்.

''இப்போதுதானே... கண்ணா, என்னடா இது? இது... நிஜமாகவே, சாரும்மாவின் குரலேதானாடா? என்னால் நம்ப முடியவில்லையே!'' என்று, கலங்கி னாள், மதுரம்.

''ஓ... ஒரு வேளை, அண்ணி, ஏதேனும் விளை யாட்டுக்குச் செய்கிறார்களோ?'' என்று யோசித்து விட்டு, ''ஐயோ, அந்த அளவுக்கு அண்ணி இன்னமும், நம் வீட்டில் பழகக்கூட இல்லையே! ஆனால், அண்ணி எப்படி, இப்படி?'' என்ற அனுபமாவின் கண்களில் இருந்து, கண்ணீர் வடியத் தொடங்கியது.

''நித்யா, நீ ஏதும், அவளை ரொம்ப மோசமாக நடத்தி விட்டாயா? அதற்காக சேச்சே சாருமதி, அந்த மாதிரிப் பெண் இல்லையே! அவள் பொறுமையில், பூமாதேவி ஆயிற்றே! அவள் எப்படி, இப்படி'' என்று மகளைப் போலவே, கேட்கத் தொடங்கிவிட்டுத் தலைய சைத்து, ''ஊகூம்'' என்றாள் உறுதியோடு. ''இது, நிச்சய மாக சாருமதியின் குரலே அல்ல'' எனும்போதே, அவ ளது குரல் தளர்ந்தது. ''ஆனால், என் கண்மணியும், அவளும், இன்னும் வீடு வரவில்லையே!'' என்றாள் பயத்துடன்.

''அம்மா, எனக்குப் பயமாய் இருக்கிறதே'' என்று, தாயிடம், ஒண்டினாள், அனு.

''எனக்கும்தான். அப்பா... முதலில் அப்பாவுக்குச் சொல்லு நித்தி. ஐயோ, அவரும் கலங்கிப் போவாரே. ஆனால், அப்பாவுக்குப் போலீசில் கடவுளே, போலீசுக் குப் போகக் கூடாது, என்றாளே கண்ணா, எதற்கும், உடனே, அப்பாவை வரச் சொல்லி விடேன். பயமாக இருக்கிறதே!'' என்றாள் தாயும்.

''அம்மா, பணத்தை எங்கே கொண்டு வர வேண் டும் என்று, மீண்டும் கூப்பிட்டுச் சொல்லுவதாகச் சொல் லியிருக்கிறாள். அதனால், பயப்படாமல், கொஞ்சம் பொறுங்கள், அம்மா'' என்றுரைத்துவிட்டு, நித்யானந் தன், மீண்டும், டேப்பை ''ரீவைண்ட்'' செய்தான்.

''அப்படியானால், அது, அவள் குரல்தான் என்றா, சொல்லுகிறாய்?'' என்று, கலக்கத்துடன் கேட்ட தாயி டம், ''ஆமாம் சாருமதியின் குரல்தான். ஆனால் கொஞ்ச நேரம் பேசாதிருங்கள்'' என்று விட்டு, டேப்பை ஓட விட்டான்.

மீண்டும் ஒரு தரம் டேப்பை ஓட விட்டுப் பையிலி ருந்த பேனாவை எடுத்து, எதையோ எழுதினான்.

பிறகு, அவன் தந்தையுடன் தொடர்பு கொண்டு பேசிவிட்டுத் தாயிடம் வந்தான்.

சற்றுத் தயங்கிவிட்டு, ''அம்மா, இது, ஒரு சிக்கல் தான்'' என்று, தொடங்கும் போதே, ''தீபா என் பேத்தி! நித்தி, டேப்பில் சாருமதி சொன்னதெல்லாம் நிஜமே தானாடா?'' என்று, மதுரம் மிகுந்த கவலையுடன் கேட் டாள்.

''அது அம்மா, நான் விரைவில் போக வேண்டியி ருக்கும். அதற்குமுன், எனக்குத் தெரிந்து, நான் ஊகித்த அளவில் எனக்குத் தெரிந்ததை, உங்களுக்குச் சொல்லி விடுகிறேன். சாருமதி தீபா, இருவரையுமே, யாரோ கடத்திப் போயிருக்கிறார்கள். கடத்தல்காரர்கள், தங் களை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதற்காக, இந்தக் கடத்தலைச் சாருமதியே செய்த மாதிரிக் காட்டத் திட்டமிட்டு, அவளைக் கொண்டே, நம்மை மிரட்டுகிறார் கள். ஆனால், சாருமதி கெட்டிக்காரத்தனமாக, அந்த மிரட்டலிலேயே, நமக்கு ஒரு குறிப்புக் கொடுத்து விட் டாள். இவ்வளவு குறைக்காதே, அவ்வளவு குறைக்காதே என்ற கட்டளையிலேயே, அவர்கள் ஃபோன் நம்பரைத் தந்து விட்டாள். அதே வைத்துக் கொண்டு, அப்பாவு

டைய போலீஸ் நண்பர் மூலம், அந்த இடத்தைக் கண்டுபிடித்து விடலாம்.''

''ஆனால் போலீஸுக்குப் போகக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்களே? தீபாவுக்கு...''

''ஒன்றும் ஆகாது. அவர்களுக்குத் தெரியும், அம்மா பார்த்துக் கொள்ளுவார்கள். அத்தோடு, சாருமதி நம்பர் கொடுத்திருக்கும் விதமே, அவ்வளவாகக் கவலைப்படத் தேவையில்லை என்று சொல்லாமல், சொல்வது போல இருக்கிறதே. என்ன, அனு, உன் தைரியம் எல்லாம், இவ்வளவுதானா? அம்மாவையும் சேர்த்து, பயப்பட வைத்து விடுவாய்போல? ம்?''

தங்கையைக் கேலி செய்வது போல, நித்யா, அவளுக்குத் திடமூட்டிக் கொண்டிருந்தபோது, டெலி.ஃபோன் மணியடித்தது.

எடுத்துப் பேசிவிட்டு, ''இடத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள். சாதாரண உடையில் நிறையப் போலீசை அங்கே சுற்ற வைத்திருக்கிறார்களாம். போய், அவர்களை, இரண்டு மிரட்டு மிரட்டி, இவர்களை, அழைத்து வந்துவிட வேண்டியதுதான்'' என்று கிளம்பினான், அவன்.

''யாருக்கும் ஆபத்தில்லாமல் பார்த்துக் கொள். அது, மிகவும் முக்கியம்'' என்று சொல்லி அனுப்பினாள் தாயார்.

அதன்படியே, யாருக்கும் ஆபத்தில்லாமல் காப்பாற்றிவிட்டதாக, டெலி.ஃபோனில் சொன்ன நித்யானந்தன், போலீஸ் விவகாரம் எல்லாம் முடிந்து வீடு வர நேரமாகும் என்று தெரிவித்தான்.

அதன்படியே, தந்தை, மனைவி மகளோடு அவன் வீடு வந்த சேர்ந்தபோது, அந்தி மாலைப் பொழுதாகி விட்டது.

எல்லாருமாக, அன்று நடந்ததைப் பற்றிக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தனர். பேச்சு, இரவு உணவு முடிந்த பிறகும் கூடத் தொடர்ந்தது.

பஞ்சத்து ஆண்டி, பரம்பரை ஆண்டி என்பார்கள்.

இந்தக் கடத்தல், மிரட்டலைச் செய்தவர்கள், பஞ்சத்து ஆண்டி ரகம் எனவேதான், பல தவறுகளைச் செய்து, எளிதாக மாட்டிக் கொண்டார்கள்.

நித்யானந்தனுடைய முதல் மாமியாரும், தீபாவுடைய தாய்வழிப் பாட்டியுமான தங்கம்மாவுக்குப் பணம் கையில் நிற்பதே இல்லை. எவ்வளவு பணம் வந்தாலும், இருந்த இடம் தெரியாமல், எப்படியோ காலியாகிப் போகும்.

அவளுடைய மகள் பிரியா அவளுக்கு ஓர் அட்சயப் பாத்திரமாக இருந்தாள்.

அவள் இருந்தபோது சுருட்டியது, கொஞ்ச காலத்துக்குத் தாக்குப் பிடித்தது.

அடுத்த அட்சய பாத்திரமாக இருந்திருக்கக் கூடிய தீபாவை, அவளுடைய தந்தையோடு அனுப்பிய முட்டாள் தனத்தை எண்ணி, அந்த அம்மாள் வருந்தாத நாள் இல்லை எனலாம். சமீப காலத்தில் வருத்தம் மிக அதிகம். ஏனெனில், பழைய மாதிரி கையில் பணம் புரளவில்லை.

ஏதாவது சொல்லிக் குழந்தையைக் கேட்டால், தர மறுத்து விட்டார்கள்.

தலைவிதி என்று இருக்கும் போதுதான் சென்னையில் அந்தத் திருமணம் வந்து தொலைத்தது.

ஒரு பெரிய மண்டபமும், சின்னது ஒன்றுமாக இரு திருமண மண்டபங்கள் அந்த இடத்தில் இருந்தன.

பெரிதில் நடந்த கல்யாணத்துக்கு மகள், அடுத்த மனைவியோடு மருமகன் செல்வதைப் பின்புறம் இருந்த சின்ன மண்டபத்துக்குச் செல்லும்போது பார்த்த தங்கம்மாவுக்கு வயிறு எரிந்தது.

அவளுடைய மகள் இருந்திருக்க வேண்டிய இடம்! அவள் அணிந்திருக்க வேண்டிய நகைகள்.

இத்தனையையும் அவள் மகள் விள்ளாமல், விரியாமல் வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்திருப்பாளே!

வெறி பிடித்தவள் போல, ஒளிந்து மறைந்து அந்தக் குடும்பத்தைப் பார்த்துக் கொண்டே இருந்த தங்கம்மாவுக்கு எப்படியும் மருமகனிடம் பணம் பிடுங்கியே தீர வேண்டும் என்ற எண்ணம் தோன்றி வேகமாக வளர்ந்தது பூதாகரமாக..

அதன் விளைவுதான் இந்தக் கடத்தலும் பணம் கேட்டதும்.

ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து கூலிக்கு ஆள் பிடித்து, தீபாவின் முதுகில் கத்தியை வைத்து மிரட்டியே சாருமதியையும், டிரைவரையும் செயல் இழக்கச் செய்து கடத்திக் கொண்டு வந்தது வரை எல்லாம் சரியாகத்தான் நடந்தது.

அப்புறமாக குற்றத்தைத் திசை திருப்பி விடுவதாக எண்ணி பயமுறுத்திப் பணம் வாங்கித் தராவிட்டால் குழந்தையைக் கொன்று விடுவோம் என்று மிரட்டி

சாருமதியையே பேசச் சொன்னதுதான் தங்கம்மா விஷயத்தில் தப்பாகிப் போயிற்று.

பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த தீபா, ''ஃபோன்ல பேசுன்னு அம்மாட்ட சொல்லிட்டு, என்னை இங்கே அடிச்சாங்க பாட்டி'' என்று குறை சொல்ல, அவளை அள்ளி அணைத்துக் கொண்ட அவளுடைய பாட்டிக்குக் கண்ணீர் வந்தது.

''அப்படியாடா கண்ணு? அவர்களை நாம் திருப்பி அடித்து விடலாம்'' என்று ஆறுதல் கூறினாள்.

''அடிச்சாங்களே!'' என்றாள் குழந்தை குதூகலத்துடன், ''ஃபோன்ல பேசிட்டு, அம்மா என்னைக் கட்டிப் பிடிச்சிட்டு உக்காந்திருந்தாங்களா? அப்போ, போலீஸ் அங்கிள் வந்து அந்த மூணு குண்டு அங்கிளையும், நல்லா அடிச்சிட்டாங்க, பாட்டீ'' என்றுரைத்து சிரித்தாள்.

''சாருமதி சாமர்த்தியமாக, டெலிஃபோன் எண்களைத் தெரிவித்ததையும், அதை உடனே நித்யா கண்டு பிடித்ததையும், தாமோதரன் அவ்வளவு புகழ்கிறார், மதுரம். அழகு, புத்திசாலித்தனம் இரண்டும் நிறைந்திருக்கும் இந்த மாதிரி பொருத்தமான ஜோடி உலக அதிசயம் என்றார். மதுரா, உன் மருமகளின் சாமர்த்தியத்தினால் தான் உன் பேத்தி பிழைத்தாள். அதற்கு, ஏதாவது பரிசு கொடுக்க வேண்டாமா?'' என்று விசுவநாதன் வினவினார்.

கணவன் மனது புரிந்தவளாக, ''இதோ, தயாராக வைத்திருக்கிறேனே'' என்று வெல்வெட் பெட்டியிலிருந்த வைர மாலையை எடுத்தாள், மதுரம்.

''இதெல்லாம் எனக்கு வேண்டாம், அத்தை'' என்று சாருமதி பின்னடைய முயன்றாள்.

அவளைப் பிடித்து நிறுத்தி, ''அண்ணீ, நீங்கள் என்னை மன்னித்தது நிஜம் என்றால், இதை மறுக்கக் கூடாது'' என்று அனுபமா கூறவும், அதற்கு மேல் சாருமதியால் தடுக்க முடியாது போயிற்று.

ஆனால், கழுத்தில் வைர மாலை அணிந்தபின், ''இப்போது பாருங்கள்'' என்று அனுபமா, அவளைக் கண்ணாடி முன் கொண்டு போய்விட, தன் பிம்பத்தைக் காண்கையில், அவளுக்கே உள்ளூர மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

மாலையை, மருமகளுக்கு அணிவித்து அழகு பார்த்துவிட்டு திருஷ்டி கழித்தாள், மதுரம்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, விசுவநாதன் கை மறைவில் ஒரு கொட்டாவி விட, வீட்டு மாநாடு கலையலாயிற்று.

வைர மாலையைக் கழற்றி, ''இதன் பாதுகாப்புக்காக வேணும் உங்களிடமே இருக்கட்டும், அத்தை'' என்று மாமியாரின் கையில் கொடுத்து, ''தீபா, வாடா, உடம்பு கழுவி விட்டுத் தூங்க வேண்டும். நாளைக்குப் பள்ளிக்கூடம் போக வேண்டுமே. பள்ளியில் ஊஞ்சல், மேரிகோரவுண்ட் எல்லாம் விளையாடலாமே...'' என்று பெண்ணை அழைத்துச் சென்றாள்.

படியேறிச் சென்று அறைக்குள் மறையும் வரை, அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த மகனின் முதுகில் லேசாகத் தட்டிவிட்டுப் போனார், விசுவநாதன்.

உடம்பு கழுவிவிட்டுக் குளியலறையிலிருந்து வந்த சாருமதி அறையினுள் நின்ற நித்யானந்தனைக் கண்டதும் திகைத்துப் போனாள்.

''இ... இங்கே எதற்காக வந்தீர்கள்?'' என்று கேட்ட போது, அவளதுகுரல் லேசாக நடுங்கியது.

''என் மனைவியிடம் சற்றுப் பேச வந்தேன்.'' என்றான், அவன் சிறு புன்னகையோடு.

விசித்திரமான விதமாக, இந்த மனைவி என்ற வார்த்தை மனதைக் கடினப்படுத்திவிட, ''அவ்வளவு தானே? கணவன் மனைவி என்றதும் கட்டிலில் உருண்டு விட வேண்டும் என்று எதிர்பார்க்காமல் இருந்தால் சரி'' என்றாள்ஏளனமாக.

சில வினாடி பேசாதிருந்துவிட்டு ''அன்றையத் தவறை மறப்பது, மிகவும் கடினம் இல்லையா?'' என்று கேட்டான் அவன்.

தப்புக்கும் தவறுக்கும் வேறுபாடு தெரியாமல் சொல்லுகிறானா? அல்லது, தெரிந்து வேண்டுமென்றே குற்றமில்லை என்று காட்ட முயற்சிக்கிறானா?

கொஞ்ச காலமாகக் கணவனிடம் உள்ள கோபம் பெரிதும் குறைந்து போயிருந்த போதும், அந்த முதல் நாள் பேச்சு அவளுள், தீயாய்க் கனன்று கொண்டேதான் இருந்தது. என்ன முயன்றாலும் அதற்கு மன்னிப்பே கிடையாதே!

எனவே, ''மான ரோஷம் உள்ளவர்களுக்கு, அன்றையத் தப்பான பேச்சை மறப்பது முடியாதுதான்.'' என்று வேண்டுமென்றே 'தப்பு' என்ற வார்த்தையைப் பயன்படுத்திப் பதில் சொன்னாள், சாருமதி.

ஒப்புதலாய்த் தலையசைத்து ''ஆமாம். மிகவும் பெரிய தப்புதான்'' என்று நித்யானந்தன் தொடர்ந்து தணிந்தே போகவும், அவளுக்கே ஒரு மாதிரியாகிவிட்டது.

ஆனால் அதையடுத்து, ''அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.'' என்று அவன் மேலும் கூறவும் சாருமதிக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது.

சீற்றத்துடன் நிமிர்ந்து ''என்ன காரணம்? நான் அப்படிப்பட்டவள்தான் என்பதா?'' என்று கேட்டாள்.

''ஐயோ, இல்லை கண்மணி. அப்படியில்லை.'' என்று முதல் முதலாக ஓர் அன்புக் கணவனாய் அவளை அழைத்துப் பேசவும், அவள் மீண்டும் திகைத்தாள்.

இந்த மாதிரி அன்பு வார்த்தைகளை அவள் சிறுவயதில் கூட அறிந்ததில்லையே!

கூடவே, அந்த ஒரு 'கண்மணி'யில் தளர்கிறோமோ, என்கிற பயமும் உண்டாயிற்று.

நித்யானந்தன் கூட இன்றைக்கு, அவனுடைய மகளைக் காப்பாற்றியதற்காக மனம் உருகிப் போயிருக்கலாம். நாளைக்கே, மறுபடி மாற மாட்டான் என்று என்ன நிச்சயம்? இன்றைக்கே கூட ∴போனில் அவள் பணம் கேட்டு மிரட்டியபோது என்னென்ன நினைத்தானோ?

எண்ணியதை, அவனிடம் நேரடியாகவே கேட்டாள். ''என்ன இல்லை? இன்று நான் ∴போன் செய்தபோது கூட, 'இவள் மோசக்காரி, சமயம் பார்த்துப் பணம் சுருட்டவே, நல்லவள் மாதிரி நடித்து, இவ்வளவு நாள் ஏமாற்றி வந்திருக்கிறாள்' என்றுதான் பேசியிருப்பீர்கள்'' என்றாள் அசட்டையாக.

''இந்த வார்த்தை மூலம், நீ எங்களுக்கு அநியாயம் செய்கிறாய், சாருமதி. நீ ∴போன் செய்தபோது வீட்டிலிருந்த நாங்கள் மூவருமாகட்டும், பின்னர், நான் தொடர்பு கொண்டு சொன்னபோது விஷயத்தை அறிந்த அப்பாவாகட்டும், யாருமே உன்னைத் தவறாக எண்ணவே இல்லை. நீ, இப்படிப் பேச வாய்ப்பில்லையே, என்றுதான் குழம்பினோம். அப்படி நினைத்ததால்தான், இதில் வேறு என்ன இருக்கிறது என்று ஆராயத் தோன்றியது. அப்படி ஆராயாத பட்சத்தில் உன் குறிப்புகளை, எப்படிக் கண்டுபிடித்திருக்க முடியும், சொல்லு?'' என்று நித்யா கேட்டபோது, சாருமதியால் பதில் சொல்ல முடியவில்லை.

உள்ளூர அவளுக்கு மிகுந்த ஆறுதல்தான். 'தீபாவை வெட்டிவிடுவோம், கொன்றுவிடுவோம்' என்று அந்தக் கடத்தல்காரர்களின் மிரட்டலுக்குப் பணிந்து டெலி∴போனில் பேசியபோது, அவளுக்கு இந்தக் கவலைதான். மற்றவர்கள் இல்லாவிட்டாலும் நித்யா நிச்சயமாகத் தன்னைத் தவறாகத்தானே எண்ணுவான்? அவளைப் பற்றித் தப்பாக மதிக்க அவனுக்குக் காரணம் தேவையில்லையே!

குறிப்புக் கொடுத்த போதுகூட, அவளுக்கு இந்த அச்சம் இருந்தது. அவனது தவறான அபிப்பிராயத்தினாலேயே அவளது குறிப்புகள் பலனற்றுப் போய்விடுமோ என்ற பயம்.

அந்தக் குறிப்புகளை அவன் கண்டு கொண்டது அவளை, அவன் தவறாக நினைக்கவில்லை என்பதற்கு அத்தாட்சிதானே?

சாருமதி பேசாமல் நிற்கவும் அவளது கட்டிலில் ஓர் ஓரமாக அமர்ந்து, ''நீயும் உட்கார், சாருமதி, அன்றையப் பேச்சின் காரணத்தைச் சொல்லுகிறேன்'' என்று அழைத்தான் நித்யானந்தன்.

அவள் அசையாமல் நிற்கவும், ''நான் ஒன்றும் இந்தக் கட்டிலில் என்னோடு உறவாடுவதற்காக இப்

போது உன்னை அழைக்கவில்லை, சாருமதி. நாம் இருவரும் வெறும் பேச்சால் மட்டுமின்றி, 'பாடி லாங்வேஜ்' என்பார்களே, அதுபோல முகம் அங்க அசைவுகளைக் கொண்டும், உண்மை உணர்ந்து, புரிந்து கொள்ளலாமே என்பதற்காகத்தான், இப்படி சமநிலையில் அருகே உட்காரச் சொல்லுகிறேன். வேறு எண்ணம் எதுவும் இப்போதைக்கு என் மனதில் இல்லை, பயப்படாமல் நம்பி உட்கார்'' என்றான் அவன்.

''எனக்கு ஒன்றும் பயமில்லை'' என்று அவள் விறைப்பாக அமரவும், லேசாக முறுவலித்தவன் அவள் கேள்வியாய் நோக்க, 'ஒன்றுமில்லை' என்பது போலத் தலையசைத்து விட்டு அமைதியானான்.

சற்று நேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு, ''எதையோ சொல்ல வேண்டும் என்று வந்துவிட்டுச் சும்மாவே இருந்தால் எப்படி?'' என்று சாருமதி ஆட்சேபித்தாள்.

ஜன்னல் வழியே வெளியே வெறித்துக் கொண்டிருந்தவன் திடுக்கிட்டவன் போல விழி திருப்பி அவளைப் பார்த்தான்.

ஒரு பெருமூச்சு விட்டு, ''ஆமாம். சொல்லத்தான் வேண்டும். சொன்னால்தான் உன்னால் புரிந்து கொள்ள முடியும். அதற்காகவே சொல்லியே தீர வேண்டும். வெட்கம், மானம் எதுவும் பாராமல் சாருமதி, நம் திருமணம் பற்றி வைத்தியலிங்கம், உன்னிடம் என்ன சொன்னாரோ, எனக்குத் தெரியவில்லை. ஆனால் அம்மாவும், அனுவும் சென்று, பார்த்து என் வருங்கால மனைவி என்று நிச்சயித்த பெண் நீ அல்ல'' என்று போட்டு உடைத்தான் அவன்.

''என்னது?!'' என்று அதிர்ந்தாள் சாருமதி.

கூடவே, இருக்கக் கூடும் என்றது, அவளது மனது.

அன்றிருந்த சூழ்நிலையில் யோசிக்கத் தோன்றாமல் ஒத்துக் கொண்ட போதும், இன்றைக்கு வைத்தியலிங்கத்தின் பேச்சில், ஏகப்பட்ட ஓட்டைகள் இருப்பதாகத் தோன்றியது.

ஒரே வாரத்தில் திருமணம் நிச்சயமாகி நடந்தது. இடைப்பட்ட காலத்தில் நித்யானந்தனின் வீட்டில் இருந்து யாருமே, அவளை வந்து பாராதது, மாப்பிள்ளை வீட்டார் அவளை எங்கோ பார்த்துப் பிடித்துத் திருமணம் செய்வதாக அவர் கூறியது, முழுப் பொய்! அப்படித்தான் இருக்க வேண்டும். மற்றபடி, எல்லாருமே வெறுத்து ஒதுக்குவார்களா?

அவளும் நித்யானந்தனைப் பார்க்கவில்லைதான்... ஆனால், அவள்தான் அவனது புகைப்படத்தைப் பார்த்தே மயங்கிவிட்டாளே! அது வேறு, மூளையை மழுங்கடித்து, கேட்க வேண்டிய கேள்விகளை நினைக்கக் கூட இல்லாமல் தூங்க வைத்துவிட்டது.

திடுமென, இன்னொரு எண்ணம் தாக்க, சாருமதி நிலை கலங்கிப் போனாள்.

நித்யாவுக்கு, அந்தப் பெண்ணை மிகவும் பிடித்துப் போய், அதனால்தான் அவளிடம் அவ்வளவு கடுமையாக நடந்தானோ?

''அந்தப் பெண்ணை, உங்களுக்கு அவ்வளவு பிடித்திருந்தால் அப்புறம் என் கழுத்தில் ஏன் தாலியைக் கட்டினீர்கள்? என் முகத்தைப் பார்த்துவிட்டுத் தானே கட்டினீர்கள்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

''சாருமதி, பெண்ணைப் பார்த்தது அம்மாவும், அனுவும் மட்டும்தான், என்றேனே? எனக்கு நல்லது செய்வதாக எண்ணி அவர்கள் இருவரும்தான் குளறுபடி செய்துவிட்டார்கள் என்று எண்ணித்தான், அவர்கள் செய்த தப்புக்கு, அந்த நேரத்தில் உன்னை மறுப்பது நியாயம் இல்லை என்று கருதித்தான், அப்போது, நான் மறுக்காமல் தாலியைக் கட்டியது. வீட்டுக்கு வந்து விசாரித்த பிறகுதான், பெண் மாறியதே, எனக்குத் தெரிய வந்தது...'' என்றவன், சாருமதியின் முகம் வாடுவது கண்டு, ''இந்தக் 'குளறுபடி' உன்னைக் குறைத்துக் காட்டுவது அல்லம்மா... ஏனெனில் அந்தப் பெண்... மறுமணம் செய்து கொள்வதற்காக, நான் சொன்ன நிபந்தனைகளுக்கு ஒத்தவளாக இருந்த அந்தப் பெண், என் வயதை ஒட்டியவளாகவும், முடிந்தவரை அழகு இல்லாதவளாகவும் இருந்திருக்க வேண்டும்'' என்று விளக்கினான்.

''என்னது?!'' என்றாள் அவள் மீண்டும் அதிர்ந்து.

''அந்த மாதிரி நிபந்தனைகளை ஏன் வைத்தேன் என்பதுதானே, உன் அடுத்த கேள்வி? சொல்லுகிறேன். சொல்லிவிட வேண்டும் என்பதற்காகத் தானே வந்திருக்கிறேன்.'' என்று வறண்ட குரலில் அவன் உரைத்த போது, வேண்டாம் என்று சொல்லி விடலாமா என்று கூடச் சாருமதிக்குத் தோன்றியது.

ஆனால், உண்மை தெரிய வேண்டுமே, வேறு யாரும் அவன் விஷயம் பேசுவதாகவும் இல்லை.

சாருமதி யோசித்துக் கொண்டிருக்கும்போதே, நித்யானந்தன் சொல்லத் தொடங்கி விட்டான்.

''இதைப் பற்றி அம்மாவிடம் கூட, நான் எல்லாம் சொன்னதில்லை, சாருமதி. ஆனால், உன்னிடம், உன்னிடம் கூட இன்னொரு தரம் இது பற்றிப் பேசுவேன் என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால் இது என் அவமானம்!'' என்று தொடங்கி, தன் முதல் மனைவி பற்றிக் கூறினான்.

பிரியாவின் அழகு, இளமை, அவளிடம் சம்மதம் கேட்டு மணந்தது. திருமணத்தின் பின் அவள் நடந்து கொண்ட முறை, அதன் காரணம் என்று என்னவென்று புரியாமல் திகைத்தது. கடைசியாகப் பிரியாவுடைய சித்தப்பாவிடம் போய்க் கேட்டதுவரை, அவன் பேச்சு, எங்கும் நிற்கவேயில்லை.

காவல் நிலையத்துக்குச் செல்லப் போவதாக அவன் உறுதியாகக் கூறியபிறகே, அவர் உண்மையைச் சொன்னார் என்பதில் நிறுத்தியவன், ஒரு நீண்ட பெருமூச்சின் பின் மீண்டும் தொடர்ந்தான்.

''இப்போது டாக்டர் சுகவனம் சொன்னதை, அப்படியே அவர் வாய்மொழியாகவே, சொல்லப் போகிறேன், சாரு, நானாக நினைத்துப் பார்க்கக் கூட விரும்பாத போதும், இடியின் எதிரொலி போல, அவ்வப்போது என் காதில் ஒலித்து வந்திருப்பது, இது கேள்.''

''இது, கொஞ்சம் பிஞ்சிலே பழுத்த கேஸ், மாப்பிள்ளை. பிரியாவை, அந்தப் பையனுக்கே, கட்டிக் கொடுத்திருக்கலாம். அல்லது சின்ன வயதுதானே என்று, சில ஆண்டுகள் பொறுத்தேனும் பார்த்திருக்கலாம்! திருமண விஷயமாக மகனுக்குப் புத்தி சொல்லும்படி, அண்ணி என்னிடம் வந்து நின்றபோது, நான் இப்படித் தான் சொன்னேன். ஆனால், அண்ணி கேட்கவில்லை. அத்தோடு மகளுக்கு பெரிய இடம் கிடைத்ததில் எனக்கு வயிற்றெரிச்சல் என்று வாய்க்கு வந்தபடிப் பேசவும்,

நான் ஒதுங்கிக் கொண்டுவிட்டேன். சின்னப் பெண் தானே, திருமணம் ஆகிவிட்டால் இது மறந்து சரியாகி விடும் என்ற நம்பிக்கை வேறு. ஆனால் நடந்தது அடியோடு வேறு. அண்ணி, பிரியாவை அடிக்கடி இங்கே வரவிட்டதே தப்பு. குழந்தை பிறந்த பிறகு, இவ்வளவு நாள் தங்க விட்டதும், கண்டு கொள்ளாமல் கண்ணை மூடிக் கொண்டதும் பெருந்தவறு. அப்போதும் முதலிலேயே என்னிடம் வந்திருந்தால், அண்ணிக்குச் சும்மாவே, எங்கள் குடும்பத்தை அவ்வளவாகப் பிடிக் காது. திருமணத்தின் போது இந்தப் பேச்சு வேறு நடந்ததால், சொல்லிக் காட்டுவேனோ என்று, கவுரவம் பார்த்துக் கொண்டு, ஓர் அரைகுறை மருத்துவச்சியிடம் போயிருக்கிறார்கள். இரண்டே மாதம்தானே, எளிதாகச் செய்திருக்கலாம். ஆனால் அந்த அரைகுறை, சரியாகப் பண்ணாமல் பெரிய உயிருக்கும் உலை வைத்துவிட் டாள்! கிட்டிமுட்டி, ஒன்றும் முடியாது என்கிற நிலையில் தான் என்னிடம் கூட்டி வந்தார்கள். அந்த நேரத்தில் செய்வதற்கு ஒன்றுமேயில்லை. இதுதான் அவளுடைய சித்தப்பா, என்னிடம் சொன்ன விவரம். அக்கம் பக்கம் விசாரித்து நான் தெளிவுபடுத்திக் கொண்டதும்.''

சற்று நேரம், மூச்சு விடுவது கூடச் சாருமதிக்குச் சிரமமாகிப் போயிற்று.

என்ன அநியாயம்? அவனுக்கு எப்படி இருந்திருக் கும்?

தீபாவைப் போலவே, அவள் தந்தையையும் வயிற் றோடு அணைத்து, ஆறுதல் அளிக்க வேண்டும்போல, அவள் மனம் துடித்தது. தயக்கமாகவும் இருக்கவே, கையை மட்டும் நீட்டி கணவன் கைமீது வைத்து, லேசாக அழுத்தினாள்.

அழுத்திய கையை இறுகப் பற்றிக் கொண்டு, ''எனக்கு, மிகவும் அவமானமாக இருந்தது. சாருமதி. 'அம்மா, அம்மா' என்று தாய்வீடு சென்ற போதெல்லாம், பிரியா அவனோடு சுற்றியிருக்கிறாள். பிறகு, வந்து என்னோடு... சே...! தாய்க்கும் மகளுக்கும் ஒப்பந்தமே அதுவாகத்தான் இருந்திருக்கும் போல என்னை மணந்து கொண்டு கிடைக்கிற பணம், நகைகளைத் தாயாரிடம் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். பதிலுக்கு, மகள் அங்கே வரும்போது என்ன கூத்தடித்தாலும், தாய் கண்டு கொள்ள மாட்டாள்!

''அருவருப்பு, கூசல், குன்றலை விட அதிகம் பாதித்தது. தீபா என் குழந்தை இல்லையோ, என்ற சந்தேகம். உனக்குக் கூடக் குழந்தையை யாரும், ஆசை யாகக் கொஞ்சக் காணாமே என்று, ஆச்சரியமாக இருந்தி ருக்கும். அப்புறம், அவள் சாயலைப் பற்றி, இவ்வளவு சந்தோஷமா என்று கூடத் தோன்றியிருக்கும்! அந்தச் சாயல் ஒற்றுமையால், அவள், இந்தக் குடும்பத்து வாரிசு என்று ஆகிறதல்லவா?''

இந்த விளக்கத்தைச் சாருமதியால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

முதல்நாள், ஒட்டிய உடம்பும், பெரிய கண்களு மாக, அண்ணாந்து பார்த்த தீபாவின் தோற்றம், இன்று கூட அவளுக்கு வேதனையைத் தந்தது.

எனவே, ''அதற்காக, ஒரு சின்னக் குழந்தையை ஒதுக்குவீர்களா? அது, என்ன பாவம் பண்ணிற்று?'' என்று கேட்டாள்.

''அப்படி ஒதுக்கும் எண்ணமே, யாருக்கும் இல் லை.'' என்றான் நித்யானந்தன். ''சம்மா, யாரோ என்

றால் பரவாயில்லை. துரோகத்தில் வந்ததோ என்று... மனதில் அந்தச் சந்தேகத்தை வைத்துக் கொண்டு, குழந்தை முகத்தைப் பார்த்துக் கொஞ்ச, இங்கே யாரா லும் முடியவில்லை. சரி, வேலையாட்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று எண்ணினோம்... அது தப்பு என்று, நீ வந்த பிறகுதான் தெளிவாயிற்று.''

இப்போது அவளாலும் புரிந்து கொள்ள முடிந்தது.

இவ்வளவு பெரிய துரோகத்தை அனுபவித்தவன், அடுத்த மனைவியுடன் ஆள் மாறாட்டம் செய்தவள் என்று அறிந்ததும், எப்படி உணர்ந்திருப்பான்? அவன் எப்படி நடந்து கொண்டிருந்த போதும், அதில் என்ன தப்பு சொல்ல முடியும்? அவளை, அந்த வீட்டில் இருக்க விட்டதே, அதிசயம்தான்.

வியப்புடன் நோக்கி, ''ஆள் மாறாட்டத்தைக் கண்டு பிடித்ததுமே அடித்து விரட்டாமல், எப்படிச் சும்மா இருந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''முதல் காரணம், நாலு பேர் பார்க்கத் தாலி கட்டிவிட்டு, உடனே எப்படி வெளியேற்றுவது, என்று தான்'' என்று அசடு வழிய ஒத்துக் கொண்டான், நித்யானந்தன். ''அப்புறம்...''

''அப்புறம் போகப் போகத் தீபாவுக்காக இருந்து விட்டுப் போகட்டுமே, என்று தோன்றிவிட்டது போல?'' என்று விவரம் கேட்டவளை, உதட்டோரம் சிறு முறுவ லோடு நோக்கினான், அவன்.

தன்னை மீறி முகம் சிவக்க, ''என்ன? என்றாள், அவள்.

''இன்றைக்கு அங்கே மார்போடு அணைந்திருந்த தீபாவோடு நீ என் கைக்குள் ஓடி வந்திராவிட்டால்

இதைச் சொல்ல, எனக்குத் தைரியம் வந்திருக்காது... நம் திருமணத்தன்று, அந்தப் பொல்லாத இரவில், எந்த நிலையிலும் உன்னால் என்னை ஒன்றும் செய்ய முடி யாது என்று அணைத்துக் [illegible]னேனே, அப்படியே மின்சாரம் பாய்ந்த மாதிரி ஆகிவிட்டது. அதுதான், அவசரமாக இழுத்துப் போய் வெளியே தள்ளிக் கதவைச் சாத்திக் கொண்டேன். ஆனால், அடிக்கடி எங்காவது இருந்து உன்னைக் கவனிப்பதை நிறுத்த முடிய வில்லை.''

''அன்று உன் சுரிதார் கமீஸ் கிழிந்தபோது எப்படி இருந்தது தெரியுமா? அம்மாவிடம், புதிது வாங்கிக் கொடுக்கச் சொன்னேன். வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள, எனக்கு விருப்பமில்லைதான். ஆனால், என் கவனம் உன்னிடமேதான் இருந்தது. வேலையாட்களின் மரியாதை உனக்குக் கிடைக்கத் தொடங்கியது, எப்படி என்று நினைக்கிறாய்?''

''ஓஹோ!'' என்றவள், ஒன்று தோன்ற, ''நான் அழுதது, நீ... நீங்கள்தான் அனுவிடம் சொல்லியிருக்க வேண்டும். எப்படித் தெரியும்? அன்று போல...'' என்று தொடங்கிவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''அன்று தீபா அறைக்குள் வந்தது போல, உன் அறைக்குள் வந்தேனோ, என்று கேட்கிறாயா? அன்றே வெளியே போக மனம் வரவில்லை. உன் அறைக்குள் வேறு வந்தால், அவ்வளவுதான்!'' என்றுரைத்து அவள் முகம் சிவப்பதை முறுவலோடு கவனித்துவிட்டு, ''அங்கே நின்றேன்'' என்றான்.

எவ்வளவு நேரம் நின்றிருக்கிறான், பாவம் என்று எண்ணியபடி, ''தீபா அறை தவிர, எனக்கு எதுவுமே

தெரியாதே. அன்றுகூட குழந்தை அழுததால் பார்க்க வந்தீர்கள் என்றுதான் நினைத்தேன்'' என்றாள் சாருமதி.

''அப்படி நினைப்பாய் என்றுதான் தைரியமாக வந்தேன். உனக்காக, நான் விரலசைப்பதாக அறிந்தால் கூட, நீ தலை மேல் ஏறிவிடுவாயோ என்ற பயம். ஒரு புயலில் சிக்கிப் படாதபாடு பட்டு மீண்ட பயம். இப் போது வீசுவது தென்றல், சுகம் தருவது என்பதே முதலில் புரியாது போயிற்று.''

இப்போது புரிந்து விட்டது என்று, அவள் சொல்லா மல் சொன்னவிதம், இதம் தர, சாருமதி மெல்ல முறுவ லித்தாள்.

அவள் முகத்தையே பார்த்தபடி, ''அனு, உன்னிடம் ஒரு சிபாரிசு செய்தாளாம். நீயும் ஏதோ பதில் சொன்னா யாம்...'' என்றான், அவன்.

''அப்போது, உங்களைப் பற்றி எனக்குத் தெரி யாது'' என்றாள், அவள்.

''இப்போது?''

''...'' ஒன்றும் சொல்லாமல் அவள் பேசாதிருக்க, ''சொல்லும்மா, இப்போது?'' என்றும், மீண்டும் கேட் டான், நித்யானந்தன்.

கடைக் கண்ணால் கணவனை, நோக்கினாள் சாருமதி.

''தன் அண்ணன், தொழிலில் புலி என்கிறாள், உங்கள் தங்கை. இதைக் கூட மனைவியின் முகத்திலி ருந்து தெரிந்துகொள்ள முடியவில்லை என்றால்...''

அதற்கு மேல் அவன் அவளைப் பேசவிடவில்லை.

★ ★ ★ ★ ★